www.padippakam.com

விலை ரூ.7-

# சிந்தனையாளன்

திருவள்ளுவராண்டு 2032 பெரியாராண்டு 123 நவம்பர் 2001

## ஏழை நாடுகளைச் சுரண்டிட, உலக வணிக அமைப்பின் மாநாடு

(சிங்கப்பூர் 13-10-2001)



- உள்ளாட்சித் தேர்தல்: 'வரி செலுத்துவோர்' போராடுங்கள்!
- 'பொடோ' சட்டம் ஒழிக!
- பெரியார் இன்றும் தேவைப்படுகிறார்
- அமெரிக்கா—அல்-கொய்தா பயங்கரவாதம் அழிக்கப்பட வழிதான் என்ன?
- இந்தியாவை விற்றுவிடுவார்கள்!

படிப்பகம்

www.padippakam.com

உள்ளே...

## தலையங்கம்


* உள்ளாட்சித்தேர்தல்: 'வரி செலுத்துவோர்' போராடுங்கள் 1


## கட்டுரைகள்


* 'பொடோ' சட்டம் ஒழிக! - வே. ஆனைமுத்து 4
* என் கொள்கை வழி காட்டியை இழந்தேன்! -வே. ஆனைமுத்து 6
* பெரியார் இன்றும் தேவைப்படுகிறார் -து.மூர்த்தி 7
* இராமாயணம் -ஈ.வெ. இராமசாமி 15
* அமெரிக்கா - அல்-கொய்தா' பயங்கரவாதம்' அழிக்கப்பட வழிதான் என்ன? - வே.ஆனைமுத்து 17
* இந்தியாவை விற்று விடுவார்கள்! - வே.ஆனைமுத்து 21
* அய்.அய்.டி. - இராமியா 24
* புத்தகங்கள் குழந்தைகளைக் கிழித்து விடுகின்றன -இரா. இரத்தினகிரி 25
* அறிவியல் தமிழின் தேவை- மருத்துவர் சு.நரேந்திரன் 27
* பகாசுரப் பயங்கரவாதம் - ஓலைப்பட்டி கந்தையா 29


## கவிதை


* தமிழனே இது கேளாய்! -தமிழேந்தி



**சிந்தனையாளன்**

(தமிழ் மாத இதழ்)

| | |
|---|---|
| தனி இதழ் | ரூ.7 |
| ஓர் ஆண்டுக் கட்டணம் | ரூ.80 |
| வாழ்நாள் கட்டணம் | ரூ.1000 |

* வாழ்நாள் கட்டணமாகப் பகுதித் தொகை செலுத்தியவர்கள், மீதித் தொகையை உடனே அனுப்புங்கள்.

பணம், டி.டி. அனுப்பிட

'சிந்தனையாளன்'

SINTHANAIYALAN

19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம் சென்னை 5.

தொலைபேசி: 852 28 62.

இன்றே சந்தா செலுத்துங்கள்!

ஒவ்வொருவரும் உறுப்பினராகுங்கள்!


## மைசூரில் அப்பாவி தமிழர்கள் சிறையில் இருந்து விடுதலை

மைசூர் தடா வழக்கில் இருந்து அப்பாவித் தமிழர்களை சிறையிலிருந்து மீட்டு நீதியை நிலை நிறுத்தப் போராடிய வழக்கறிஞர்களுக்கும், மனித உரிமை அமைப்பு களுக்கும் நன்றி தெரிவிக்கும் கூட்டம், மக்கள் உரிமைக் கூட்டமைப்பின் சார்பில் 10.10.2001 அன்று மேட்டூருக்கு அருகில் உள்ள குளத்தூர் கலைமகள் திருமண மண்டபத்தில் மாலை 3 மணிக்கு தா.செ.மணி தலைமையில் நடைபெற்றது.

பாராட்டு பெற்ற வழக்கறிஞர்கள் கே.ஜி. கண்ணபிரான், வேணுகோபால், துவாரகநாத், கங்காதரன், கிருஷ்ணமூர்த்தி, ஆர்.சண்முகம், ஹென்றி டிபேன், என். சந்திரசேகரன், ஜான் வின்சென்ட், கோபால கிருஷ்ண லட்சுமண ராசு ஆகியோராவர்.

- கோ.அருண்மொழி

## புதுச்சேரி மாநில தமிழர் திராவிடர் கழகம் தந்தை பெரியார் 123 வது பிறந்தநாள் விழா கொள்கை விளக்கப் பிரச்சாரம்

புதுச்சேரியில் 17.9.2001 அன்று காலை 9 மணிக்கு தந்தை பெரியார் சிலை அருகில் தந்தை பெரியார் 123வது பிறந்த நாள் விழாவும் கொள்கை விளக்கப் பிரச்சாரமும் சிறப்பாக நடைபெற்றது. தோழர் அ. சையத்காதர் கழக கொடியேற்ற, சொ.கலியபெருமாள் தலைமை தாங்கினார்.

வேன் பிரச்சாரத்தைத் துவக்கி வைத்து தோழர்கள் சு.மன்னர்மன்னன், சு.ம.சுப்பராயன், நா. நந்திவர்மன், இரா.அழகிரி, பு.சங்கரன், சிவ.இளங்கோ, ந.மு. தமிழ்மணி, இராம.சேகர், எஸ்.கந்தவேலு, எஸ்.சுப்பரமணியன், இரா.கந்தசாமி, ச.தட்சணாமூர்த்தி, இரா. மோகன்ராசு ஆகியோர் பேசினார்கள்.

தோழர்கள் மு.பாலகுருசாமி, மு.அ. குப்புசாமி, கோ.இராவணன், மு.பா. நடராசன், ஆ. திராவிட அரசு, அ. இரும்பொறை, பி.ஆர். தியாகராஜன், அ.ஆறுமுகம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இரவு 7 மணிக்கு கதிர்காமம் தாய் தமிழ்ப் பள்ளியில் பிரச்சாரத்தை முடித்து வைத்து தோழர்கள் அதிரடி அழகானந்தம், க.எழிலன், மு.துரை ஆகியோர் உரையாற்றினார்கள்.

இறுதியில் தோழர் இரா. ஆதிநாராயணன் நன்றி கூறலுடன் விழா இனிதே நிறைவுற்றது.

- வாலாசா வல்லவன்

படிப்பகம்

www.padippakam.com

## சமதர்மக் காவலர்கள்



மார்க்சு லெனின் சிங்காரவேலர் பெரியார்

## சமூகநீதிக் காவலர்க



புலே பெரியார் அம்பேத்கர் லோகியா


இந்தியாவில் பொதுவுடைமை மலர மார்க்சிய - பெரியாரிய நெறியில் தேசிய இனவழிப்பட்ட சம உரிமை உடைய சமதர்மக் குடிஅரசுகள் ஒருங்கிணைந்த உண்மையான கூட்டாட்சி அமைய ஆவன செய்தல்

### கொள்கை முழக்கம்

உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்

- மார்க்ஸ்- எங்கெல்ஸ்

ஒடுக்கப்பட்ட தேசிய இன மக்களே ஒன்று சேருங்கள்!

- லெனின்

ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களே ஒன்று சேருங்கள்!

- பெரியார்

ஆசிரியர்

**வே.ஆனைமுத்து**

ஆசிரியர் குழு

வே.ஆனைமுத்து
சங்கமித்ரா
க.முகிலன்
து.தில்லைவனம்
தமிழேந்தி
க.நாகராசன்
வாலாசா வல்லவன்
மங்கலம் அரசன்

இதழ் வடிவமைப்பு:
கோ. அருண்மொழி

சென்னை நவம்பர் 2001

விலை ரூ.7/-



# சிந்தனையாளன்

சுவடி : 24 மாத இதழ் ஏடு:3


# உள்ளாட்சித் தேர்தல்: 'வரி செலுத்துவோர்' போராடுங்கள்!

தமிழகத்திலுள்ள உள்ளாட்சி அமைப்புகள் எல்லாவற்றுக்கும் அக்டோபர் 16, 18 இருநாள்களில் தேர்தல்கள் நடைபெற்றன.

தேர்தலின் போது சாதி, பணம், சாராயம், சோறு, சிற்றுண்டி இவை மேலாதிக்கம் செலுத்தின. இவற்றைத் தராத வேட்பாளர்களோ, பெறாத வாக்காளர்களோ எந்த ஊரிலும் இல்லை. இதற்கும் மேலாக சேலை, இரவிக்கைத் துணி, மூக்குத்தி, குடங்கள், தாம்பாளங்கள் முதலானவையும் வழங்கப்பட்டுள்ளன. ஒரு வாக்காளருக்கு ரூ.50 முதல் ரூ.500 வரை கூடப் பணம் தரப்பட்டிருக்கிறது.

கள்ள வாக்குப்போடுவதில் இங்குள்ள தி.மு.க., அ.தி.மு.க. கட்சியினர் கைதேர்ந்தவர்கள். ஆனால் நேற்று வரையில் அடிதடி, மிரட்டல், வாக்குக் கொட்டைகையைக் கைப்பற்றுதல், வெட்டுதல், கொலை செய்தல் என்பது நடக்காமல் - கள்ள வாக்குகளை இவர்கள் நளினமாகவே பதிவு செய்தார்கள். இந்தத் தேர்தலிலோ பெரும்பாலான மாநகரங்கள், நகரங்கள், ஊராட்சிகளில் கலவரம் நடந்தது. வழக்கம் போல் ஆளுங் கட்சிக்கு நன்றி காட்டும் அதிகார வர்க்கத்தினர் - குறிப்பாகக் காவல் துறையினர், இவற்றைக் கண்டு கொள்ளவே இல்லை.

தி.மு.க. - அ.தி.மு.க. இரண்டு கட்சிகளும், பங்காளிகள் பாகப் பிரிவினையில் பகைமை கொண்டும் பிரிந்து கிடந்தும் உறுமிக் கொண்டும் அடித்துக் கொண்டும் கொலைகளைச் செய்து கொள்ளுவது போல், கடந்த 30 ஆண்டுகளாக நடந்து கொள்ளுகின்றன. இதற்குக் கொள்கை வேறுபாடு அடிப்படை ஏதும் இல்லை. கொள்ளை அடிப்பதை எந்தக் கட்சி தொடர்ந்து செய்வது என்பது மட்டுமே இதற்கு ஒரே அடிப்படையாகும். அதிலும், 1992 சட்டப்படி அய்ந்தாண்டுக்கு ஒருமுறை உள்ளாட்சித் தேர்தல் நடந்தே தீர வேண்டும் என்பது நடப்புக்கு வந்த பிறகு - இந்திய அரசு கணிசமான நிதியை ஊராட்சிகளுக்கு நேரடியாக ஒதுக்கீடு செய்வது வந்த பிறகு, இந்த நிதியில் 5 ஆண்டுகளில் ஊராட்சித் தலைவர்கள் 5 இலட்சம் முதல் 50 இலட்சம் ரூபாய் வரையில் திருடுவதற்கு நல்ல வாய்ப்பு ஏற்பட்டு விட்டது. எனவேதான் என் சாதி - வேறு சாதி; என் கட்சி - உன்கட்சி; நான் - நீ என்று பலரும் இதில் போட்டியிடுகிறார்கள்.

www.padippakam.com



னை மாநகரில்
ற இடங்களில்
கள் வாக்குப்
கவில்லை.
பார்த்துப்
ளிகள் -
சிலரால்
ராண்டித்
க்காரர்களில்
யினரும், அந்தந்த
மூலம் - குடிநீர் வழங்கல்,
பாதுகாத்தல், தெருக்களைத்
வத்தல், தெருக்களுக்கு விளக்குப்
ஊராட்சியிடம் ஒப்படை செய்யப்பட்ட
களைப் பாதுகாத்தல் - இவற்றில் தோப்புத்
ரவுகள் வைத்து வருவாயைப் பெருக்குதல்,
சாலைகளைச் செப்பமாக வைத்தல், பள்ளிகள் -
மருத்துவமனைகள் சரிவர நடக்கச் செய்தல், ஊரக
வேலைவாய்ப்புகளை உண்டாக்குதல், படிப்பகம் -
நூலகம் நடத்துதல்; ஆண்டுக்கு நான்கு முறைகள் ஊர்
அவையைக் கூட்டிப் பேசி ஊருக்கான பணித்
திட்டங்களைத் தீர்மானித்தல் என்கிற வேலைகளைத்
திறம்படச் செய்ய வேண்டும் என்று முயன்றதாகவோ,
செய்ததாகவோ சான்று இல்லை. இவற்றை - இந்த
மக்கள் நலப் பணிகளைச் செய்வது மட்டுமே
உள்ளாட்சிகளுக்கு உள்ள அதிகாரங்கள். இந்த
அதிகாரங்களைக் கொண்டு, ஊர்ப்பணத்தைக்
கொள்ளையடிக்கிற மக்கள் பிரதிநிதிகளையும்,
இவர்களுடன் கூட்டுக் கொள்ளை அடிக்கிற
அதிகாரிகளையும் தெருவில் நிறுத்திக் கேள்வி
கேட்கவும், தவறு செய்தவர்களைக் கையோடு
பிடித்து மரத்தில் கட்டிவைத்துச் சக்கையாக உதைக்க
வேண்டும் என்கிற அளவுக்கு மக்களுக்கு - வெகு
மக்களுக்கு - வரி கொடுப்போருக்கு உணர்ச்சி
களையும் அறிவையும் உண்டாக்குவதையும் தான்
நாம் எல்லோரும் செய்ய வேண்டும். வாக்குப்
போடுவது முதன்மை என்றால் - மக்களால்
தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் சட்டத்தையும் -
கொடுத்த வாக்கையும் காப்பாற்றுவதும்,
கடமைகளைச் செய்வதும் அதைவிட
முதன்மையாகும். அப்படி எதையும் காப்பாற்றாத
கொள்ளைக்காரர்கள் வாக்குக் கேட்க மக்களிடம்
வருவதையே தடுக்கவும் - வெறுக்கவும் நாம்
மக்களுக்குக் கற்றுத்தர வேண்டும். இதை உணர
வல்லவர்களாக எல்லாச் சாதி - எல்லா ஊர்
மக்களையும் ஆக்குவதற்கு எந்தக் கட்சி, எந்த ஊரில்
இன்று வரையில் முயற்சித்தது? ஏன்
முயற்சிக்கவில்லை? உண்மையில் ஊராட்சிகள் தாம்
'அடிப்படைக் குடி அரசுகள்', 'குட்டிக் குடி அரசுகள்'
; மக்களின் அன்றாட வசதிகளை உடனடியாகச்
செய்து தர நல்ல வாய்ப்புப் பெற்றவைகள்.

மேலும் வீட்டு வரி, குடிநீர் வரி, தொழில் வரி,
நூலக வரி இவற்றை மக்களிடம் ஊராட்சிகள்
திரட்டுவதுடன் - இந்த வருவாய் போதாததால் மாநில
அரசு தரும் நிதி, மய்ய அரசு தரும் நிதி இவற்றையும்
பெறுகிற அதிகாரம் இவற்றுக்கு இருக்கின்றன.

தமிழ்நாட்டு மாநில அரசைப் பொறுத்தவரையில், 1977 முதல் 1989 வரையில் ஒரு 13 ஆண்டுகள் உள்ளாட்சிப் பணிகளை நிறைவேற்றாமல் - அன்று ஆண்ட அ.இ.அ.தி.மு.க. கட்சியினரும் - அதிகாரிகளும் உள்ளாட்சிகளைச் சுரண்டித் தின்று நாசப்படுத்தி விட்டனர். 1991 - 1996 இலும் இக்கட்சியின் ஆட்சியில் ஊரகப் பணிகளில் கொள்ளை போனதுதான் அதிகம். 1989 - 91, 1996 - 2001இல் தி.மு.க. ஆட்சியில் சாலைகளைச் செப்பனிடும் பணி ஓரளவு செம்மையாக நடந்தது. ஆனாலும் மாநிலத்துக்குச் சுய ஆட்சி கோருவதாகப் பொய் சொல்லுகிற தி.மு.க., ஊராட்சிகளுக்கு நிதி அளிப்பதில் போதிய அளவு ஒதுக்கீடு செய்யவில்லை. ஒதுக்கீடு செய்ததில் நடக்கும் பணிகளில் இக்கட்சியினர் கொள்ளையடிப்பதும் குறைய வில்லை. ஊராட்சிகளுக்குப் போதிய அதிகாரமும் தரப்படவில்லை. அதேபோல் மய்ய அரசிடம் - உள்ளாட்சிச் சட்டத்திலுள்ள குறைபாடுகளை நீக்க வேண்டும் என்கிற முயற்சியை அ.தி.மு.க. - தி.மு.க. இரண்டு கட்சிகளுமே மேற்கொள்ள வில்லை.

இந்த நிலையில், இப்போது நடைபெற்ற தேர்தலில் - தி.மு.க. - அ.இ.அ.தி.மு.க. கூட்டணிகள், ஊராட்சிகள் தவிர்த்த மற்ற உள்ளாட்சி அமைப்புகளில் ஏறக்குறைய சரி சமமான இடங்களையே பிடித்துள்ளன. சுயேச்சைகள் அதிக அளவில் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

எல்லா வகைகளிலும் சட்டத்தை மீறிய ஆளுங் கட்சி அ.இ.அ.தி.மு.க. - நாட்டுப்புறச் செல்வாக்குள்ள கட்சியான என்பது மாறி, நகர்ப்புறங்களிலும் இப்போது பல இடங்களில் அதிக உள்ளாட்சி அமைப்புகளைக் கைப்பற்றியுள்ளது. நகர்ப்புறங்களில் சென்னை, வேலூர், கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் செல்வாக்குப் பெற்றிருந்த தி.மு.க. இப்போது சரிவுகளைச் சந்தித்திருக்கிறது.

6 மாநகராட்சிகளில் நான்கை அ.தி.மு.க. கூட்டணியும், இரண்டைத் தி.மு.க. கூட்டணியும் கைப்பற்றியுள்ளன. ஆனால் எந்த மாநகராட்சியிலும் மாநகரத் தலைவர் என்கிற மேயராக எவர் வந்துள்ளாரோ அவருடைய கூட்டணிக்கு மிகவும் குறைவான எண்ணிக்கையிலேயே உறுப்பினர்கள் இருக்கிறார்கள். எனவே ஆறு மாநகராட்சிகளிலும், உண்மையில் கட்சிகளின் பேரால் காலித்தனமும் கலவரமும் அடிதடியும் கொலையும் கொள்ளை யடிப்பதில் தகராறும் மட்டுமே வரப் போகிற 5 ஆண்டுகளுக்கும் நடக்கும். இதில் அ.தி.மு.க., தி.மு.க.வுக்குக் களைத்த கட்சி அன்று; அத்துடன் அதிகாரிகள் என்கிற படித்தவர்களும் - காவல் துறையினரும் ஏவல் நாய்களை விடவும் கொள்ளைக் காரனை விடவும் இழிந்தவர்களாகவும்; அறிவும் தன்மானமும் அற்றவர்களாகவுமே கடந்த பல ஆண்டுகளாக இங்கு நடந்து கொள்ளுகின்றனர். இன்றைய ஆட்சியில் இவர்கள் அதைவிடக் கேவலமாக நடக்கிறார்கள்.

தேர்வு செய்யப்பட்டவர்களும் மக்கள் நலனைப்

படிப்பகம்

www.padippakam.com



ப்ற்றிக் கவலைப்படாமல் - கட்சி நலன், கட்சித் தலைவரை மகிழ்வித்தல், அதன் வழியாக மீண்டும் தேர்தலுக்கு நிற்க வழிகோலுதல் என்பதிலேயே கவனம் கொண்டு மாநகராட்சி - நகராட்சி - ஊராட்சி மன்றங்களில் அவரவர் கடமையை ஆற்றத் தவறுகிறார்கள்.

இவர்களுக்கு - வரி கொடுப்போராகவும், வாக்காளர்களாகவும் இருக்கிற மக்கள் நல்ல பாடம் கற்பிக்க முன்வரவேண்டும். அவரவரும் வரிகளைச் சரிவரச் செலுத்த வேண்டும்; தெரு, சாலை, குடிநீர், தெருவிளக்கு முதலான வசதிகளைச் செய்து தரத் தவறிய ஊர்களில் அந்தந்த ஊரிலுள்ள வரி கொடுப்போர் கொதித்தெழுந்து, கட்சி - சாதி- தெரு என்கிற வேறுபாடுகளைத் தூக்கியெறிந்துவிட்டு, மக்களின் பிரதிநிதிகளையும், அதிகாரிகளையும் கண்டு அமைதியாக - முறையாக முதலில் முறையிட வேண்டும். இதற்கு நீதி கிடைக்காவிட்டால், வெகு மக்கள் வெகுண்டெழுந்து, இவர்களைப் பிடித்து நாயை அடிப்பது போல் அடித்துப் புத்தி வரச் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட ஒரு நாள் வராமல் இங்கு மக்கள் நலன் கருதி வர வேண்டிய மாற்றங்கள் ஒரு நாளும் வர மாட்டாது.

இப்படிப்பட்ட கேடான சூழ்நிலைக்குத் தமிழகத்தை ஆளாக்கியதில் திராவிடக் கட்சிகள், தேசியக் கட்சிகள், பொதுவுடைமைக் கட்சிகள், சாதி முகாமைக் கட்சிகள் எல்லோருக்கும் பொறுப்பு உண்டு. பெரியார் கொள்கையினர் - அம்பேத்கர் கொள்கையினர்க்கும் இதில் பொறுப்பு உண்டு.

தமிழ்நாட்டில் என்றுமே இல்லாத தன்மையில், 'தீண்டப்படாதவர்'களாகக் கருதப்படுகிறவர்கள் என்கிற ஒரே காரணத்துக்காக, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஊராட்சித் தலைவராக ஒதுக்கீடு செய்யப்பட்ட சில ஊராட்சிகளில் - தெற்கிலும், வடக்கிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பு வேட்பாளர் எவரும் வேட்பு விண்ணப்பம் தரவே இடம் தரப்படவில்லை.

உசிலம்பட்டி வட்டாரத்திலுள்ள பாப்பாபட்டி, பி.கே. மூக்கய்யா தேவர் என்கிற பெருந் தலைவரின் பிறந்த ஊர். அங்கும் அதை அடுத்த கீரிப்பட்டி, நாட்டார் மங்கலம் ஊராட்சிகளிலும் தாழ்த்தப்பட்டோர் வேட்பு மனு தரவே அனுமதிக்கப்படவில்லை.

இராசபாளையத்தை அடுத்த சிதம்பரபுரத்தில் வாக்குப் போடும் இடம் காளியம்மன் கோவில் வளாகத்தில் இருந்தது. அங்கே வந்து ஆதித் திராவிடர்கள் வாக்குப் போடக்கூடாது என்று தடுக்கப்பட்டனர். பின்னர் மதிய உணவுக் கட்டடத்தை ஒட்டி ஒரு கொட்டகை போட்டு அதில் ஆதித் திராவிடர் வாக்குப் போட்டனர்.

விழுப்புரம் உளுந்தூர்ப்பேட்டை அடுத்த அரசூரில் ஊராட்சித் தலைவர் பதவி ஆதித் திராவிடருக்கு ஒதுக்கப்பட்டது. ஏற்கெனவே தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்ட சக்தி ஆனந்தன் என்கிற பெண்மணி 5 ஆண்டுகளாகப் பணியாற்றவே அனுமதிக்கப்படாமல், கொடுமை செய்யப்பட்டார். இப்போது இவ்வூர் மேல் சாதியினருக்கு அடங்கி நடப்பவர்கள் தேர்தலில் போட்டியிட்டிருக்கிறார்கள்.

1996 இல் மேலவளவில் தல
முருகேசன் தாழ்த்தப்பட்டவர். அ
சிலரும் படுகொலை செய்யப்பட்ட
யாளிகள் தண்டனையளிக்கப்பட்டன
தேர்தலில் மறவர் - மள்ளர் பகை குறை
அமைதியாகத் தேர்தல் நடைபெற்றிருக்கிற

ஆதித் திராவிடருக்கான இடங்களில்
நடைபெற முடியாமல் தடுக்கப்பட்டது பற்றி
அரசோ, உள்ளாட்சித் தேர்தல் ஆணை
தொடர்புள்ள மாவட்ட ஆட்சியரோ, ஆளுங் கட்
எதிர்க்கட்சிகளோ கண்டுகொள்ளவே இல்
ஆனால் பெரியார் - அம்பேத்கர் - காமராசர் - மு
ராமலிங்கத் தேவர் பெயர்களை வைத்து வா
வேட்டை நடத்துவதை எந்தக் கட்சியினரு
நிறுத்தவில்லை. இந்தப் போக்கு கடு
கண்டனத்துக்கு உரியதாகும்.

உண்மையில் இன்றுள்ள அ.இ.அ.தி.மு.க. ஆட்சி - உள்ளாட்சி நிறுவனங்கள் மூலம் தமிழக மக்களுக்கு நன்மை செய்ய நினைத்தால்:

1. கட்சிப் பகைமை உணர்வை அடியோடு விட்டுவிட்டு, சட்டப்படி மாநகராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சிகள் இயங்கிட உடனடியாக ஆவன செய்ய வேண்டும்.

2. உள்ளாட்சி அமைப்புகளில் தேர்வு செய்யப்பட்ட அனைத்து ஊராட்சித் தலைவர்கள், ஒன்றிய வார்டு உறுப்பினர்கள், மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், நகரப் பஞ்சாயத்து வார்டு உறுப்பினர்கள், நகரப் பஞ்சாயத்துத் தலைவர்கள், நகராட்சி மன்ற உறுப்பினர்கள், நகராட்சித் தலைவர்கள், மாநகராட்சி உறுப்பினர்கள், மேயர்கள் ஆகிய அனைவர்க்கும் - அந்தந்த மாவட்டத் தலைநகரில் அரசுச் செலவில் ஒரு பத்து நாள்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.

உள்ளாட்சி அமைப்புகளின் சட்டங்கள், நடைமுறை விதிகள், மக்கள் பேராளர்களின் கடமைகள், அதிகாரிகளின் கடமைகள், வருவாய் வழிகள், செலவினங்களுக்கான நெறிமுறைகள், மக்களுக்குச் செய்ய வேண்டிய பணிகள் இவற்றைத் துல்லியமாக இவர்கள் அனைவர்க்கும் எடுத்துக்கூறிப் பயிற்றுவிக்க வேண்டும். இது மிக மிகத் தேவை.

காமராசர் அரசுச் செலவில் ஒரு தடவை இத்தகைய பயிற்சியை அளித்தார் என்பதுநினைவு கூரத்தக்கது.

3. தமிழ்நாட்டு அரசு நிதி ஒதுக்கீடு 20 விழுக்காடு என்பது 50% அளவுக்கு உயர்த்தப்பட வேண்டும்.

4. இந்திய அரசுக்கு - 1992 ஆம் ஆண்டைய உள்ளாட்சித் தேர்தல், மற்றும் அமைப்புகள் பற்றிய சட்டங்களில் உரிய திருத்தங்கள் கொண்டு வரத் தமிழக அரசு வற்புறுத்தல் தர வேண்டும்.

இவற்றைச் செய்யாமல், பங்காளிச் சண்டைக்கே இடங் கொடுத்துக் கொண்டிருந்தால்- திராவிடக் கட்சிகள் இரண்டும் தமிழக மக்களின் வாழ்வில் நலிவைத்தான் சேர்க்க முடியும். இவர்கள் இப்படித்தான். தொடர்ந்து இருப்பார்கள் என்றால், ஊர் தோறும் 'வரி செலுத்துவோர் பேரவை' அமைத்து, இவர்களை அம்பலப்படுத்தி இவர்களின் ஆட்சிகளை எதிர்த்துப் போராட மக்கள் முன்வர வேண்டும். இது அவசரம்; அவசியம்.

- வே.ஆனைமுத்து

படிப்பகம்

www.padippakam.com



# டா' சட்டம் ஒழிக!

5 இல் சட்டம் வாதிகளையும், குச் சிந்தனையாளர் னக்கினரை - வாட்டி ளியது; பலரைக் கொன்றது.

வந்த அத்தியாவசியப் பணிகள் டம் (ESMA), பயங்கரவாதத் தடுப்புச் ) முதலானவை - இந்திராகாந்தி டத்தைவிடக் கொடுமையான விளைவு டாக்கின.

ய ஆளும் வர்க்கத்தை - இந்திய ஆட்சியின் சனநாயக அமைப்பை - ஒரே இந்தியா என்கிற ட்பாட்டை எதிர்த்து நடைபெறும் இயக்கங்களை அடியோடு அழிப்பதுதான், இச்சட்டங்களின் நோக்கம். இதில் அரசு வெற்றி பெற்று விட்டது போல் ஒரு தோற்றம் இருக்கிறது; ஆனால் இது பொய்யானது.

மக்களின் வரிப் பணத்தில் இயங்கும் காவல் துறை, எல்லைப் பாதுகாப்புப் படை, இராணுவம் இவற்றைக் கொண்டு வடகிழக்கு மாநிலங்களிலும், ஆந்திராவிலும், காஷ்மீரிலும் எழுந்த தன்னுரிமை கோரும் இயக்கத்தவர்களில் பலரையும் அரசு கொன்று குவித்தது. இது பயங்கரமானது. அதனாலேயே அவர்களின் கோரிக்கைகளும் இயக்கங்களும் செத்துப் போக மாட்டா.

தன்னுரிமை கோரும் இயக்கங்கள் அந்தந்த மாநிலத்தில் குறுகிய எல்லைக்குள் தனித்து நின்று இயங்குவதாலும், அசுர பலத்துடன் அதைத் தாக்குவதற்கு இந்திய அரசுக்குப் பெரிய படை வலிமை இருப்பதாலும், இவ்வியக்கங்கள் வலிமை குன்றச் செய்யப்படுகின்றன. இவற்றையெல்லாம் ஒரு முகப்படுத்தி நாடு தழுவிய போராட்டமாக அது வெடித்திடுமானால், அப்போது, எல்லா வல்லமையும் பெற்ற இந்திய அரசு இவர்களை அடக்கிவிட முடியாது.

'இந்து', 'இந்தி', 'வருணாசிரமம்' என்கிற சிந்தனையின் மீது பலமான அடி கொடுக்கப் பட்டால்தான் நாடு தழுவிய இயக்கமாகத் தன்னுரிமைப் போராட்ட இயக்கங்கள் எழுச்சி பெற முடியும். விரைவில் இந்த நிலை வராமல் போகாது.

இந்த இக்கட்டான சூழலில், 'இந்து', 'இந்துத்துவா', 'இந்தி' முதலான - மக்களை நாசப்படுகிற கொள்கைகளை, ஆட்சியின்மூலமும், கல்வித் திட்டத்தின் மூலமும், நீதித்துறையின் மூலமும் வளர்த்துக் காப்பாற்றுவதற்கு எல்லாம் செய்கிற பாரதிய சனதா தலைமையிலான அரசு, தீவிரவாத - பயங்கரவாதத் தடுப்பு அவசரச் சட்டம் ஒன்றை நிறைவேற்றிட, 16.10.2001 இரவு அமைச்சரவை கூடி முடிவெடுத்தது. இதனை ஆய்வு செய்த குடி அரசுத் தலைவர் 25.10.2001 அன்று இங்கு அவசரச் சட்டத்துக்கு ஒப்புதல் தந்து விட்டார்.

இதற்கான உடனடிக் காரணம் என்ன?

இந்தியாவில் - குறிப்பாகக் காஷ்மீரில் பயங்கர வாதத் தாக்குதலை நடத்துகிறவர்கள் இஸ்லாமியத் தீவிரவாதக் குழுவினர்; அப்படிப்பட்ட குழுக்களை அடக்கி ஒழிக்க வேண்டும் என்பது ஒன்று.

அமெரிக்கா மீது 11.9.2001 இல் நடத்தப்பட்ட திடீர் தாக்குதல் இஸ்லாமியத் தீவிரவாதியான ஒசாமா பின் லேடனின் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டது. பின் லேடனைப் பிடிக்கவும் அழிக்கவும், ஆப்கன் தலிபானின் ஆட்சியை அகற்றவும் அமெரிக்கா ஆப்கன் நாட்டின் மீது போர் தொடுத்து விட்டது. அப்போரை எல்லா வடிவங்களிலும் இங்கிலாந்தும், இரஷ்யாவும் ஆதரிக்கின்றன. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி- பாக்கிஸ்தானின் எல்லை ஊடுருவலைத் தடுப்பது, காஷ்மீரில் இஸ்லாமியத் தீவிரவாதிகளால் மக்கள் கொல்லப்படுவதையும் அரசு நிறுவனங்கள் தாக்கப்படுவதையும் ஒழிப்பது என்கிற 'போர்வையிலும் - அதன் பேராலும் இஸ்லாமிய மதவாத அமைப்புகள் எல்லா வற்றையும்; இன - பிராந்திய - மொழி அடிப்படையில் எழுச்சி பெற்றுப் போராடுகிற எல்லா அமைப்பு களையும் - தமிழீழ விடுதலைக்கு ஆதரவு தரும் அமைப்புகளையும் அடியோடு அழித்து ஒழிப்பது என்பது இன்னொரு காரணம்.

'பொடோ' - POTO (PREVENTION OF TERRORISM ORDINANCE, 2001) 26.10.2001இல் அமலுக்கு வந்தவுடனேயே, ஒன்பது இஸ்லாமிய மதவாத அமைப்புகளும், பன்னிரெண்டு வட கிழக்கு மாநிலத் தன்னுரிமை எழுச்சி அமைப்புகளும், சீக்கிய மத அமைப்பு ஒன்றும், விடுதலைப் புலிகள் இயக்கமும் - ஆக 23 இயக்கங்கள் ஒரே வரி ஆணையில் தடை செய்யப்பட்டு விட்டன.

இந்த அவசரச் சட்டம், 19.11.2001க்கும் 21.12.2001க்கும் இடையில் மக்களவையில் ஒப்புதல் பெறப்பட்டு, மாநிலங்கள் அவையிலும் ஒப்புதல் பெறப்பட்டால், ஒரு சட்டமாகி விடும். இன்றிலிருந்து இன்னும் 5 ஆண்டுகளுக்கு இந்தச் சட்டம் நீடிக்கும்.

இந்த 5 ஆண்டுகளுக்குள் எந்த வகையில் இந்த இயக்கங்களை இந்திய அரசு ஒழிக்கும்?

படிப்பகம்

www.padippakam.com



1. இந்த இயக்கங்கள் அனைத்தின் நடவடிக்கைகளும் செயல்பாடுகளும் வேவு பார்க்கப்பட்டு இதன் முக்கியத் தலைவர்கள் கைது செய்து சிறைப் படுத்தப்பட்டு வதைக்கப்பட்டுக் கொல்லப் படுவார்கள். 'தற்காப்புக்காகப் போராடினோம் - சுட்டோம் - பயங்கரவாதிகளைக் கொன்றோம்' என்கிற பேரால், காவல் துறையினரும், கமாண்டோ படையினரும், இராணுவத்தினரும் இஸ்லாமியர்களையும், கிறித்துவர்களையும், மொழி வழி - இனவழித் தேசிய எழுச்சி இயக்கங்களையும் அழிப்பார்கள். இது நேரடியாகத் தெரியக் கூடிய நடவடிக்கை.

2. 'தேசிய மக்கள் நாயக முன்னணி' (NDA) அரசு என்கிற பெயரில் இன்றைய ஆட்சியிலுள்ள பாரதிய சனதா அரசு - ''இந்துத்துவா'', ''இராம ராஜ்யம்'', ''இராமர் கோயில்'' என்கிற இந்து மத வெறிக் கோட்பாடுகளை இந்தியா முழுவதிலும் பரப்பி, வரும் 2002 மார்ச்சு 12க்குள் அயோத்தியில் இராமர் கோயிலை எழுப்பி, இந்துக்களிடம் ஆழமான மத வெறியை ஊட்டி, இஸ்லாமியர் - கிறித்தவர் -இந்துமத எதிர்ப்பாளர்களின் பேரில் தாக்குதல் தொடுக்கச் செய்து, பாரதிய சனதாக் கட்சி மேலும் பல ஆண்டுகள் ஆட்சியில் நீடிக்க வழி செய்யத் திட்டமிட்டு விட்டனர்.

இது, மதம் - கலாசாரப் பாதுகாப்பு என்கிற பேரால் நடைபெற்று வருகிற மறமுகமான - வெளியில் தெரியாத நடவடிக்கை.

மதவெறி - கூரிய கத்தியைவிட, ஆற்றல் வாய்ந்த குண்டுகளை விட, உயிர் கொல்லும் நஞ்சை விட மிக வலிமை படைத்த ஆயுதமாகும். இதை ஏந்தியவன் மனிதத் தன்மையையும் அறிவு உணர்ச்சியையும் இழந்தவன் ஆகிவிடுவான்.

இந்தியாவிலும், வேறெங்கிலும் 'புரட்சி' பற்றிப் பேசுவோர் இதனை நன்கு உணர வேண்டும்.

இந்த மறைமுக நடவடிக்கைக்கு, 'இந்துத்துவா' என்கிற முகமூடி இருப்பதால், 85 கோடி இந்துக்களில் 75 கோடி இந்துக்கள் இதற்குப் பலியாகும் நிலை இருப்பதால், இப்படி இவர்கள் திட்டமிடுகிறார்கள்.

இத்திட்டத்தைக் குண்டு, துப்பாக்கி, மெஷின் துப்பாக்கி என்கிற பயங்கர ஆயுதங்கள் இல்லாமல் - குண்டாந்தடி, வடக்கயிறு, அரசு ஆதரவு, முதலாளிகள் - மேல்சாதியினர் பண ஆதரவு, மேல் சாதி ஏடுகளின் பரப்புரை என்கிற வலிமையான 'இந்துத்துவா' மதவெறி ஆயுதத்தைக் கொண்டு போராடிட - இராஷ்டிர சுயம் சேவக் சங்கம், விசுவ இந்து பரிஷத், பஜ்ரங்தள், அகில பாரத வித்யார்த்தி பரிசத் என்கிற நான்கு தீவிர இந்து மதவாத அமைப்புகள் - இந்துத்துவா கொள்கை நிறைவேற்றப் படைகளாக இருக்கின்றன. இந்த ''இந்துமதவெறி அமைப்புகளை''த் தடை செய்ய வேண்டிய இந்திய அரசு, எதனால் துணிவாக இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி 23 அமைப்புகளின் பேரில் மட்டும் பாய்ந்தது?

கூட்டணிக் கட்சிகள் என்கிற அடிமைக் கட்சிகளின் ஆதரவு இன்றைய ஆட்சிக்கு இருப்பதால்தான். இந்தக் கட்சிகள் எப்படியாவது பதவியிலிருக்க வேண்டும் என்று நினைப்பதும், நாடாளுமன்றம் 2004 முடிய கலைக்கப்பட்டு விடக்கூடாது என்று கருதுவதுமே இந்த இந்துமத வெறி ஆட்சிக்கு உள்ள மூலபலம்.

இவர்களையும் அம்பலப்படுத்தி- 'இந்துத்துவா' கொள்கைக்கு எதிரான நடவடிக்கைகளை எல்லா முற்போக்கு அமைப்புகளும் தீவிரமாக மேற்கொள்ள வேண்டும். 'ஆர்.எஸ்.எஸ்., வி.எச்.பி., பஜ்ரங்தள், ஏ.பி.வி.பி. அமைப்புகளைத் தடை செய்' எனக் கோரிப் போராட வேண்டும்.

பாரதிய சனதா தலைமையிலான ஆட்சியை ஒழிப்பதுதான், பொடோ சட்டம் ஒழிய வழியாகும்.

வே.ஆனைமுத்து

ஆயிரக்கணக்கானோர் தொழில் வணிகம் தொடங்கி வாழ்வில் வெற்றி பெற்று விட்டனர்!

''இன்றே இப்பொழுதே தொடங்குங்கள் வணிகம்''

பா. இராமமூர்த்தி
(சங்கமித்ரா)

★ 252 பக்கம் - விலை ரூ.150
★ தமிழக அரசு விருது பெற்ற நூல்
★ நூற்றுக்கணக்கான தொழில் வணிக வாய்ப்புகள் பட்டியலிடப்பட்டிருக்கின்றன

வணிக வகைகள், வணிகத் தத்துவங்கள், வணிகத் தேவைகள், செய்திகளில் வணிகம், வணிக வெற்றியின் எடுத்துக்காட்டுகள் என்று பல தலைப்புகளில் வணிகச் செய்திகளும், வெற்றி பெற்றோர் வரலாறுகளும் ஆய்வு செய்யப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளன.

வி.பி.பி. (ரூ.160)யில் பெற, அஞ்சலட்டை எழுதுக!

திலகம் வெளியீடுகள்
1/429, தென்பெரும் நெடுஞ்சாலை
வண்டலூர் வாயில், சென்னை - 600 048
தொலைபேசி: 2376872

படிப்பகம்

www.padippakam.com



# என் கொள்கை வழி காட்டியை இழந்தேன்! வாழ்க கணபதியின் புகழ்!



தந்தை பெரியாரின் மதிப்புக்கும் அன்புக்கும் உரியவராக விளங்கிய மாமனிதர் ஆசிரியர் ந.கணபதி அவர்கள், 23.10.2001 செவ்வாய் பிற்பகல் 3.45 மணிக்கு, வீரானந்தபுரம் அவர்தம் இல்லத்தில் மறைவுற்றார். இடிவிழுந்தது போன்ற இத் துன்பச் செய்தியை அன்னாரின் அன்பு மகன் அறிவொளி, அன்று மாலை 4.30மணிக்குச் சொன்னபோது, நான் நிலைகுலைந்து போனேன்.

நானும் என் துணைவியார் சுசீலாவும் மருமகள்களும் 14.10.2001 மாலை ந.கணபதி அவர்களை சென்னை கோடம்பாக்கம் 'தி பெஸ்ட்' மருத்துவமனையில் பார்த்து நலம் உசாவினோம். அதுவே அவருடனான என் இறுதிச் சந்திப்பு ஆகிவிட்டது. இவ்வளவு விரைவில் இது நேரும் என நான் நினைக்கவில்லை.

ந. கணபதி அவர்கள் 88 ஆண்டுகள் 22 நாள்கள் வாழ்ந்து மறைந்தார். அன்னாரின் வாழ்வு 'முழு வாழ்வு' ஆகும் என்பது ஓர் உண்மை. ஆயினும் என் போன்றோரால் அந்தப் பேரிழப்பை மறக்கவே முடியாது. ஏன்?

### 63ஆம் ஆண்டில் நாங்கள்

ந. கணபதி அவர்களை நான் பார்த்ததும் பழகியதும் 1939 சூன் திங்களில். அப்போது முதல் 62 ஆண்டுகள் அவரும் நானும் கொள்கை ஆசிரியர் - மாணவர்; குடும்பப் பெரியவர் - உறுப்பினர்; இயக்கத் தோழர்கள் என்ற பல நிலைகளில் இணை பிரியாதவர்களாக இருந்தோம். இந்த நெடுங்கால உறவு 63ஆம் ஆண்டில் முறிந்து விட்டது. அப்படிப்பட்ட நெடிய உறவை நான் இழந்து விட்டதை என்னால் எப்படி மறக்க முடியும்?

### கொள்கை ஆசிரியர்

1939 இல் தான் - ந. கணபதி அவர்களின் மூலம் தான் - பார்ப்பனர் அல்லாதார் இயக்கம், சுயமரியாதை இயக்கம், பெரியார் ஈ.வெ.இரா. 'குடி அரசு', 'விடுதலை' ஏடுகள் என்கிற செய்திகளைப் பற்றி நான் முதன் முதலாக அறிந்தேன். அவ்வகையால் எனக்குக் கொள்கையைக் காட்டிய ஆசிரியர் ந. கணபதி அவர்களே ஆவார். 1940 மார்ச்சு தொடங்கி, நான் தீவிரமான இயக்கவாதி ஆனேன். என் இயக்கத் தொடர்புக்கு இன்று வயது 62; என் வயது 77. என்னை விடச் சரியாகப் பதினோரு வயது மூத்த அவர் என்னைத் தம்பியாக அல்ல -தோழனாக, உற்ற நண்பனாக எண்ணுவதிலும் நடத்துவதிலும் மட்டற்ற மகிழ்ச்சிஅடைந்தார். என் குடும்ப நலனிலும், என் பொதுவாழ்விலும் பிரிக்க முடியாத மூத்தவராக - முன்னோடியாக விளங்கினார். அந்த என் மூத்தவரை - முன்னோடியை இழந்து தவிக்கிறேன்; இதைத் தவிர்க்கவே முடியவில்லை.

### இணைந்தே பணியாற்றியவர்கள்

1950 இல் 'குறள் மலர்' ஏட்டை நாங்கள் தொடங்கிய போதும்; 1957 இல் 'குறள் முரசு' ஏட்டினை நான் நிறுவிய போதும்; 1974 இல் 'பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள்', நூலைத் தொகுத்து வெளியிட்ட போதும்; 1974 இல் 'சிந்தனையாளன்' கிழமை ஏட்டைத் தொடங்கிய போதும் எனக்கு உற்ற துணையாக - என் நலனில் அக்கறை தோய்ந்தவராக - என் அழைப்பு எப்போது கிடைத்தாலும் அடுத்த நாளே வந்து உதவும் தோழராக விளங்கினார், ந.கணபதி!

### கணபதி அடைந்த பூரிப்பு

அன்னாரின் வழியாகப் பெரியாரின் கொள்கையை அறிந்த நான், பெரியாரின் கொள்கையைப் பரப்பவும் நிலைக்க வைக்கவும் தனி ஓர் இயக்கம் கண்டிட 1976 இல் முயன்ற போது, பல நாள்கள் அல்லும் பகலும் என்னோடு இருந்து, தமிழகத்தின் வட மாவட்டங்கள் முழுவதிலும் என்னோடு பயணம் வந்து, 8.8.1976 இல் இயக்கம் கண்டிடப் பெருந் துணையாக விளங்கினார், அவர்.

பெரியாரின் கொள்கைகளைப் பரப்பிட வேண்டி வட மாநிலங்களுக்குப் பல ஆண்டுகள், பல தடவைகள் நான் சென்று வந்த போதும்; என்னுடைய மற்றும் இயக்கத் தோழர்களுடைய அரிய முயற்சியால் மண்டல் பரிந்துரை நடப்புக்கு வந்த போதும்; நான் மலேசியாவுக்குக் கொள்கை பரப்புரைப் பயணம் சென்று வந்த போதும் -ஈன்ற பொழுதினும் பெரிது உவக்கும் தாயின் நிலையில் நின்று, என் தலைமை ஏற்பு வாய்ப்புகளை எண்ணியெண்ணிப், பூரிப்போடு என்னைக் கட்டித் தழுவி உரையாடுவார், அவர்.

### பிரியாவிடை

கடந்த மூன்றாண்டுகளாக வீரானந்தபுரத்தில் வீட்டோடு அவர் தங்கிட நேர்ந்தது. நான் சிதம்பரம் - செயங்கொண்டம் பகுதிகளுக்குப் போக நேரும் போதெல்லாம்; அன்னாரின் வீடு தேடிச் சென்று பார்த்து வந்தேன்.

சென்னையில், 8.10.2001 அன்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அன்னாரை 9, 12, 14 நாள்களில் பார்த்துப் பல மணி நேரம் உரையாடினேன். ஆயினும் நினைவில் - முன் பேசியதையே திரும்பப் பல தடவைகள் பேசுகிற ஒரு மாறுபட்ட நிலையை மட்டுமே - அங்குக் கண்டேன். 15அன்று வெளிவந்த அவர், 23 இல் மறைந்து விடுவார் என நான் எதிர்பார்க்கவில்லை.

எல்லா வகைகளிலும் 63 ஆண்டுகள் ஈடும் இணையும் அற்ற இணையாக விளங்கிய எங்கள் இருவரில் - கணபதி அவர்கள் நிரந்தரமாகப் பிரிந்துவிட்டார்; நான் பிரியாவிடை தந்தவன் ஆகித் தவிக்கிறேன். இதைத் தவிர்த்திட முயலுவேன் - இன்னும் பல கணபதிகள் எனக்கு இனியேனும் கிடைப்பார்கள் என்கிற நம்பிக்கையுடன் முயலுவேன்.

இந்த மாபெரும் இழப்புக்கு ஆளாகி விட்ட அவர்தம் துணைவியர் கோமளவல்லி, சீத்தாலட்சுமி; மகள் அறிவுக் கடல், மகன் அறிவொளி, மருமகன் ந. சீனிவாசன் மற்றும் குடும்பத்தினர் என்னைப் போன்றே மனதைத் தேற்றிக் கொள்ள வேண்டுகிறேன்.

வாழ்க கணபதியின் புகழ்!

வெல்க பெரியார் கொள்கை!

- வே.ஆனைமுத்து

**ந.கணபதியின் படத்திறப்பு காட்டுமன்னார்குடியில் 11.11.2001 ஞாயிறு அன்று. அனைவரும் வருக!**

படிப்பகம்

www.padippakam.com




# பெரியார் இன்றும் தேவைப்படுகிறார்

-முனைவர் து.மூர்த்தி, அலிகர்

I

பொதுவாக இப்படிப்பட்ட தலைப்புகளில் ஒரு பொதுக் கட்டுரை எழுதுவது என்பது மிக எளிதான வேலைதான். பெரியாரின் சிறப்புகளை எல்லாம் விதந்து கூறி, போற்றிப் பரவி 'அய்யாவே தலைவர்!' என முற்றுப்புள்ளி வைத்து விட்டால் ஒருவேளை அக்கட்டுரை விழா மலரின் பக்கங்களை நிரப்பப் பயன்படலாம். ஆனால் நம் முன்னே இன்று கனலும் நடப்புகளும் உண்மைகளும், கருகிச் சீரழியும் தமிழர் வாழ்வும், அழுகும் அரசியலும் இந்தத் தலைப்பை இப்படி லேசாக அணுக முடியாத படிச் செய்துள்ளன. கல்வி நேர்மையும் சமுதாயப் பற்றுறுதியும் உடைய ஓர் உண்மையான பெரியாரியல்வாதிக்கு முன்னால், இந்தத் தலைப்பு செய்தி வாக்கியமாக இல்லாமல், வினா வாக்கியமாக அமைகிறது. பெரியாரா இன்றுமா தேவைப் படுகிறாரா; (1) பெரியாரா இன்றும் தேவைப்படுகிறார்? 2) பெரியார் இன்றுமா தேவைப்படுகிறார்? 3) பெரியார் இன்றும் தேவைப் படுகின்றாரா?



இந்த மூன்று வினாக்களும் இடைக்காலத் தமிழ்ப் புலவனின் சொல் விளையாட்டுகள் அல்ல; தத்துவம், காலம், நடைமுறை ஆகிய மூன்றின் இயங்கியல் விளைவுகள் ஆகும். 'இன்றைய தேவைகளின்' தன்மையை உணர்ந்து கொண்ட ஒரு சமூக விஞ்ஞானி ''பெரியாரா?'' என்ற முதல் கேள்வியைக் கேட்கிறான்; இவன் ஓர் கறாரான அரசியல்வாதி! ''இன்றுமா?'' என்ற கேள்வியைக் கேட்பவன் ஓர் வரலாற்று ஆசிரியன்; இவனைப் பொறுத்தவரை பெரியார் குறிப்பிட்ட காலத்தின் குறியீடு மட்டுமே! சமூக அக்கறை உள்ள, நடைமுறை அரசியலில் தவறாமல் பங்கு பெறும் ஒரு சாதாரணக் கட்சி ஊழியன் ''தேவைப்படுகிறாரா?'' என்ற கேள்வியைக் கேட்கிறான்; இவனுக்குத் தேவை உடனடி விளைவுகள்! ஆக, 'பெரியார் இன்றும் தேவைப் படுகிறார்' என்ற தலைப்பு, புரட்சி நடவடிக்கையில், நடைமுறையில் உள்ள ஒரு கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தீர்மான ஆவணத்தின், கருப்பொருளாக அமையும் விவாதமாகும். ஒரு மலருக்கான சிறு கட்டுரை ஒன்றில் இதை எழுதி முடித்துவிட முடியாது. எனவே, இத் தலைப்பைப் 'பெரியார் இன்றும் தேவைப்படுகிறார் - அரசியல் தீர்மான விவாதத்திற்கான சில முன்னுரைக் குறிப்புகள்' என்று மாற்றிப் படிக்கும்படி வேண்டுகிறேன்.

பெரியார் அவர் வாழ்ந்த காலத்திலேயே கூட சரியாக - உண்மையாக அடையாளப்படுத்தப் படவில்லை. இதில் பெரும் பங்கு ஏற்க வேண்டியவர்கள் பெரியாரிய வாதிகளே ஆவர்! ''கடவுள் இல்லை என்று சொன்ன நாஸ்திகர், பார்ப்பன துவேஷி, வயதான காலத்தில் சின்னப் பெண்ணைக் கலியாணம் செய்தவர்'' என்ற மூன்றாக மட்டுமே பெரியார், அவர் எதிரிகளால் அடையாளம் செய்யப்பட்டார்; செதுக்கிக் காட்டப்பட்டார். எதிரியின் சூழ்ச்சியை அறியாத நாத்திக பஜனைக் கூட்டம், இந்த அடையாளத்தையே 'அனுமன் பிடி'யாகப் பிடித்துத் தொங்கியது.

'பெரியார் அடிப்படையில் ஒரு கம்யூனிஸ்ட்; கம்யூனிச சமுதாயத்தைத் தன் இறுதி இலக்காகக் கொண்டவர்; இதற்கான வேலைத்திட்டங்களில் நிபந்தனைகளற்ற கலகக்காரராகவும் போராட்ட வீரராகவும் விளங்கியவர்' -என்ற உண்மையை எதிரி-மேல்சாதிக்காரன் அவன் வாழ்க்கைத் தேவையில் இருந்து மறைத்தான்; திராவிடத்தான் - பிற்பட்ட மேல்சாதிக்காரன் தன் சொந்த நலன்களைக் கிராமங்களில் தக்கவைத்துக் கொள்வதற்காக மறைத்தான்; சாதாரண ஊழியன், இன்று வரை அறியாமையில், இந்த உண்மையைச் சுகமாக உணராமல் இருக்கிறான். உணர்ந்தவன் ஒதுக்கி வைத்து விடுகிறான். ஆக, பெரியார் அவர் வாழ்நாளிலேயே உயிரோடு சமாதியாக்கப்பட்டார்; செத்த பின்பு 'தர்கா' ஆக்கப்பட்டார். இந்தக் கண்ணோட்டத்தில் பெரியார் இன்றும் தேவைப் படுகிறார் என்ற தொடரைப் படிக்கும் போது நமது அறிவும், மனமும், சுயமரியாதையும் துன்புறுகின்றன; கனக்கின்றன!

பெரியார் இன்றும் தேவைப்படுகிறார் என்பதில் உள்ள 'உம்'மை (பாமரனுக்கும் கூட) கீழ்க்கண்ட வினாக்களை எழுப்புகின்றது:

படிப்பகம்

www.padippakam.com



*1.* பெரியார் இன்றும் தேவைப்படுகிறார் என்றால், 'அன்று' பெரியார் ஏன் தேவைப்பட்டார்?

*2.* அப்படியானால் அடிப்படையில் பெரியார் 'அன்று' என்னவாக இருந்தார்?

*3.* 'பெரியாரின் 'அன்று' இன்னுமா தொடர்கிறது? தொடர்கிறது என்றால் ஏன்? எப்படி? (இந்த வினாவை நுட்பமாகப் புரிந்து கொள்ள வேண்டும். 'பெரியாரியம் அன்று'; 'அன்றைய சமுதாயம்' என்ற இரண்டாக இது பொருள்படும்)

*4.* பெரியார் 50 ஆண்டுகள் குருதிகொட்டிப் பணிபுரிந்த பின்பும் 'அன்று' தொடர்கிறது என்றால் இதற்கான காரணங்கள் யாவை? காரணர்கள் யாவர்?

*5.* அரசியல் சட்ட எரிப்புப் போராட்டம் முதல் கோயில் கருவறை நுழைவுப் போராட்டம் வரை பெரியார் நடத்திக் காட்டிய பின்பும் பெரியாரின் 'அன்று' தொடர்கிறது என்றால், ''பெரியார் அன்றே தேவைப்படவில்லை'' என்றுதானே பொருள் - என எதிரி கூறும் வாதத்தை எப்படி அறிவு சான்று முறியடிப்பது?

இந்தக் கேள்விகள் நியாயமானவை, ஆராயத்தக்கவை - relevant questions to be probed properly என்ற அளவில் மனதில் வாங்கிக் கொள்ளப்படுகின்றன என்ற நம்பிக்கையிலும், அவ்வாறு வேண்டிக்கொண்டும் விடை காணும் முயற்சியைத் தொடர்கிறேன்.

பெரியாரின் அன்றைய காலகட்டத்தை வரலாற்று - சமூகவியலாளன் கண்ணோட்டத்தில் நான் படம் பிடிக்கப் போவதில்லை. இது தனி ஆய்வு. பெரியார் அடிப்படையில் 'அன்று' என்னவாக இருந்தார் என அரசியற்படுத்த முடியுமா என்று முயல்கிறேன். பெரியாரின் எதிரிகளும், சுயநலமும் அறியாமையும் மிக்க தோழர்களும், அடையாளப்படுத்திய முன்பே குறிப்பிடப்பட்டுள்ள, மூன்று கூறுகளும்தான் பெரியார் அல்ல. அப்படியானால் பெரியார் 'அன்று' என்ன:

*1) பொருள் முதல் வாதி:* கம்யூனிசத்தை இறுதி இலட்சியமாக அறிவித்தவர். இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையே தோன்றும் முரண்பாடுகளும் நடைபெறும் போராட்டங்களும் தொடர, மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையே தோற்றுவிக்கப்பட்டுள்ள சுரண்டலின் அனைத்து வடிவங்களையும் முற்றாக ஒழித்தல்.

*2) நாத்திகர்: சரியான சொல் இயங்கியலாளர்;* நாத்திகம் என்ற சொல்லை 'கடவுள் மறுப்பு' என்ற சுருங்கிய பொருளில் மட்டும் பெரியார் பயன்படுத்தவில்லை; பெரியார் எங்கெல்லாம் நாத்திகத்தை ஒரு தத்துவமாகப் பயன்படுத்தியுள்ளாரோ அங்கெல்லாம் சோசலிசத்தைப் பற்றி மறக்காமல் பேசியுள்ளார்; நாத்திகத்தை அறிவு கொள் கருவியாகவும் "tool to seek knowledge", அறிவு தேடு வழியாகவும் "method to search knowledge' கொண்டவர்.

*3) வருணதர்ம ஒழிப்பாளர்:* சாதியை அதன் நிறுவன வடிவத்தையும் அதன் தத்துவ மூலத்தையும் - ஒழிக்க முயன்றவர். மாசுடைப் பிறப்பு என்ற அடிப்படையில் தீண்டப்படுவோர், தீண்டப்படாதோர் என்ற பிரிவு; தீண்டப்படாதோர் வர்ணத்திற்கு வெளியே நிற்கும் அடிமைகள். தீண்டப்படுவோருள் குறிப்பாகத் தென்னிந்தியா - தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கடவுள் தன்மையர் "persons of priesthood', பிறர் என்ற பிரிவு - இந்தப் 'பிறர்' என்ற பிரிவுக்குள் ஏற்படுத்தப்பட்டுள்ள உட்பிரிவுகளே வர்ணாசிரம ஒடுக்கு முறையின் அடிப்படை வன்மையாகும். இந்தப் 'பிறர்' ஆகிய சூத்திரர்கள் சமூகப் படிநிலை ஒழிப்பில் யாரோடு சேர்ந்து கொள்ள விரும்புகிறார்கள் என்ற கட்டங்களே இந்தியாவின் அரசியல் மற்றும் அரசியல் போராட்ட வடிவங்களைத் தீர்மானிக்கின்றன. பெரியாரோ பிறப்பின் அடிப்படையில் கட்டப்பட்ட பிரிவுகள்-பிளவுகளையும் அதன் தத்துவச் சூழ்ச்சிகளையும் ஒழிக்க முயன்றவர்.

சாதியைச் சுரண்டலின் நிறுவனமாகக் கண்டார். இந்த நிறுவனத்திற்குள் நுழைக்கப்பட்ட 'தீண்டாமை'யை அதைத் தாங்கிக் - காப்பாற்றும் ஆதரமாகக் கண்டார். எனவேதான் சாதிபேத மறுப்பு, சமபந்தி உணவு எனக் களியாட்டங்களில் இறங்காமல் வர்ண ஒடுக்குமுறை ஒழிப்பில் உழைத்தார்.

*4) மத ஒழிப்பாளர்:* பெரியார் பொதுவில் எல்லா மதங்களையும் எதிர்த்தவர்; மதங்கள் ஒழிந்த சமூகம் காண விழைந்தவர். இந்தியாவில் பெரும்பான்மையோர் இந்துவாக இருந்ததால் இந்துமத ஒழிப்பில் பெரிதும் ஈடுபட்டவர். வர்ண ஒடுக்குமுறை- இந்துமத ஒழிப்பு இந்தியாவில் அனைத்து மதங்களையும் ஒழித்துக் கட்டும் என நம்பியவர். கடவுளும் மதமும் - மனிதகுல விடுதலையின் தடைக்கற்கள் எனக் கருதியவர்; அரசியல் சமூக நிலையில், பொதுவாக அரசில் (state) இருந்தும், குறிப்பாகக் கல்வியில் (Education) இருந்தும் மதத்தை நீக்கி வைப்பதைத்தான் மதச்சார்பின்மை - 'செக்யூலர்' எனக் கருதியவர்.

இந்துமதம் என்ற இரும்புப் போர்வைக்குள் இருந்த பார்ப்பனியத்தையும், இதற்கு விடாப்பிடியாகச் சேவகம் செய்த சற்சூத்திரர்களையும் தோலுரித்துக் காட்டியவர்.

5. பெண்ணுரிமைப் போராளி: சமுதாயப் போராட்டங்களின் வளர்ச்சியினூடே பெரியாரியலின் கூறுகள் பலவும் கடந்து செல்லப்படும் நிலையிலும் 'பெரியார் பெண்ணுரிமைப் போராளி' என்ற கூறு

படிப்பகம்

www.padippakam.com



நிற்கும். இதன் பொருள் பெண் விடுதலைப் போராட்டம் சோசலிச அரசு நிறுவிய பின்பும் நடக்கும்.

*6. கூட்டுறவு இயக்க ஆதரவாளர்:* உழைப்பின் விளைவு - உற்பத்தியின் பயன், உற்பத்தியாளனுக்கும் அதைத் துய்ப்போனுக்கும் மட்டுமே சென்று சேர வேண்டும். 'இடைத்தரகர்' ஒழிந்த கூட்டுறவு நிலையங்கள் சோசலிசக் கட்டுமானத்தின் பயிற்சி நிலையங்களாக அமைய வேண்டும்.

*7. இடஒதுக்கீட்டு ஆதரவாளர்:* பெரியார் வகுப்புரிமை வீரர் ஆவார்; சாதியப் படிநிலைகளால் பிளவுண்ட ஒரு சமுதாயத்தில், அனைத்து மக்களும் அரசு எந்திரத்தில் சமமாகப் பங்கேற்பதை ஜனநாயகத்தின் ஒரு கூறாக எடுத்துக் கொண்டு, 'சாதி அடிப்படையில் சமபங்கு' - 'வகுப்பு வாரியாகப் பங்கு' என்ற கோரிக்கையாக வகுப்புரிமையை முன்வைத்தார். சமுதாய - சாதி இறுக்க ஒழிப்பில் - போராட்டத்தில் வகுப்புரிமையையும் ஓர் உத்தியாகப் பயன்படுத்தினார். அரசியல் சொற்களில் சொல்வதென்றால், 'வகுப்புரிமை தொழிற்சங்க உரிமை'யைப் போன்ற ஒன்றாகும்.

பெரியார் இடஒதுக்கீட்டின் மூலம் சாதி ஒழிந்து விடும் எனக் கனவு காணவில்லை. இடஒதுக்கீட்டின் மூலம் உழைப்பாளர் வர்க்க ஆட்சி தோன்றி விடும் என்று பொய்யுரைக்கவும் இல்லை. இவை முக்கியம்.

*8. பகுத்தறிவு சான்ற,* மானுட மேம்பாட்டை மையப்படுத்திய கலை இலக்கியப் பார்வையை, படைப்புகளை வரவேற்றார். மொழியைக் கருத்தறி கருவியாகவும், கருத்தறிவிக்கும் ஊடகமாகவும் பண்பாட்டின் அடையாளமாகவும் கண்டார். விஞ்ஞான வளர்ச்சியின் கூறுகளை உள்வாங்காத அடையாளங்களை எதிர்த்தும், உள்வாங்கிச் செழுமைப்பட்ட வளர்ச்சியை ஆதரித்தும் வந்தார். பெரியாரின் அழகியல் என்பது பயன்பாடு (application) சார்ந்தது; அமைப்புச் (structure) சார்ந்தது அல்ல.

*9. இனவிடுதலையாளர்:* பெரியாரின் இன விடுதலைக் கோட்பாடு இரண்டு வகைப்படும்: அ) இந்தியாவின் போலி தேசியக் கட்டமைப்பைக் கடுமையாக இறுதிவரை எதிர்த்தவர்; ஆ) தமிழ் இன அடையாளத்தின் அளவுகோலாக 'பார்ப்பன- பனியா - இந்தி ஆதிக்க ஒழிப்பை' முன்னிறுத்தியவர். இன அடையாளத்தின் 'ஆதிக்கம்' என்ற இச் சொல் முக்கியமானது. பார்ப்பனர்களை முற்றாக ஒழித்துவிட வேண்டும் என்றோ, நாட்டை விட்டு விரட்டிவிட வேண்டும் என்றோ எங்கும் எந்தச் சமயத்திலும் கூறாதவர்.

*10. சமாதானம்:* 'கவலையற்ற மனச் சமாதானம் உடைய மனித குலத்தை - சமுதாயத்தை உருவாக்குவதே, பெரியாரின் அடிமனக் கருத்தாக இருந்தது. பொருள்களின் நிறைவால் (fulfilment of basic needs) கவலையற்ற சமுதாயத்தை உருவாக்க முடியும். மனச்சமாதானமுள்ள சமுதாயம் என்பது தனிமனித உள் துடிப்புகளின் (instincts) நிறைவுக்கும் வளர்ச்சிக்கும் வழியேற்படுத்திக் கொடுக்கும் சமுதாய அமைப்பு முறையாகும். திறமைகளும் (skills) அதன் அடிப்படையில் பெறும் சமூக மரியாதையும் எல்லா நிலைகளிலும் சமம் என்பதாகும்.

பெரியார் 'அன்று' இப்படியெல்லாம் இருந்தார் என்பது நம் ஆசைகளோ, அவர்க்கான புகழ்மொழிகளோ அல்ல; அறிவுவாதியான - நாத்திகரான பெரியார் தன் சமூக ஆய்வின் முடிவுகளில் இருந்து மேற்கண்ட நிலைகளை மேற்கொண்டார். புத்தரைப் போல எங்கே தன்னையும் கடவுளாக்கி விடுவார்களோ என்ற அச்சம் பெரியாருக்கு நிரந்தரமாக இருந்திருக்கக் கூடும். எனவேதான் 'கடவுள் இல்லை' என்ற முழக்கத்தில் கடைசி வரை தெளிவாக இருந்தார். பெரியார் கடைசி வரை நாத்திகராக இருந்தார் என்பதன் உண்மைப் பொருளைப் பெரியாரியவாதிகள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். புத்தர் முதல் மார்க்சு வரை தோன்றிய அறிவுவாதிகளின் நோக்கம் - இல்லாத கடவுளோடு சண்டையிடுவது அல்ல; மனித குலத்தின் விடுதலைக்கான தடைக்கற்களுள் ஒன்றாகக் கடவுள் இருந்தது என்பதுதான். திராவிடப் பெரியாரிய வாதிகள் 'கடவுள் ஒழிப்பில்', அதன் சமூக விடுதலைப் பண்பை ஒழித்துக் கட்டி விட்டு, விடாப் பிடியாக நின்றனர். பெரியார் வீழ்ந்தார். ஆக, அன்றைய பெரியாரியம்- பெரியார் என்பது அன்றைய சமூக மாற்றத் தேவைகளின் தத்துவமாகவும் நடைமுறையாகவும் இருந்தது. எனவே பெரியார் அன்று தேவைப்பட்டார்.

*அன்று தேவைப்பட்ட பெரியார் இன்றும் தேவைப்படுகிறார் என்றால் பெரியாரின் 'அன்று' (அன்றைய பெரியாரியம், அன்றைய சமுதாயம்) இன்னுமா தொடர்கிறது? தொடர்கிறது என்றால் ஏன்? எப்படி? இதற்கான காரணிகள் என்ன? அப்படியானால் பெரியாரியமே கேள்விக்குள்ளாக்கப்படவேண்டுமா? மிகக் கவனமாகப், பாசங்களுக்கு அப்பாற்பட்டு அணுக வேண்டிய வினாக்கள்.*

இதற்கு முன்னால் ஒரு கருத்தை நான் தெளிவுபடுத்த வேண்டும். பெரியார் சலனம்- சபலம் அற்ற போர் வீரராக இருந்தது உண்மை. அதே சமயம் இக்கட்டுரையில் முன்பு குறிப்பிடப்பட்டுள்ள பத்துக் கூறுகளும் அதையொட்டிய பிறவற்றையும் உள்ளடக்கிய பெரியாரியத்தின் 'அரசு எந்திரம்' (State as a Machine) பற்றிய எந்தக் கண்ணோட்டமும் இல்லை; அதே சமயத்தில் அவர் காலத்தில் நிலவிய அரசு எந்திரத்திற்குள்ளேயே அவர் கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன. இன்னொரு கசப்பான உண்மையையும் நாம் கவனிக்க வேண்டும். தமிழ்நாடு விடுதலை, சோசலிசம் வரை பேசிய பெரியார் அதற்கான கட்சிகட்டும் பணியில் இறங்கவே

படிப்பகம்

www.padippakam.com



இல்லை. இவையெல்லாம் பெரியாரியத்தின் உள்ளொட்டி (inherent) இருந்த குறைபாடுகளாகும். பெரியார் அவர் முழுச் சக்தியையும் தமிழரிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட்டாலே போதும் என்ற அளவில் செலவிட வேண்டியதாயிற்று. தனி மனிதர் ஒருவரைத் தத்துவமாகவும் தலைவராகவும் நிறுவனமாகவும் வைத்து நடத்தப் பெறும் அரசியல் போராட்டங்கள் ஆசிய சமூகங்களில் ஒரு கறையாகவே (trait) இன்றுவரை இருந்து வருகின்றன.

அன்றைய புரட்சிகரமான பெரியாரியத்தில் தங்களை அடையாளப்படுத்திக்கொண்ட பெரியாரிஸ்ட்டுகளின் தன்மைதான் என்ன? இது மிக முக்கியம். பெரியார் இன்றும் ஏன் தேவைப்படுகிறார் என்பதன் ஊற்றுக் கண்ணாக இதை நான் அணுகுகின்றேன்:

சோசலிச விடுதலை வீரரான பெரியார், தன் அரசியல் முழக்கங்களின் வழி, பன்முகத் தன்மை வாய்ந்தவராக விளங்கினார். அவர் எந்தவொரு அரசியல் முழக்கத்தையும் அதற்கான முழுத் தத்துவ-நடைமுறைப் பொருளில் அறிவித்தார்; கடைப் பிடித்தார்; போராடினார். ஆனால் பெரியாரிஸ்ட்டுகளும் சரி, பெரியார் அனுதாபிகளும் சரி பெரியாரியத்தின் எந்தவொரு கூறையும் அதன் முழுப் பொருளில் ஆதரித்தவர்கள் அல்ல. மூளைக்குள் கண்ணிவெடி சிதறுவதை என்னால் உணர முடிகிறது. பெரியாரை ஆதரித்தவர்கள் எல்லோருமே நாத்திகர்கள் அல்லர்; இன்னும் சொல்லப் போனால் ஆத்திகத் தமிழர்கள்தான் அதிகம் ஆதரித்தனர். பெரியாரை ஆதரித்த நாத்திகர்கள் கூட, பெரியாரின் நாத்திக அர்த்தத்தில் அதைப் புரிந்து கொள்ளவில்லை, எப்படி?

பெரியாரின் நாத்திகம் 'வெறும் கடவுள் மறுப்பு' அல்லவே அல்ல; அது அவர்க்குச் சோசலிசத்தின் போர் வாளாகவும், சாதி ஒழிப்பின் தத்துவமாகவும் பயன்பட்டது. ஆனால் பெரியாரின் நாத்திக ஆதரவாளர்கள் 'இல்லாத ஒன்றை ஒழிப்பதில்' மட்டும் நிறுத்திக் கொண்டனர். அதாவது கடவுள் இல்லை என்று அலறுவது நகரத்திலும் கிராமத்து மேடைகளிலும் மரியாதைக்குரிய ஒன்றாகக் கூட இருந்தது. ஆனால் அதன் தொடர்ச்சியாக சாதி ஒழிப்பில் - தாழ்த்தப்பட்டவர்களை ஒடுக்குவதில் இருந்து விடுபடல் - அவர்களால் இறங்க முடியவில்லை. சாதிப் பெருமையும், உடைமைப் பெருமைகளும் அவர்களை வர்ண ஒழிப்பின் - சோசலிசத்தின் முதற்படிக்கட்டு வரை கூட அனுமதிக்கவில்லை. பெரியார் நாத்திகச் சாட்டையால் கடவுள், வர்ணம், சாதி, முதலாளித்துவம், காலனித்துவம் என அனைத்தையும் வெளுத்தார். அவர் தொண்டர்கள் 'கடவுளோடு' நிறுத்திக் கொண்டனர். பெரியார்க்குத் துரோகமிழைத்தனர்; பெரியார் 'தர்கா' ஆனார். பெரியார் 'அன்று' என்னவோ அது இன்றும் தொடர்கிறது; எனவே பெரியார் தேவைப்படுகிறார்.

இவ்வளவு எளிய செய்தியா இது? அல்ல! இது விளக்கத்தின் முதல் ஒளிக் கீற்று! பெரியாரை ஆதரித்தவர்கள் எல்லோருமே நாத்திகர்களோ, வர்ண ஒழிப்பாளர்களோ, சோசலிஸ்டுகளோ அல்லர் என்பது வெளிப்படை. ஆனால் எல்லோரும், விதிவிலக்கே இன்றி, ஒன்றுபட்டுப் பெரியாரை ஆதரித்த ஒரு புள்ளி உண்டு. அதுதான் வகுப்புரிமை - இடஒதுக்கீட்டு உரிமையாகும். பெரியார் காலத்திலேயே பேரளவில் தமிழ்நாட்டில் இந்தக் கொள்கை வெற்றி பெற்றது. ஆஸ்திகர், சாதி வெறியர், மதவெறியர், பெண்ணடிமையாளர், முதலாளித்துவ வாதிகள், இந்திய தேசியத் தமிழர் என அனைவர்க்கும் இது - இந்த வகுப்புரிமை- பொதுவானதாக, தேவையானதாக இருந்தது. ஒன்றிணைந்தவர், பெரியாரைத் தூக்கிப் பிடித்தனர், போராடினர், வென்றனர். இடஒதுக்கீடு 75% மக்களுக்கு 69% வரை தமிழ்நாட்டில் சென்றது. பொதுப்பட்டியலின் முதல் ஏழு நிலைகளை அடையும் அளவிற்கு இவர்கள் முன்னேறியுள்ளனர். தங்கள் கோரிக்கை முடிந்ததும் வென்றதும் பெரியாரைத் 'தொப்'பெனத் தூக்கிப் போட்டு விட்டு ஓடினர்; எங்கே? சாதி (சங்கம்) வெறி, மதவெறி, ஊழல் வெறி, ஆங்கில வெறி, முதலாளித்துவ வெறி, பண்பாட்டுச் சீரழிவு வெறி என வெறியர் கூட்டம் தங்களுக்கான அரசியல் அமைப்புகளை உருவாக்கிக் கொண்டன. எனவே பெரியார் தோற்றார்; எனவே பெரியாரின் 'அன்று' தொடர்கிறது; எனவே பெரியார் இன்றும் தேவைப்படுகிறார்.

பெரியார் 50 ஆண்டுகாலம் இரத்தம் பாய்ச்சிப் பணியாற்றிய பின்பும் பெரியாரின் 'அன்று' அப்படியே தொடர்கிறது என்றால், பெரியாரியமே கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டாமா? எதிரி இந்தக் கேள்வியைக் கேட்கிறானோ இல்லையோ நாம் கேட்டே ஆக வேண்டும். அதுவே தத்துவத்தின் வெற்றியாகும்.

பெரியாரியத்தின் தர்க்க ரீதியான (logical end) முடிவு, இன்றைய சீரழிந்த / ஊழல் நிறைந்த திராவிடக் கட்சிகள், மற்றும் அவற்றின் கால் நக்கிகள், சாதிக் கட்சிகள், மதவெறி கொழுந்து விடல், தீண்டாமையும் தாழ்த்தப்பட்டோர் மீது தொடுக்கப்படும் உடல்சார், பால்சார் கொடுமைகள், விநாயகர் ஊர்வலங்கள், தாமிரபரணியில் மூழ்கடிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட தொழிலாளர்கள், கட்சிக் கூட்டு உண்டென்றாலும் தாழ்த்தப்பட்டவர்க்கு வாக்களிக்காத பிற்படுத்தப்பட்டோர் - இவைதான் என்றால் பெரியாரியலில் எங்கே குறை இருக்கிறது? பெரியார் எங்கே இருந்தார்? எங்கே இருக்கிறார்? இவை ஆராயப்பட வேண்டாமா?

1. காலனித்துவம் வேரோடு களையப்பட்டு, தூக்கியெறியப்பட்டு, காலனியவாதிகளின் சொத்துக்கள் அனைத்தும் நஷ்ட ஈடு கொடுக்கப்படாமல் பறிமுதல் செய்யப்பட்டு அவை

படிப்பகம்

www.padippakam.com



அனைத்தும் தேசியச் சொத்தாக்கப்பட வேண்டும் என்று கூறிய பெரியாரிசத்தின் தொடர்ச்சிச் செயல்பாடுகள் என்ன?

2. 1940 சனவரியில் பம்பாயில் நடைபெற்ற 'அம்பேத்கர், ஜின்னா, பெரியார்' முத்தரப்புக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது என்ன? அதன் தொடர்ச்சி என்ன? இந்த முக்கூட்டின் தத்துவம்தான் என்ன? இதைவெறுமனே தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், முஸ்லிம் கூட்டு எனக் கொச்சையாகப் புரிந்து கொள்ளக் கூடாது.

3. கிராமங்களில் இருந்து பெரியார் இயக்கம் ஏன் தீவிரமாக நகரங்களுக்கு (பிராமணாள் கபே ஒழிப்பு முதலியன) இடம் பெயர்ந்தது?

4. 1931க்கு முன்பிருந்த 'சமதர்மம்' பேசிய, மாஓவை வரவேற்ற, ஸ்டாலினை ஆதரித்த பெரியார், ரஷ்யாவுக்குச் சென்று திரும்பிய பிறகு, மிகத் தீவிரமாக 'தோழர்', 'இரஷிய நீதி, 'கூட்டுறவு', 'பெண்ணுரிமை' முதலானவற்றைப் பேசியிருந்தும், பெரியார்ப் பணிகள் எதனால் வகுப்புரிமை, நாத்திகம் எனச் சுருக்கப்பட்டன?

5. கிரிப்ஸ் மிஷனால் பெரியார் கோரிக்கை- தனி நாடு கோரிக்கை நிராகரிக்கப்பட்ட பின்பு அதன் வெற்றிக்குப் பெரியாரும் கட்சியும் செய்த பணிகள் யாவை?

6. மாபெரும் பகுத்தறிவு மேதையாக இருந்த பெரியார், பைசா பைசாவாக உண்மையுடனும், நெறியுடனும் கட்சிக் கொள்கைக்காகப் பணம் சேர்த்த பெரியார், அதை நிறுவனப்படுத்துவதிலும், அது எப்படிச் செலவிடப்படவேண்டும் என்பதிலும் கவலையற்றும் அக்கறையற்றும் இருந்து விட்டுப் போனாரே, இதன் விளைவுகள்தான் என்ன?

சுருங்கச் சொன்னால் பெரியாரின் புரட்சிகரத் தத்துவத்திற்கும் நடைமுறைக்கும் கட்சிக்கும் இடையே நிலவிய பயங்கரமான இடைவெளியில் முளைத்த காளான்கள் அரசதிகாரம், சமூக அதிகாரம், அதிகார வர்க்க அதிகாரம் பெற்றன! பெரியார் வீழ்ந்தார், இனி என்ன?

## II

பெரியார் இன்றும் தேவைப்படுகிறார் எனும்போது, குறிப்பாகத் தமிழ்நாட்டில், அவர் காலத்திய அதே சமுதாய அரசியல் நிலைமைகளே இன்னும் நிலவுகின்றன என்றால் நாம் பொதுவாகவே வரலாற்றையும் அரசியலையும் பிறழ உணர்ந்தவர்களாவோம். எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் அந்த மாற்றங்கள் யாவும் வளர்ச்சிக்குத் துணை செய்யும் மாற்றங்களாக அமைந்துள்ளனவா, வரலாற்றைப் பின்னுக்கு இழுப்பனவாக உள்ளனவா, பெரியாரின் ஆதரவு அல்லது எதிர்ச் சக்திகளுக்குத் தலைமை அளித்துள்ளனவா என்பவைதான் நாம் ஆராய வேண்டிய வினாக்கள்.

தமிழ்நாட்டில் கல்வி பெருகியுள்ளது; பிற்படுத்தப்பட்ட மக்களும் தாழ்த்தப்பட்ட மக்களும்தான் அதிகார வர்க்கத்தில் கணிசமாக உள்ளனர். காவல்துறை பிற்படுத்தப்பட்ட மக்கள் கையில்தான் உள்ளது. கிராமத்தில் ஆட்சி அதிகாரம் பிற்படுத்தப்பட்ட மக்களிடமே உள்ளது. நிலவுடைமை பார்ப்பனர் அல்லாத வேளாளர்களிடமும் பிற்படுத்தப்பட்டோரிடமுமே உள்ளது; தாழ்த்தப்பட்டோர் இன்னும் இவர்களைச் சார்ந்த உழைப்புக் கூலிகளாகவே உள்ளனர். ஒப்புக் கொள்கிறோமோ இல்லையோ, *1967* முதல் ஏறக்குறைய *34* ஆண்டு காலம் தமிழ்நாட்டில் பெரியார் பெயர் சொல்லும் திராவிடக் கட்சிகளின் ஆட்சிகளே உள்ளன. யாரும் இட ஒதுக்கீட்டை எதிர்த்து அரசியல் ஆதிக்கம் பெற்றுவிட முடியாது. பல்கலைக் கழக, கல்லூரி, பள்ளி ஆசிரியர்கள் பெரும்பாலோர் பார்ப்பனர் அல்லாதவர்களே! டி.வி.எஸ். போன்ற ஓரிரு பெரிய தொழிற்சாலைகளைத் தவிர சிமெண்ட் உற்பத்தி, சர்க்கரை ஆலைகள், பேருந்து கம்பெனிகள், தோல் வணிகம், துணி உற்பத்தி, கட்டடத் தொழில் இப்படிப்பட்ட தொழில்களில் பார்ப்பனர் அல்லாதாரே அதிகம். இந்தப் பட்டியல் இன்னும் நீளக் கூடும்.

தமிழ்நாட்டின் பத்திரிகைகளும் தொடர்புச் சாதனமும் இன்னும் பார்ப்பனர்கள் கையில்தான் உள்ளன. பிற்படுத்தப்பட்டோரிடம் உள்ள சாதனங்களோ, பார்ப்பனர்களை விட மிக அதிகமாகச் சமுதாயத்திற்குக் கேடு செய்வனவாக உள்ளன. குடும்பம், வணிகம் என்ற இரண்டைத் தாண்டி இவை வெளியே வந்ததில்லை. அதிகார வர்க்கத்திற்கு வந்த பிற்படுத்தப்பட்டவர்களைப் போலவே தொடர்புச் சாதனத்தை வளர்த்துக் கொண்ட இவர்களும் எல்லா வகையிலும் பெரிய வணிகக் குடும்பங்களாக **"international corporate business houses'** தங்களை உயர்த்திக் கொள்ளவே முயல்கின்றனர். நீதியும், கோயிலும் இன்னும் மேல் சாதியிடமே உள்ளன. மிகக் கேவலமான வளர்ச்சி - ஒரு திராவிடக் கட்சி இந்து வெறியர் காலிலும், இன்னொரு பெரியார் கட்சி பார்ப்பனக் காலிலும் தங்கள் இனத்தின் சுயமரியாதையை அடகு வைத்து விட்டதுதான்.

சாதிக் கட்சிகளும் சங்கங்களும் வளர்ந்துள்ளன; பெருகியுள்ளன. திரு.வி.க., பாரதிதாசன் உட்படப் பலரும் சாதிக்குள் - சாதிப் பெருமைக்குள்

படிப்பகம்

www.padippakam.com



அடக்கப்படுகின்றனர். இந்துவெறிச் சக்திகள் அனைத்தும் முனைப்பாய்ச் செயல்படுவதும், இவற்றை எதிர்த்து எந்தக் குழுவும் வீதிக்கு வந்து போராட முடியாமல் இருப்பதும் கண் கூடு. இந்தியாவில் 'பிஜேபி' என்ற மதவெறி அரசியல் கட்சிக்கு, அரசியல் ரீதியில் எதிராகப் பல்வேறு கட்சிகள், அமைப்புகள் நாடு முழுக்க உள்ளன. ஆனால் 'இந்துத்வா' என்ற அதன் பாசிசத் தத்துவவெறியைத் தத்துவ ரீதியில் எதிர்த்துப் போரிட்ட ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். இப்போது அந்தத் தமிழ்நாடும் - 50 ஆண்டு காலம் பெரியார் உழைப்புக்குப் பின்னைய தமிழ்நாடும், தத்துவ ரீதியில் வீழ்ந்து விட்டது!

ஆக, பார்ப்பனர் அல்லாதார் எழுச்சி, பார்ப்பனரையும் உள்ளிட்ட தமிழர் அய்க்கியமாக உருப்பெறாமல், சாதி வெறியாகத் துண்டு துண்டாகச் சிதறி விட்டது; தமிழர் ஓர் இனமாக இறுக்கமாகக் கெட்டிப்படாததால், தனிநாடு அல்லது உண்மையான கூட்டாட்சி என்பதின் அருகில் கூட வரமுடியாததோடு ஒற்றையுறுப்பு மய்ய ஆட்சிக்கு வெளிப்படையாக அடிமைச் சேவகம் செய்து கொண்டுள்ளது. இந்தியாவை, இராணுவம் - பொருளாதாரம் ஆகியவற்றில் ஓர் அலகாகக் (One Unit) கருதி அதன் அடிப்படையில் பொருளாதாரக் கொள்கையை எந்தக் காலத்திலும் எந்த நிலையிலும் எந்தத் திராவிட - தமிழர் அரசியல் கட்சியும் வகுத்துக் கொண்டதில்லை. இதன் விளைவாக உலக நாடுகளின் சுரண்டல், மய்ய அரசின் சுரண்டல், பனியா - மார்வாரிகளின் சுரண்டல் இவற்றைத் தமிழகம் எதிர்க்க முடியாததோடு, தமிழ்நாட்டின் வாய்ப்புப் பெற்ற பணமுதலைகள் சாதி வேறுபாடு இன்றி இந்தப் பொருளாதாரச் சுரண்டலின் கூட்டாளிகள் ஆனார்கள். மேலே கூறிய நிலைமைகளைத் தொகுத்து பொதுமைப்படுத்திக் கூறுவது என்றால், 'பார்ப்பனியம் + முதலாளித்துவம் என்ற கூட்டுச் சுரண்டல் மற்றும் ஒடுக்கு முறையின் பல்வேறு தளங்களில் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார், பிற்படுத்தப்பட்டோர் எனப் பலரும் இடம் பெற்றிருப்பதை வெளிப்படையாகக் காண முடியும்' எனக் கூறலாம். இந்த நிலைமை விந்தையான ஒன்று அல்ல; பெரியாரை அவர் காலத்திலேயே வீழ்த்த முடியாத அவர் எதிரிகள் அவரை 'மகான்' ஆக்கப் புற அளவில் முயன்றதும், அவருடைய தோழர்கள் என்போர் நுட்பமாக ஆங்கிலக் கல்வி பெற்ற அண்ணாத்துரை போன்றோர் - பெரியாரியலைத் தத்துவப்படுத்தி அதற்கான புரட்சிகரக் கட்சியைக் கட்டாததோடு, அவர்தம் தத்துவத்தில் இருந்து இழிந்து அவரை விட்டு ஓடியதும், தொடர்ந்து அவரைப் பின்பற்றியோர் தங்கள் நிலவுடைமைத் தத்துவ நலன்களைச் சிறிதளவும் விட்டு விடாமல், அவருடைய நாத்திகக் கொள்கைகள் மற்றும் இடஒதுக்கீடு நலன்களில் மட்டும் காலூன்றியதும்தான் பெரியார் அவர் காலத்திலேயே வீழ்த்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகும்.

அப்படியானால் 'பெரியார்', 'பெரியாரியம்', என்பது 'இன்று' என்ன? பெரியார் 'அன்று' என்பதை விளங்கிக் கொண்டது போலவே, பெரியார் 'இன்று' என்பதையும் விளங்கிக் கொள்ள முயல வேண்டும்.

முதற்கண், இன்றைய பெரியாரியம் என்பது வெறுமனே ஒரு சமுதாயச் சீர்திருத்த - கடவுள், மதம், சாதி, பார்ப்பனர், புராணம் இவற்றைக் கிண்டல் செய்தல், மூட நம்பிக்கை ஒழிப்பு ஊர்வலம் நடத்தல்... - கோட்பாடு அல்ல என்பதைத் தெளிவாகக் கூறுகிறேன்.

பெரியாரியம் என்பது மய்யப்படுத்தப்பட்டுவிட்ட நவகாலனியச் சுரண்டலுக்கும், இந்துத்துவ வெறி ஒடுக்கு முறைக்கும், கிராமங்களில் நிலவும் அனைத்து வகை ஆதிக்கச் சாதிகளின் ஒடுக்கு முறைக்கும் எதிரான சமரசமற்ற ஓர் அரசியல் போராட்டமாகும். அதாவது மய்யப்படுத்தப்பட்ட இராணுவத்திற்கும், இந்துத்துவப் பாசிச அரசுக்கும் (State), அனுமதிக்கப்பட்ட/ போராடிப் பெற்ற எல்லா ஜனநாயக உரிமைகளும் பறிக்கப்பட்டு விட்ட ஒடுக்குமுறை வடிவங்களுக்கும் (anarchic rule of law) எதிரான - குறைந்தபட்ச ஜனநாயக உரிமைகளின் மீட்சிக்கான, அனைத்திந்திய அளவில் நடைபெற வேண்டிய அரசியலும் அதன் தத்துவமும் ஆகும். பெரியாரை அவருடைய அதே பழைய வடிவத்திலேயே பயன்படுத்த முயலாமல் - பயன்படுத்த முடியாது - கருத்தைக் கூர்மைப்படுத்தியும், தளத்தை (நேயச் சக்திகளை) விரிவுபடுத்தியும் நடத்த வேண்டிய அனைத்திந்திய அரசியலாகும்.

இங்கே, நான், இன்றைய பெரியாரிஸ்ட்டுகளின் வகை பற்றியும் நேயச் சக்திகள் பற்றியும் சில குறிப்பையாவது எழுத வேண்டும். மொழி நலச் சக்திகள், தமிழர் தேசியச் சக்திகள், தமிழின விடுதலைச் சக்திகள், வகுப்புரிமையை ஒப்புக் கொண்ட மார்க்சிய லெனினியச் சக்திகள், வர்க்கப் போராட்டத்தை அரசியல் தலைமையாகக் கொண்ட சக்திகள் முதலியன பெரியாரிசத்திற்கு எதிராகப் போகாத, ஆதரவு தரக் கூடிய நேசச் சக்திகளாகும். ஆனால் ஒரு தத்துவம் அதற்கான நேசச் சக்திகளால் மட்டும் வெற்றிபெற்று விடக் கூடியது அன்று; அந்தத் தத்துவத்திற்கென்றே புரட்சிகரக் கட்சி ஒன்று வலுவாகக் கட்டப்பட வேண்டும். இப்படிப்பட்ட

படிப்பகம்

www.padippakam.com



கட்சி நேற்று முதல் - பெரியார் காலம் முதல் இன்று வரை இல்லை, இல்லவே இல்லை என்பதுதான் கசப்பான, ஆனால் பெரியாரைப் போன்ற - பூமி சூரியனைச் சுற்றி வருகிறது என்பது போன்ற உண்மை.

பெரியாரிஸ்ட்டுகளில் பெரும்பாலோர் பெரியார் பக்தர்கள்; அவர் தும்மியது போலவே தாங்களும் தும்ம வேண்டும் என்ற பரவச பக்தியில் மூக்கின் அழுக்கைக் குடைபவர்கள்; இவர்கள் தும்மி ஓய்வர்! அடுத்த நிலையினர் பெரியார் வியாபாரிகளும் துரோகிகளும் ஆவர். உணர்வு பூர்வமாகக் காசை வழிபடுபவர்களும், தங்கள் உடைமை நலனில் இருந்து தத்துவத்தைத் திரிப்பவர்களும் ஆவர். ஆளும் கணத்தாரின் ஆதரவு பெற்ற இவர்கள் பெரியாரிசத்தின் எதிரிகளுக்குப் பெரியார் பெயரில் ஆதரவளிப்பவர்கள்; அபாயமானவர்கள்! மூன்றாவது நிலையினர் பெரியார் வீரர்கள். சுயநலமற்ற இந்தத் தோழர்கள் பெரியாரைத் தங்கள் ஆர்வத்தாலும் அறியாமையாலும், சில சமயம் அறிவு அகம்பாவத்தாலும், பல சமயம் தலைமை மேட்டிமையாலும், பெரியாரைத் தங்கள் கால், அரை, முக்கால், ஒன்றரைக் கண்ணால் பார்த்து இன்றுவரை அழிந்து போகிறார்கள்; இவர்கள் பல பிரிவினர்; இவர்களுடைய அனுகூலக் கூறு, இவர்கள் எதையும் இழக்கத் துணிந்த சுயநலமற்ற தொண்டர்கள் என்பதுதான். முதலில் இவர்களைத் தத்துவப் படுத்துவது என்பதுதான் மிகப் பெரிய தேவையாகவும் நடைமுறையாகவும் இருக்கிறது.

1. பெரியாருக்கு அரசு (State) பற்றி எந்தக் கண்ணோட்டமும் இல்லை.

2. பெரியார் 'நாத்திகம்' என்ற சொல்லை எங்கெல்லாம் தத்துவப் பொருளில் பயன்படுத்தினாரோ அங்கெல்லாம் 'சோசலிசம்' பற்றிப் பேசியுள்ளார்.

3. பெரியார் பெண் விடுதலையைச் சோசலிசத்தின் உடன் நிபந்தனையாக வைத்தார்.

4. 'பார்ப்பான்' என்ற சொல்லை 'ஒடுக்குமுறை' வடிவமாகக் கூறிய அனைத்து இடங்களிலும் 'மேல்சாதி' என்ற சொல்லையும் பயன்படுத்தினார்.

5. பெரியார் வகுப்புவாரி உரிமையைப் பற்றி மிகக் குறைவாகவே எழுதினார்; பேசினார்.

6. கிராமங்களில் சாதி உரிமையைத் தகர்த்தெறிவதையும், பெண் விடுதலையையும் உடன் நிபந்தனையாகக் கொண்ட, சோசலிசத்தை நோக்கிய ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டங்களே இன்றைய பெரியாரியம்

இந்தக் கருத்துகளை எந்த அளவில் புரிந்து உள்வாங்கிக் கொண்டோம் என்பதைப் பொறுத்தே பெரியாரிஸ்ட்டுகளின் பலமும் பலவீனமும் தீர்மானிக்கப்படும்.

III

இன்றைய பெரியாரியத்தை வரையறுத்தல் அல்லது புரிந்து கொள்ளுதல் வெறும் தத்துவ வேலை அன்று; அது நடைமுறை அரசியல் வேலைகளும் அதனூடே செய்யப்பட வேண்டிய படிப்பு - விவாத வேலைகளும் ஆகும். பெரியாரியம் என்பது தனித்து இயங்கக் கூடிய (absolute) கட்டளைகளின் தொகுப்பு அன்று; அது பலருடைய, அரசியல் போராட்ட முன்னோடிகளின், அனுபவங்களில் இருந்து செதுக்கி அமைக்கப்பட வேண்டிய வேலைத் திட்டமாகும். சோதிபா புலே, அயோத்திதாசப் பண்டிதர், அம்பேத்கர் போன்ற இந்தியப் போராளிகளின் அரசியல் நடைமுறைகள், வெற்றிகள், தோல்விகள்; மார்க்சியத்தின் வெற்றிகள் தோல்விகள் ஆகிய அனைத்திற்கும் அப்பாற்பட்டு இன்றைய பெரியாரியம் இயங்கும் என நாம் ஆசை கொண்டோமானால், கனவு கண்டோமானால் - சந்தாக் கம்யூனிஸ்டுகள், வேதக் கம்யூனிஸ்டுகள், தரகுக் கம்யூனிஸ்டுகள் எனக் - கம்யூனிசம் கம்யூனிஸ்டுகளால் கொலை செய்யப்பட்டதைப் போல, பெரியாரிசம் தமிழ் விடுதலைப் போராளிகள், தமிழ்நாட்டு விடுதலைப் போராளிகள், மூட நம்பிக்கை ஒழிப்பாளிகள், வகுப்புரிமை கம்யூனிஸ்டுகள் எனப் பல சறுக்கல்களாய்ச் சீரழியும். இந்த அபாயத்தை முன்னுணராமல் போனால் பெரியார் வீரர்களால் மீண்டும் ஒரு 50 ஆண்டுகள் பெரியாரிசம் ஆராய்ச்சிக்குரிய பொருளாகவே நிறுத்தப்படும்.

இந்த முன்னுரையின் அடிப்படையில், பெரியார் இன்றும் தேவைப்படுகிறார் என்பதற்கான அரசியல் முழக்க இணைகள் சிலவற்றைக் குறிப்பிட்டு இந்தக் கட்டுரையை முடிக்க விரும்புகிறேன். இன்று நாடு தழுவி இயக்கப்படும் மக்களுக்கான அரசியல் முழக்க இணைகள்:

1. இந்துத்துவ எதிர்ப்பும் மதச்சார்பின்மை ஆதரவும் (anti-Hinduttva and pro- Secularism)

2. மய்ய அரசு எதிர்ப்பும் இனங்களுக்கான ஆதரவும் (anti - Centre and pro - Nationalities)

3. நிலவுடைமை எதிர்ப்பும் சோசலிச ஆதரவும் (anti - Feudal and pro- Socialism)

4. காலனிய எதிர்ப்பும் - தேசங்களின் விடுதலை ஆதரவும் (anti - Colonial and pro-Liberation of Nations)

படிப்பகம்

www.padippakam.com



இப்படிச் சிலவற்றை அடுக்க முடியும். இவை நான்கும் இன்ன பிறவும் தனித்தனியே இயங்கக் கூடிய அரசியல் போராட்டங்கள் அல்ல என்பது வெளிப்படை. ஒவ்வொன்றும் அதனதன் தன்மையில் வெளிப்படையான தேவைகளையும் நடைமுறை களையும் வகுப்பு நலன்களையும் கொண்டவை. இவை விரிவான விவாதத்திற்கும் செழுமைக்கும் உரியவை.

ஆனால், இன்றைய மதவெறி நவகாலனியப் பாசிச அரசுக் கட்டமைப்புக்கு எதிராகவும், அனைத்து ஆதரவு (pro) கொள்கைகளுக்கான ஜனநாயக உரிமைகளின் அரசியல் போராட்டங்களுக்கு ஆதரவாகவும் எந்த அரசியல் முழக்க இணையின் மீது - அதாவது எந்த முழக்கத்தைத் தலைமையாகக் கொண்டு - நடைமுறைகளை, வேலைத் திட்டங்களைத் தொடங்கு வது - தொடருவது என்றால், நான் 'நிலவுடைமை எதிர்ப்பையும் சோசலிச ஆதரவையுமே' கொள்வேன்.

கிராமத்தில் சாதியுரிமைகளின் அடிப்படையிலான பெருமைகளையும் ஒடுக்குமுறைகளையும் தகர்த் தெறிவது என்றாலும், ஏகாதிபத்திய - காலனிய எதிர்ப்பு என்றாலும் இனங்களின் விடுதலை என்றாலும், 'நிலவுடைமை எதிர்ப்பு - சோசலிச ஆதரவு' என்ற அரசியல் முழக்கமே, அதன் தலைமையே முன்னிறுத்தப்பட வேண்டும் என்பது என் கருத்தாகும். இந்த வகையில் நாம் பெரியாரியலைப் புத்தாக்கம் செய்ய முனைகிறோம் என்றால் பெரியார் இன்றும் தேவைப்படுகிறார் எனப் பொருள்படும். இதை விடுத்து நாம் பெரியாரைச் சுருக்கிப் பார்க்க - நம் தேவைக்கும் வசதிக்கும் ஏற்ப, கீழிறக்கிப் பார்க்க முயன்றோமானால் அது எல்லைத் தெய்வங்களுக்குக் கொண்டாடும் பண்டிகையாக முடிந்து விடும். அப்படித்தான் முடிந்து விட்டது என்பதற்கான வாக்குச் சீட்டுச் சாட்சிகள்தான் திராவிடங்களின் ஆட்சிகளும், திராவிடங்களின் ஆதரவு பெற்ற இந்துவெறி மய்ய ஆட்சியும், அவ்வப்போது நாம் நடத்தும் பெரியார் ஊர்வலங்களும் ஆகும்.

பெரியாரைச் சரியாகப் புரிந்து கொண்டு அரசியல் வேலை செய்திருந்தோமானால், விநாயகர் ஊர்வலங்கள் நடைபெற்றிருக்க முடியாது; பாபர் மசூதி உடைக்கப்பட்டிருக்க முடியாது; இந்தியப் பொருளாதாரம் முழுக்க முழுக்க தனியார்மயப்பட முடியாது; மொழி, இனம், மதம், பண்பாடு என எதுவும் ஒற்றை (mono) எனத் திணிக்கப்படாமல், பல (multi) என நிறுவப்பட்டிருக்கும். இந்தியாவின் பன்முகத் தன்மைக்காக (multi, plural, many) நடத்தப் பெற்று அவ்வப்போது வெற்றியும் பெற்ற வளர்ச்சிகள் அனைத்தும் ஒழிக்கப் பெற்று, ஒற்றைத் தன்மைக்கான (single, mono, onlyone) அரசதிகாரம் நிறுவப்பட்டு விட்ட நிலைமையே 'பெரியார் இன்றும் தேவைப்படுகிறார்' என்பதற்கான அரசியலாகும்!

## IV

பெரியார் இன்றும் தேவைப்படுகிறார் என்பதைக் கூறும் நமது முழக்கங்கள்:

1. சாதி உரிமைப் பெருமைகளுக்கும் ஒடுக்கு முறைகளுக்கும் எதிரான வருணாசிரம ஒழிப்புப் போரை முன்னெடுப்போம்!

2. அரசிலிருந்தும், கல்வியிலிருந்தும் மதத்தை நீக்குவதான 'செக்யூலரிசத்'திற்காகப் பாடுபடுவோம்!

3. சோசலிச ஆட்சி நிறுவுதலுக்கான அறிவு கொள் கருவியாக நாத்திகத்தைப் பயன்படுத்துவோம்.

4. உலகமயமாக்கல் என்ற நாகரிக முகத்திரையோடு வந்துள்ள பன்னாட்டுக் கம்பெனிகளின் பொருளாதாரச் சுரண்டலை முறியடிப்பதே தேச பக்தியின் முன் நிபந்தனை ஆகும்.

5. தேசங்களின் விடுதலையையும், விடுதலை பெற்ற தேசிய இனங்களின் இந்தியக் கூட்டாட்சிக் காகவும் பாடுபடுவோம்.

ஒரு மனிதன் தன் இருத்தலுக்காகப் பிறர் இருத்தலை அங்கீகரிப்பதே அன்பும் மனிதாபிமானமும் ஆகும்.

*(தில்லியில் 'பெரியார் தொண்டு நிறுவனம்' வெளியிட்ட பெரியார் பிறந்த நாள், 23.9.2001 விழா மலர்)*


## நூல்கள் வேண்டும்
## உதவுங்கள்

**1. "DRAVIDIAN AND ARYAN'**
**By**
**P. CHIDAMBARAM PILLAI**
**Editor: "TAMILIAN'**
**NAGERCOIL**
**1936**

இந்த ஆங்கில நூல் என்னிடம் உள்ளது; ஆனால் இதில் சில பக்கங்கள் சிதைந்துள்ளன. எனவே நல்ல நிலையில் உள்ளது வேண்டும். உதவுங்கள்.

**2. "ARYAN RULE'**

3. ''ஆரிய ஆட்சி'' -ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் இந்நூல் உள்ளது. நூல் ஆசிரியர் HAVEL ஆவார். 1950 இல் இரண்டையும் படித்துள்ளேன். இவை இரண்டும் வேண்டும். உதவுங்கள்.

உரிய விலைகள் தந்து பெற்றுக் கொள்வேன். அல்லது ஒளிப்படம் எடுத்துக் கொடுத்தாலும் அதற்குரிய கட்டணத்தையும் அஞ்சல் செலவு களையும் ஏற்பேன்.

அறிஞர்கள், ஆய்வாளர்கள், நூலக உரிமையாளர் கள் அன்பு கூர்ந்து உதவுங்கள்.

*1.11.2001* அன்பன்

வே.ஆனைமுத்து


படிப்பகம்

www.padippakam.com



# இராமாயணம்

-ஈ.வெ. இராமசாமி

இராமாயணம் என்பது சூரிய குல அரசர்களின் சரித்திரங்களில் ஒன்று என்று பொதுவாகச் சொல்லப்பட்டாலும், இராமாயணம் என்னும் பெயரால் பல நூற்றுக்கணக்கான இராமாயணங்கள் இருந்ததாகவும், அவைகள் காலப் போக்கில் பல 'தெய்வீகக் காரணங்களால் மறைந்து போய் விட்டன' என்றும், ஆனாலும் இப்போது 24 விதமான இராமாயணங்கள் இருப்பதாகவும், அவற்றைத் தோழர் கோவிந்த தாஸ் அவர்கள் வடஇந்தியாவிலுள்ள ஒரு மடத்தில் தாமே நேரில் பார்த்ததாகவும் தாம் எழுதிய 'இந்து மதம்' என்ற புத்தகத்தில் எழுதியிருக்கிறார்.

அதை அனுசரித்தே சென்னை மயிலாப்பூர் 'இராமாயண விலாசம்' என்னும் கிருகத்தில் உள்ள இராமாயணப் பிரசுரகர்த்தாவாகிய திரு. சி.ஆர். சீனிவாசய்யங்கார் என்பவரால் எழுதப்பட்டு, 1928 ஆம் வருடத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கும் 'இதர இராமாயணங்கள்' என்னும் புத்தகத்தில் மேற்கண்ட விஷயங்கள் விளக்கப்பட்டு, முதல் தடவையாக நான்கு இராமாயணங்கள் அதில் விவரிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கின்றன. அப் புத்தகத்தின் விலை ரூபாய் ஒன்று. அவையாவன - ஜைன இராமாயணம், பவுத்த இராமாயணம், யவன இராமாயணம், கிறைஸ்த இராமாயணம் என்பவைகள்ளாகும்.

இவற்றுள் யவன இராமாயணம், கிறைஸ்த இராமாயணம் ஆகியவைகள் பெரும்பாலும் இராமாயணக் கதையைப் போன்ற போக்கில் இருந்தாலும், கதைகளில் வரும் பாத்திரங்களின் பெயர்களும் மற்ற சில்லரை விஷயங்களும் பெரிதும் மாறுபட்டு அந்தந்த மொழிக்கு ஏற்ற பெயர்களாக இருப்பதால் அதை நாம் இதில் எடுத்துக் கொண்ட விஷயத்திற்கு உபயோகித்துக்கொள்ள விரும்ப வில்லை.

ஆனாலும், மற்ற இரண்டும் -அதாவது ஜைன, பவுத்த இராமாயணங்கள் பெரிதும் கதைப் போக்கிலும் பெயர்களிலும் எல்லாம் பொருத்தமாக இருக்கின்றன. ஆனால், சில்லரை விஷயங்களில் மாத்திரம் பல விஷயங்கள் மாறுபட்டிருக்கின்றன.

அதில் ஜைன இராமாயணம் என்பது இப்போதும் அடையாற்றுப் புத்தக சாலையில் வைக்கப் பட்டிருப்பதாகப் பதிப்பாசிரியரே எழுதியிருக்கிறார். அதில் தசரதன், இராவணன் முதலியவர்களுடைய சந்ததிக் கிரமம், பிறப்பு, வளர்ப்பு முதலியவைகள் சிறிது வித்தியாசப் பட்டாலும் மூல புருஷனாகிய தசரதனை அப்படியே ஏற்றுக் கொண்டு, அவனுக்கு நான்கு மனைவிகள் என்றும் அவர்களின் பெயர்கள் (1) அபராஜிதை, (2) சுமத்திரை, (3) கைகேயி, (4) சுப்ரபை என்றும் குறிப்பிட்டுவிட்டு, கைகேயிக்குத் தசரதன் கொடுத்த இரண்டு வரங்களையும் அப்படியே குறித்திருப்பதுடன் அபராஜிதைக்கு இராமன் பிறந்ததாகவும், சுமத்திரைக்கு இலட்சுமணன் பிறந்ததாகவும், கைகேயிக்குப் பரதன் பிறந்ததாகவும், சுப்ரபைக்குச் சத்துருக்கன் பிறந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது.

இதுபோலவே, சீதையை ஜனகராஜனுடைய மகள் என்றும், வில்லை வளைப்பவனுக்கு ஜனகன் சீதையைக் கொடுப்பதாக நிபந்தனை வைத்திருந்தானென்றும், ஆகவே வில்லை வளைத்தே இராமன் சீதையை மணந்தான் என்றும் இலட்சுமணனுக்கு 18 பெண்சாதிகள் என்றும் பரதனுக்கு ஜனகனுடைய சகோதரரின் குமாரத்தி கொடுக்கப்பட்டாளென்றும் சொல்லப்பட்டிருக் கின்றது.

மற்ற பட்டாபிஷேகக் கதையும் வால்மீகி இராமாயணத்தைப் போலவே இருந்தாலும், சிறு சிறு மாறுதல்களுடன் - தபசு செய்ததற்காகச் சம்புகன் வதைக்கப்பட்டதும் குறிக்கப்பட்டிருப்பதோடு - இராமனுக்கு நான்கு பெண்சாதிகள் என்றும் அவர்களின் பெயர்கள் (1) சீதை, (2) பிரபாவதி, (3) ரதினிபா, (4) ஸ்ரீதாமா என்பவர்கள் என்றும் குறிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஆதாரம் வால்மீகி இராமாயணத்திலும் கூட இருக்கிறது.

பவுத்த இராமாயணத்திலும், தசரதனுக்குப் பதினாயிரம் மனைவிகள் என்றும், அவர்களில் மூத்தவளுக்கு இராமன், இலட்சுமணன் என்பவர்களான இரண்டு ஆண்களும், சீதை என்று ஒரு பெண்ணும் ஆக மூன்று குழந்தைகள் பிறந்தன என்றும்; அடுத்த மனைவிக்குப் பரதன் என்ற ஓர் ஆண் குழந்தை மாத்திரம் பிறந்தது என்றும்; அரசன் பரதனுக்குப் பட்டங் கொடுப்பதாய் இளைய மனைவிக்கு வாக்குக் கொடுத்திருந்தான் என்றும்; ஆனால், அரசன் அப்படிச் செய்யாமல் இராமனுக்குப் பட்டம் கொடுக்க ஏற்பாடு செய்தான் என்றும்; இளைய மனைவி கட்டாயப்படுத்தினதால் பரதனுக்குப் பட்டம்

படிப்பகம்

www.padippakam.com



கொடுத்து விட்டு - இராமன், இலட்சுமணன், சீதை ஆகிய சகோதர சகோதரியைப் பரதன் கொன்று விடுவான் எனப் பயந்து காட்டுக்கனுப்பிவிட்டான் என்றும்; பரதன் தமையனைத் தேடிக் காட்டுக்குப் போய் இராமனையே ஒப்புக் கொள்ளச் சொன்னதாகவும்; இராமன் தன் தகப்பனார் இறந்த பிறகுதான் தன் நாட்டிற்குத் திரும்பி வர முடியும் என்றதாகவும்; அது வரை - அவனது பாதரட்சைகளையும் மற்ற சகோதர சகோதரிகளையும் அனுப்பும்படி பரதன் கேட்டு வாங்கி அழைத்து வந்ததாகவும்; பன்னிரண்டு வருடங்களான பின் தசரதன் இறந்து போனதாகவும்; பிறகு இராமன் அயோத்திக்கு வந்ததாகவும்; வந்தவுடன் ஊர் ஜனங்கள் இராமனுடைய தங்கையாகிய சீதையை அவளது தமையனாகிய இராமனுக்குக் கலியாணம் செய்வித்துப் பட்டங் கட்டினதாகவும் எழுதப்பட்டிருக்கிறது.

இவைகளை மெய்ப்பிக்கத் தோழர் அய்யங்கார்-அந்தக் காலத்தில் அண்ணனும் தங்கையும் கலியாணம் கொள்ளும் வழக்கம் உண்டு என்றும், எகிப்து தேச ராஜதர்மமே சகோதரியை மணப்பதுதான் என்றும், இதை அறிந்துதான் ரிக் வேதம் 10வது மண்டலத்தில் 10, 12 சுலோகங்களில் சகோதரியை மணப்பது கண்டிக்கப்பட்டிருக்கிறது என்றும், அதற்கு முன் அவ்வழக்கம் இருந்து வந்ததற்கு மேலும் ஆதாரமாகச் சூரியனும் அக்கினியும் தங்களது தங்கைகளையே மணந்து கொண்டிருக்கிறார்கள் என்றும் எழுதியிருக்கின்றார்.

தோழர் சி.ஆர். சீனிவாச அய்யங்கார் தாம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த வால்மீகி இராமாயணம் பின்பகுதிக் குறிப்பு 431ம் பக்கத்தில், சீதை தரசதனுடைய மகள் என்றும் அவளை தசரதன் ஜனகனுக்குத் தானம் கொடுத்தார் என்றும், அவள் பூமியில் பட்டால் பூமி இழுத்துக் கொள்ளும் என்றும், ஆதலால் பூமியில் விடாமல் காப்பாற்ற வேண்டுமென்ற நிபந்தனையுடன் தசரதன் கொடுத்தான் என்றும், ஜனகன் இல்லாதபோது ஒருநாள் சீதை பூமியின் மீது நின்று விட்டாள் என்றும், அதனால் அவள் பூமிக்குள் மறைந்து போய் விட்டாள் என்றும், பிறகு கொஞ்ச காலம் பொறுத்து ஜனகன் பூமியை உழும் போது சீதை பூமிக்குள்ளிருந்து கலப்பையில் தட்டுப்பட்டு ஜனகனால் எடுத்து வளர்க்கப்பட்டாள் என்றும், ஆனால் ஜனகனுக்கு - அவள்தான் முன்பு வளர்த்து வந்த சீதை என்று தோன்றவில்லை என்றும், ஆகவே அவளது தமையனாகிய இராமனுக்கு அவளைக் கலியாணம் செய்து கொடுத்து விட்டதாகவும் குறிப்பிட்டு விட்டு, இந்த விஷயம் வசிஷ்ட புராணத்திலும் ஸ்கண்டோத்திர புராணத்திலும் இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

அன்றியும், இதே தோழர் சீனிவாசய்யங்கார், 'எவனொருவன் தன்னுடைய தங்கையை மணம் செய்து கொள்கின்றானோ அவனது மனைவியைத் தூக்கிக் கொண்டு போவதால் உனக்கு மரணமுண்டு' என்று இராவணனுக்கு ஒரு காலத்தில் நாரதர் சாபம் கொடுத்திருந்ததாகவும், அந்தச் சாபத்தின் பலனாய் இராவணனானவன், இராமன் தன் தங்கையாகிய சீதையை மனைவியாக மணந்து கொண்ட விஷயம் தெரியாமல் சீதையைத் தூக்கிக் கொண்டு போனதாகவும், அதனாலேயே இராவணன் இராமனால் கொல்லப்பட்டதாகவும், இராவணனுக்கு உண்மையில் இராமன் தன் தங்கையைக் கட்டிக் கொண்டிருப்பது தெரியாதென்றும், தெரிந்திருந்தால் சீதையைத் தொட்டிருக்க மாட்டான் என்றும், இந்த உண்மைகள் 'பார்க்கவ புராணத்தில்' இருப்பதாகவும் மேற்கண்ட 431ம் பக்கத்திலேயே குறிப்பிட்டிருக்கின்றார்.

மற்றும், இதே தோழர் சீனிவாசய்யங்கார் அதற்குக் கீழேயே, சீதை இராவணன் மகள் என்றம் அவள் பிறந்த கால தோஷத்தால் தகப்பனுக்கு (இராவணனுக்கு) ஆபத்து விளையும் என்று நாரதர் இராவணனுக்குச் சொன்னதாகவும், அந்தக் காரணத்தால் இராவணன் தன் மகளாகிய சீதையை ஒரு பெட்டியில் வைத்து சமுத்திரத்தில் கொண்டு போய் எறிந்து விட்டதாகவும், அது ஜனகனது இராஜ்யத்தில் ஓடும் ஆற்றிலடித்துக் கொண்டுவரப்பட்டதாகவும், இராமனும் சீதையும் வனத்திலிருக்கும் போது சீதையைத் தன் மகள் என்று தெரியாமல் இராவணன் எடுத்துக் கொண்டு வந்து விட்டதாகவும் குறிப்பிட்டு விட்டு, இந்த உண்மை 'மவுட்கலிய இராமாயண'த்தில் இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

இவைகள் உண்மையாய் இருக்கலாம் என்பதற்கும் அவர் ஒரு யுக்திக் காரணமும் சொல்லுகின்றார். அதாவது, 'சீதையின் பிறப்பைப் பற்றியோ அவளது பழைய சந்ததியைப் பற்றியோ வால்மீகி எங்கும் ஒரு வரி கூட எழுதவில்லை. ஆதலால் இந்தக் கூற்றுகள் உண்மையாக இருக்கலாம் என்கின்றார்.

எனவே, சீதை தசரதனுக்கு மகள் என்பதற்கும் இராமனுக்குத் தங்கை என்பதற்கும் இதுவரை 4, 5 ஆதாரங்களும், இராவணனுக்கு மகள் என்பதற்கு இரண்டு ஆதாரங்களும் கிடைக்கின்றன. இன்னமும் மற்ற இராமாயணங்களில் என்னென்ன பந்தத்துவங்கள் இருக்குமென்று ஊகிக்கக் கூடவில்லை.

*('ஆனந்த விகடன்' வருஷ அனுபந்தம்; 'குடிஅரசு', 3.3.1929; - 'பகுத்தறிவு' 1.5.1936)*

*('பெரியார் சிந்தனைகள்', பக். 1431-1433)*

(தொடரும்)

படிப்பகம்

www.padippakam.com



# அமெரிக்கா - அல்-கொய்தா 'பயங்கரவாதம்' அழிக்கப்பட வழிதான் என்ன?

இரண்டாவது உலகப் போர் 1945 இல் முடிவுற்றது. அப்போதே உலகம் முழுவதையும் ஒரே மூச்சில் வானூர்தியில் சுற்றி வந்த விண்டல் வில்கி என்பவர், உலகம் ஒன்றாக வேண்டும் என்று ஒரு நூல் எழுதினார். ''ஒரே உலகம்'' (One World) என்பது அதன் பெயர்.

இப்படிப்பட்ட ஒரு கருத்தை, பிரிட்டிஷ் அயலுறவு அமைச்சர் ஹெர்பர்ட் மாரிசன், 7.10.1951 இல் வாஷிங்டனில் வானொலி உரையில் குறிப்பிட்டார். அவர்கள் குறிப்பிட்ட தன்மையிலான 'ஒரே உலகம்' மலரவில்லை. அதற்கு மாறாக மதவெறி - பணவெறி கொண்ட 'ஒரே உலகம்' தோன்றி விட்டது.

1951 அக்டோபரில் பாக்கிஸ்தானின் பிரதமரான லியாகத் அலிகான், ஆப்கனிஸ்தான் கோஸ்ட் பகுதியைச் சார்ந்த சையத் அக்பர் என்பவனால் சுட்டுக் கொல்லப்பட்டார். உலகமே அதிர்ச்சி அடைந்தது. இதுபற்றி, அமெரிக்காவிலிருந்து வெளியாகும் ''நியூயார்க் டைம்ஸ்'' ஏடு, அன்று பின்வருமாறு எழுதியது: ''வறுமையும் அறியாமையும் மத வெறியர்களை பயங்கரவாதச் செயல்களைச் செய்யத் தூண்டுகின்றன; இருக்கிற துன்பங்களைப் போக்கிட அறிவு ரீதியான தீர்வுகளைக் காண விரும்பாமல் அன்னிய நாட்டினரைத் தாக்குவதில் இது முடிகிறது'' என்று. ("The Hindu', 19.10.2001)

அந்த ஆப்கனிஸ்தானில், இன்று வாழ்வோர் ஏறக்குறைய 2 கோடி மக்கள். அண்மையில் அய்க்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அமைப்பு தந்த அறிக்கையின்படி, ஆப்கன் மக்களில் 70% பேர் வறுமையில் உழல்கிறார்கள்; 63% பேர் எழுத்தறிவு அற்றவர்கள்; 13% பேர் மட்டுமே ஓரளவு அடிப்படை வசதி பெற்றவர்கள்; 5 வயதுக்குள் உயிர் பிழைக்கிற வர்கள் 26% பேர்; ஆப்கனியர்களின் சராசரி வயது 40. வேளாண்மையே அவர்களின் முக்கியத்தொழில். அபின் உற்பத்தியே அவர்களின் முக்கிய வருமானம். அபின் வருமானமும் இப்போது தலிபானின் தடுப்பு நடவடிக்கையால் மிகவும் குறைந்து விட்டது.

தலிபானின் ஆட்சி அமைந்த பிறகு, இந்த மக்களுக்கு இஸ்லாமிய மதக் கல்வியைத் தர 20,000 மதரசாக்கள் (மதப் பள்ளிகள்) தொடங்கப்பட்டு விட்டன. ஆப்கன் தலிபான் - ஒசாமா பின் லேடனின் அல் - கொய்தா - பாக்கிஸ்தான் உளவு நிறுவனமான அய்.எஸ்.அய். இவற்றின் ஒரே வேலை, இந்த வகையில் இஸ்லாமியப் புனிதப் போருக்கு மக்களை ஆயத்தப்படுத்துவதுதான். இது உலகம் அறிந்த செய்தி. இதேபோன்ற மதரசாக்கள் - பெரியவை மட்டும், பாக்கிஸ்தானில் 5,000 உள்ளன.

இவ்வளவும் எதற்காக?

''இஸ்லாம் அல்லாதவர்கள் கடவுளுக்கு எதிரிகள் (Infidels). அவர்களைக் கொன்று குவிக்கும் புனிதப் போரில் ஒவ்வொரு இஸ்லாமியனும் ஈடுபட வேண்டும். அவனே அல்லாவை அடைவான். அங்கு எண்ணற்ற கன்னிப் பெண்களுடன் அவன் வாழ்வான்'' என்று கற்பிக்கப்பட்ட ஒரு மூட நம்பிக்கையை வெற்றி பெற வைக்கத்தான்.

இதே போன்ற மதவெறியை வளர்த்தெடுக்கக் கத்தோலிக்கர், புரோட்டஸ்டண்ட், பெந்தகோஸ்து, பவகாஷிஸ், மெட்ரங்காஷிஸ் என்கிற பிரிவுகளைச் சேர்ந்த கிறித்துவர்கள் - அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் பல்லாயிரக்கணக்கான இறை இயல் கல்லூரிகளை (Seminaries) அமைத்து இன்றும் கிறித்துவ மதவெறியை ஊட்டுகிறார்கள். இரண்டு நாடுகளின் அரசுகளும் இதை ஊக்குவிக்கின்றன.

இவர்களும், 'ஆண்டவனை அடைவதற்கு இயேசு மார்க்கமே 'ஒரே வழி' என்றே கற்பிக்கிறார்கள். ''அஞ்ஞானிகள்'' என்று மற்றவர்களுக்குப் பெயர் சூட்டி, அவர்களிடம் கிறித்துவத்தைப் பரப்பிட இவர்கள் எல்லாம் செய்கிறார்கள். கடந்த 5 நூற்றாண்டுகளில் இங்கிலாந்து, பிரான்சு, டச்சு, கிறித்தவர்கள் பல உலக நாடுகளில் ஆட்சி அமைத்து, ஆட்சி - கல்வி - மருத்துவம் மூலம் இதைத்தான் செய்தார்கள்.

இந்தியாவில், பார்ப்பானே புரோகிதன் - பார்ப்பானே அர்ச்சகன் - பார்ப்பானே வேதபாட சாலை - பிரமதேய, சதுர்வேதி மங்கல நில உடைமையாளன் என்கிற இவற்றுடன் கூட, கடந்த ஆயிரமாண்டுகளாகக் கல்வி ஆதிக்கம் - ஆட்சி ஆதிக்கம் - சமூக ஆதிக்கம் எல்லாவற்றையும்

படிப்பகம்

www.padippakam.com



கொண்டிருந்தனர், பார்ப்பனர். தமிழ்நாட்டில் தமிழ் அரசர்கள் - தெலுங்கு நாயக்கர் ஆட்சிகள் - நவாபுகள் ஆட்சிகள் - பிரெஞ்சு, இங்கிலாந்து வெள்ளையர் ஆட்சிகள் - காந்தியார் பெற்ற சுதந்தர இந்திய ஆட்சிக் காலங்கள் எல்லாவற்றிலும் இவர்களே ஆதிக்கம் செலுத்துகிறார்கள். இது போதாது என்று, இப்போது, படிப்பு அறிவு போதாத, வறுமையில் வதைகிறவர்கள் நிரம்பிய உ.பி., பீகார், குசராத், இராசஸ்தான் மற்றும் மற்ற மாநிலத்து இந்து மக்களிடம் மத வெறியை ஊட்டிட 'இராமன் கோவில்', 'கிருஷ்ணன் கோவில்' கட்டுகிற் பிரச்சினைகளையும், வேதக் கல்வியையும் முதன்மைப் படுத்தி, அதை பாரதிய சனதா தலைமையிலுள்ள ஆட்சி - நீதி மன்றம் - காவல் துறை - மற்றும் அடிமைக் கூட்டணிக் கட்சிகளின் ஆதரவு வழியாகவே சாதித்துக் கொள்ளத் திட்டமிடு கிறார்கள்.

இந்நாட்டிலுள்ளவர்களை இதிலிருந்து திசை திருப்பிட வேண்டி, பாக்கிஸ்தானியர் எல்லையைக் கடந்து காஷ்மீரில் நுழைவதைக் காட்டியும், வடகிழக்கு மாநிலங்களில் 300 ஆண்டுகளாக ஆங்கில வழிக் கல்வியும் கிறித்துவமும் பரவி வருவதைக் காட்டியும் - இஸ்லாமியருக்கு எதிராக, கிறித்துவருக்கு எதிராக - இந்துக்களைக் கிளப்பி விட்டுக் குளிர் காய்கிறார்கள்.

இந்த இஸ்லாமிய - கிறித்துவ - இந்து மதவெறியர்களான அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, செர்மனி நாட்டினரும்; பாக்கிஸ்தானியரும்; இந்தியரும் ''உலகத்தில் பயங்கரவாதத்தை ஒழித்தே தீர வேண்டும்'' என்று இன்று கூக்குரலிடுகிறார்கள்.

இஸ்லாமிய செஞ்சன் போராட்டத்தில் உதை வாங்கிய இரஷ்யாவும் அமெரிக்காவுக்கு ஆதரவு காட்டுகிறது; சீனாவும் ஆதரவு காட்டுகிறது.

இவ்வளவும் ஏன்?

11.9.2001 இல், அமெரிக்காவின் ஆணவத்துக்கு, இஸ்லாமிய பயங்கரவாதிகள் கொடுத்த பலமான அடியைத் தாங்கிக் கொள்ள முடியாமல்தான்.

அந்த அடியின் விளைவுகள் அமெரிக்காவைக் கதிகலங்க வைத்து விட்டன. ஏன்?

11.9.2001 தாக்குதலின் உடனடி விளைவாக, இரண்டு இலட்சம் பேர் அமெரிக்காவில் வேலை இழக்கிறார்கள்; நியூயார்க் கட்டடங்கள் மற்றும் அந்நகரப் பொதுமக்களுக்கு அய்ந்து இலட்சம் கோடி ரூபாய் இதனால் இழப்பு ஏற்பட்டு விட்டது. நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த உடனடியாக ஒரு இலட்சம் கோடி ரூபாயை அமெரிக்க அரசு வழங்க வேண்டும்; 2003க்குள் இது அய்ந்து இலட்சம் கோடி ரூபாயாக ஆகிவிடும்.

இவ்வளவு பலமான அடிவாங்கிய அமெரிக்கா, 14.9.2001 இல் அமெரிக்க நாடாளுமன்றம், செனட் அவைகளில் ஆப்கனிஸ்தான் மீது வானூர்திகளைக் கொண்டு தாக்குதல் நடத்திடவும், ஆப்கனிஸ்தானின் வடக்குப் பகுதியில் சி.அய்.ஏ. உளவு நிறுவனத்தின் தளம் அமைக்கவும் தீர்மானித்து விட்டது.

அமெரிக்கா, ஆப்கனிஸ்தான் பேரில் கடந்த பல நாள்களாகக் குண்டு மழை பொழிகிறது; 21.10.2001 முதல் தரைப்படையையும் ஏவி விட்டு ஆப்கனியர்களை அமெரிக்கப் படை வேட்டையாடுகிறது. ஆப்கன் மகளிர், குழந்தைகள் ஆடவர் 40 இலட்சம் பேர் நாட்டை விட்டு ஓடி அகதிகளாக பாக்கிஸ்தான் மற்றும் ஈரான் பகுதிகளில் அடைக்கலம் புகுகிறார்கள்.

அமெரிக்கா ஆப்கனிஸ்தான் மீது குண்டுகளையும் வீசிக் கொண்டு அத்துடன் உணவுப் பொட்டலங்களையும் வீசுகிறது.

இவ்வளவையும் செய்து இவர்கள் எல்லோரும் சாதிக்கப் போவது என்ன?

அமெரிக்காவும், பாக்கிஸ்தானும் தாங்கிப் பிடித்துப் பதவியில் வைத்த தலிபான் ஓமாரைக் கொல்ல வேண்டும்; அல்லது பதவியை விட்டு இறக்க வேண்டும். ஆப்கனிஸ்தானத்திலிருந்து ரோம் நகருக்கு 1973 இல் ஓடி விட்ட, இன்று 87 வயதுள்ள பழைய ஆப்கன் மன்னர் ஸாகீர் ஷா (Zahir Shah) தலைமையில், ஆப்கனியப் பழங்குடிகளின் தலைவர்கள் உள்ளிட்ட ஒரு குழுவினிடம் ஆட்சியை ஒப்படைக்க வேண்டும் என்பதும்; பின் லேடனைப் பிடித்தே தீர வேண்டும் என்பதுமே இவர்களின் நோக்கங்கள்.

**இந்த இரண்டு நோக்கங்களில் எது நிறைவேறினாலும் அதனால் யாருக்கு என்ன நன்மை? யாருக்கும் ஒரு நன்மையும் இல்லை. ஏன்?**

**இது பயங்கரவாதம் என்று கருதப்படுகிற கொரில்லாத் தாக்குதல் முறையிலிருந்து தப்பிக்கக் கூடப் பயன்படாது.**

கொரில்லாப் போர் முறையில், திடீரென, 11.9.2001 இல் நியூயார்க், பெண்டகன், வாஷிங்டன் நோக்கி நடந்த தாக்குதல்களுக்குப் பின்னால் உள்ள உண்மை என்ன? என்பது இன்னமும் ஒரு புதிராகவே இருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



ஒசாமா பின் லேடன் அல் - கொய்தா மூலம் சதித் திட்டமிட்டு அவர் அனுப்பிய இஸ்லாமிய பயங்கரவாதிகள் தான் நியூயார்க்கைத் தாக்கினார்கள் என்றே வைத்துக் கொண்டாலும், அமெரிக்க மண்ணில் - அமெரிக்க போயிங் வானூர்திகளைக் கொண்டு - குறிப்பிட்ட் நேரத்தில் - குறிப்பிட்ட திசையில் வானூர்திகளைச் செலுத்தி தாக்கிட உரிய துல்லியமான **(precision)** முறையில் இது நடப்பது எப்படி முடிந்தது?

1. 'மியாமி தூதன்' (Miami Herald) என்கிற அமெரிக்க நாட்டு ஏடு, இதுபற்றிப் பின்வரும் செய்தியை வெளியிட்டுள்ளது.

''சன் (SUN) என்கிற ஏட்டின் ஆசிரியர் மைக்கேல் அய்ரிஷ். இவருடைய மனைவி, டெல்ரே பீச் (Delray Beach) விடுதியின் ஒரு பகுதியை வாடகைக்குப் பிடித்து மர்வான் அல்ஷேஷி, சையது அல்காம்டி என்கிற பயங்கரவாதிகள் தங்குவதற்கு இடம் கொடுத்தார். இவர்களில் அல்ஷேஷி என்பவன் உலக வணிகக் கட்டடத்தைத் தாக்கிய இரண்டாவது விமானத்தில் ஏறிச் சென்றான்; அல்காம்டி என்பவன் பிட்ஸ்பர்க்கில் விழுந்து நொறுங்கிய விமானத்தில் ஏறிச் சென்றான். எனவே பயங்கரவாதிகளுக்கும், 'சன்' ஏட்டினுடைய ஆசிரியரின் மனைவிக்கும் ஏதோ தொடர்பு இருக்கிறது'' என்பதை, இப்போது, அமெரிக்க எஃப்.பி.அய். இன் செய்தியாளர் ஜூடி ஓரி ஹெலா (Judy Ori huela) தெரிவித்திருக்கிறார். *(ஆதாரம்: தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ், 16.10.2001)*

2. 2000 திசம்பர் மாதத்தில் அட்டா என்பவனும், மர்வான் அல்ஷேஷி என்பவனும் அமெரிக்காவில் விமான ஓட்டிக்கு உரிய உரிமம் (Licence) பெற்றார்கள். இவர்கள் மியாமி வானூர்திநிலையத்தில் தனியார் விமானக் குழுமத்தின் ஒரு விமானத்தை 26.12.2000 அன்று வாடகைக்கு எடுத்தனர். அந்த விமானம் ஒடு களத்திலேயே உயரே எழும்பிப் பறக்க இயலாது நின்று போய்விட்டது. எனவே அதை அங்கேயே போட்டு விட்டுப் போய்விட்டனர். இது நடந்து 9 மாதங்களுக்குப் பிறகு, இவர்களே மியாமிக்கு வந்து விமானங்களில் ஏறி உலக வணிக மய்யக் கட்டடங்களைக் குறி வைத்துத் தாக்கினர். அந்தத் தனியார் விமானக் குழுமத்தின் தலைவர் ருடி டெக்கர்ஸ் (Rudy Dekkers). அந்தக் குழுமத்தின் பெயர் வெனிஸ் ஹஃப் மேன் வானூர்தி நிறுவனம் (Huffman Aviation in Venice). *(ஆதாரம்: 'தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்', 19.10.2001)*

இது மட்டுமா?

3. இவற்றுடன் கூட, அமெரிக்கக் கூட்டாட்சியின் தீய போக்குப் பற்றி, அமெரிக்கர்களுக்கே வெறுப்பும் எதிர்ப்பும் இருந்தது. அதனால் அமெரிக்கர்களில் சிலரே இத்தாக்குதலை நடத்தினார்கள் என்பதற்கு இதோ ஒரு சான்று: ''நம் நாட்டில் அண்மையில் நடந்த பயங்கரவாத குண்டு வெடித் தாக்குதல் (அரபுப்) பாலைவனத்தில் (அல்லது ஆப்கனில்) இருக்கிற ஒரு பைத்தியக்காரனால் நடத்தப்பட்டதன்று. அதற்கு மாறாக, நம் நாட்டைச் சார்ந்த - முன்னாள் இராணுவ அதிகாரிகளான வெறியர்களாலேயே அது நடத்தப் பட்டது. அவர்கள் அமெரிக்கக் கூட்டாட்சியின் பேரிலுள்ள வெறுப்பினாலேயே இதைச் செய்தார்கள்...'' (Yet our recent domestic terrorism bombings have not been conducted by a guy from the desert but rather by our own citizens; a couple of ex-military guys who hated the federal government..."). நியூயார்க்கில் உள்ள திரைப்பட உற்பத்தியாளர் ஒருவர், இந்தியாவிலுள்ள அவருடைய நண்பருக்கு எழுதிய நீண்ட மடலின் ஒரு பகுதி இது. இம்மடலின் சுருக்கத்தை அப்படியே குஷ்வந்த் சிங் 29.9.2001 இல் வெளியிட்டார். (ஆதாரம்: "Hindustan Times', New Delhi, 29.9.2001)

இவ்வளவு நிலைமைகளையும் பற்றியும், 11.9.2001 இல் நடந்த தாக்குதல் பற்றியும் அமெரிக்க சி.அய்.ஏ., என்.எஸ்.ஏ., டி.அய்.ஏ., எஃப்.பி.அய் என்கிற உளவு நிறுவனங்கள் அறிய முடியாமல் போனது ஏன்? எப்படி?

அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களும், செனட் உறுப்பினர்களும், தனியார் வானூர்திக் குழுமத்தினரும், அமெரிக்க ஏடுகளை நடத்துவோரும் பணத்துக்கு விலை போவது உண்மை என்பதைப் போல, இந்த உளவு நிறுவனத்தினரிலும் சிலர் பணத்துக்கு விலை போனவர்களாக இருந்தார்கள் - இருக்கிறார்கள் என்பது தான். அதாவது 11.9.2001 தாக்குதலுக்கு அமெரிக்கர்களே உள் உளவாளி களாகவும், கைக் கூலிகளாகவும் இருந்தனர் என்பதுதான்.

செல்வம் கொழிக்கிற அமெரிக்காவில் இவ்வளவு இழிவானவர்கள் இருக்கிற போது, இவர்களே பணத்துக்கு அடிமை ஆகிற போது - அறியாமையிலும் வறுமையிலும் உழலும் ஆப்கானியம் - பாக்கிஸ்தான் - பாக். வசப்பட்ட காஷ்மீர் மற்றும் இந்தியா வசப்பட்ட காஷ்மீர், இந்தியா இவற்றிலுள்ள வறுமைப்பட்ட இஸ்லாமிய மக்கள் மதவெறியூட்டப்பட்டு - பயங்கரவாதத் தாக்குதலுக்கு முன்வருவதை எப்படி, எப்போது தடுக்க முடியும்?

படிப்பகம்

www.padippakam.com



ஒசாமா பின் லேடன் அமெரிக்கத் தாக்குதலுக்கு இரண்டரை கோடி ரூபாய் செலவழிக்கத் திட்டமிட்டதாகக் கூறப்படுகிறது. நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் இதற்காகச் செலவிட இஸ்லாமிய நாடுகள் காத்துள்ளன. ஆனால் இதனால் இஸ்லாமிய வெகு மக்களுக்கு ஒரு நன்மையும் இல்லை.

அதேபோல், இஸ்லாமியரின் பயங்கரவாதத்தை அடக்கி ஒடுக்க அமெரிக்காவும் இங்கிலாந்தும் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை 15.9.2001 முதல் ஆப்கன் படையெடுப்பில் கொட்டுகின்றன. தலிபானின் கூட்டாளியான பாக்கிஸ்தானின் முழு ஆதரவையும் பெற வேண்டி, அந்நாட்டின் பேரில் அணு ஆயுதப் பரவலுக்கும் - மக்களாட்சி இன்மைக்கும் எதிராக விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையை அமெரிக்கா நீக்கிக் கொண்டுள்ளது. அத்துடன் 10 கோடி டாலர் நிதி உதவி அளித்து விட்டு, மற்ற கூட்டாளி நாடுகளும் பாக்கிஸ்தானுக்கு உதவக் கோரியுள்ளது. பாக்கிஸ்தான் 3,700 கோடி டாலர் அயல் நாட்டுக் கடனில் மூழ்கித் தத்தளிக்கிறது. அயல் நாடுகள் இக்கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கோரி, அமெரிக்காவுக்கு அது அழுத்தம் தருகிறது. இப்போதைய போருக்கு, அதிக அளவில், 250 கோடி டாலர் செலவை பாக்கிஸ்தான் செய்ய வேண்டியிருக்கும் என்றும் கூறுகிறது. இவ்வகைக்காக, இதுவரையில் 80 கோடி டாலர் இங்கிலாந்து, அய்ரோப்பிய யூனியன், அமெரிக்கா, கனடா நாடுகளிலிருந்து பெற்றுவிட்டதாகவும் பாக்கிஸ்தான் அரசு கூறுகிறது.

இவற்றிலிருந்து நாம் உணருவது என்ன?

1. 'வெள்ளை இனம் உயர்ந்தது', 'கிறித்துவ மார்க்கமே சிறந்தது' என்கிற அமெரிக்கா - அய்ரோப்பிய மதவெறி - முதலாளித்துவ வெறி பிடித்த வெள்ளையர்கள் - தங்களின் இன மேலாதிக்க - முதலாளித்துவ - வணிக நலன்களை உலக அளவில் காப்பாற்றிக்கொள்ள விரும்புகிறார்கள் என்பது ஒன்று.

2. அவர்கள் இப்படிக் காப்பாற்றிக் கொள்வதை - வெறும் இனவெறி - மதவெறிக்காக மட்டும் ஆளாகிக் கிடக்கிற, வறுமை மிஞ்சி - அறிவு கெட்டு - பெண்களை அடிமை கொண்டு வாழும் இஸ்லாமியர்களுக்கு மதவெறியூட்டி, வெள்ளையர் நாடுகளுடன் போரிடச் செய்து, இஸ்லாமியர்களான 100 கோடிப் பேரில் வெகு மக்களை எதிலும் விடுதலை பெறாதவர்களாக வைப்பதற்கு, இஸ்லாமியர்களே இரையாக்கப்படுகிறார்கள் என்பது இரண்டு.

3. 1991க்குப் பிறகு, பெரிய அளவில நவீன ஆயுதங்களை உற்பத்தி செய்து, வளரும் ஏழை நாடுகளில் கலவரங்களை மூட்டி விட்டு அவர்களிடம் ஆயுதங்களை விற்றுச் சுரண்டி, உலகில் அமைதியே வராமல் செய்கிற அமெரிக்கா, இரஷ்யா, ஸ்வீடன், ஜெர்மனி, ஸ்விட்சர்லாந்து, செக்கோஸ்லாவக்கியா, இத்தாலி, இங்கிலாந்து முதலான நாடுகளின் போர் வெறி - முதலாளித்துவ - தொழில் - வணிக ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடி, இந்தியாவிலுள்ள 103 கோடி மக்களுக்கும் கல்வி, வைத்தியம், பிழைப்பு வசதி இவற்றுக்கு வழிகோலுவதை விடுத்து - 'இஸ்லாமிய பயங்கர வாத ஒழிப்பு' என்கிற பேரால் - அமெரிக்காவுக்கும், இங்கிலாந்துக்கும் அடியாளாகப் போய், இந்தியாவில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்கிற புதிய 'தடா' சட்டத்தையும் நிறைவேற்றிக் கொண்டு அதன் துணையுடன், புரட்சிகரச் சக்திகளை அடக்கி விட்டு, இந்துமத ஆதிக்கத்தை முழுமையாக நிலைநாட்டிட இந்திய அரசு இந்து மக்களைப் பலியிடுவது மூன்று.

இத்துணைப் பார தூரமான விளைவுகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு நாம் ஒவ்வொருவரும் இதுபற்றிச் சிந்திக்க வேண்டும்.

மானிடம் கவலையும் குறையும் இல்லாத வாழ்க்கையை அடைவதற்கு சமதர்ம ஆட்சி முறை ஒன்றே தீர்வு என்பதை நிறுவிக் காட்டினர் - லெனினும், மாஓவும் 1917க்கும் - 1949க்கும் இடையில்.

சமதர்ம ஆட்சியை - பொதுவுடைமை ஆட்சி முறையை 'சர்வாதிகார ஆட்சி முறை' - 'நாத்திக அரசு முறை' - 'தனியார் சுதந்தரத்தை அழிக்கிற முறை' என்று கூறித்தான் - 1945 முதல் திட்டமிட்டு, 45 ஆண்டுகளிலேயே சமதர்மத்தையே குலைத்தனர் - அமெரிக்கரும், அய்ரோப்பியரும், இஸ்லாமியரும்.

இன்று, உலக அளவிலும் இந்திய அளவிலும் பரவிக் கிடக்கிற சமதர்மவாதிகள் - லெனினியமா, ஸ்டாலினியா, டிராட்ஸ்கியமா, மாவோயியமா என்று மயிர் பிளக்கும் வாதத்துக்கு முதன்மை தந்து விட்டு, பிரிந்து கிடந்து, மானிடம் மேலும் மேலும் சீரழிக்கப்பட வழிவிடுகிறார்கள்.

''மானிட விடுதலை'' - ''தேசங்களின் விடுதலை'' என்கிற மய்யப்புள்ளியை நோக்கி இந்தக் கோடானு கோடிப் பேர் ஒன்று படவும், மானிடத்தைக் காக்கவும் வழிகாண வேண்டும். அப்போது எதன் பேராலும் 'பயங்கரவாதம்' எடுபடாது.

வே.ஆனைமுத்து

படிப்பகம்

www.padippakam.com



# இந்தியாவை விற்று விடுவார்கள்!

உலக வணிகக் கூட்டமைப்பில் (W.T.O) 140 நாடுகள் உறுப்புகளாக உள்ளன. விரைவில் சீனாவும் இக்கூட்டமைப்பில் உறுப்பினராக ஆவதற்குத் துடிக்கிறது. வளர்ந்த செல்வ நாடுகள், சீனாவும் சேருவது உலக வணிகக் கூட்டமைப்பின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் ஒரு சான்றாக இருப்பதாகக் கூறித் தம்பட்டம் அடிக்கின்றன.

உலக அமைப்புகளான அய்க்கிய நாடுகள் அவை, பாதுகாப்புக் குழு முதலான அமைப்புகளின் நடைமுறை கடந்த 40 ஆண்டுகளில் பெரிய மாற்றத்துக்கு உள்ளாகி விட்டது. உலக வளர்ந்த நாடுகளின் கைப்பாவைகளாக அவை மாறிவிட்டன. எப்போது இந்த அவைகள் கூடினாலும் - எந்தெந்தப் பொருள்களைப் பற்றி (Subjects) விவாதிக்கப்படும் என்பது பற்றிய பொருள் அட்டவணை (Agenda) எல்லா நாடுகளுக்கும் முன் கூட்டியே தரப்படும். அந்த அட்டவணையை மய்யமாக வைத்து விவாதங்கள் நடைபெறும். விவாதங்களின் முடிவில், தீர்மானங்கள் உருவாக்கப்பட்டு வாக்கெடுப்பு நடத்தப்படும். வாக்கெடுப்பில் பெரும்பான்மையினரால் ஏற்கப்பட்டவை மட்டுமே தீர்மானங்களாக வடிவம் பெறும். இந்த நடைமுறைகள் இப்போது காற்றில் பறக்க விடப்பட்டு விட்டன.

**கைப்பாவைகள்**

உலக வணிக அமைப்பில் ஆதிக்கம்செலுத்தும் செல்வ நாடுகள் தங்கள் தங்கள் நாடுகளின் வணிகத்தை உலகம் எங்கும் பரப்பி விரிவாக்கம் செய்ய வேண்டும் என்று திட்டமிட்டு, அதற்கு உகந்தவற்றை மய்யமாக வைத்து, உறுப்பு நாடுகளின் அமைச்சர்களைக் கூட்டிப் பேசுகின்றன. உலக அமைப்புகளில் பணியாற்றுகிற பணியாளர்கள் உருவாக்கித் தருகிற தீர்மானங்கள் அப்படியே விவாதத்துக்கு உரிய பொருள்களாக முன் வைக்கப்படுகின்றன. அப்படி முன் வைக்கப்பட்ட செய்திகள் வளரும் ஏழைநாடுகளின் நலன்களுக்கு எதிரானவை என்றாலும், அது பற்றியெல்லாம் அந்தந்த நாட்டு அமைச்சர்கள் பெரிய அளவுக்கு எதிர்ப்புக் காட்டுவதோ, அமைச்சர்கள் மாநாடு அக்கறையோடு அதை ஆய்வு செய்வதோ இல்லை.

**1999 மாநாடு**

1999 நவம்பரில் சியாட்டிலில் (Seattle) நடந்த அமைச்சர்களின் மூன்றாவது மாநாடு அமைதியாக நடைபெற முடியவில்லை. வளரும் ஏழை நாடுகளிலிருந்து தொண்டு நிறுவனங்கள் (NGOs), சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைப்புகள், வேளாண்மைக்காரர்களின் சங்கங்கள் இவற்றின் பேராளர்கள் ஆயிரக் கணக்கில் சியாட்டிலில் குவிந்தனர். உலக வணிக அமைப்பின் ஏழைநாடுகளுக்கு எதிரான கொள்கைகளை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களை அங்கே நடத்தினர். இருப்பினும் 2002இல் முடிவு செய்யப்படவேண்டிய பல செய்திகளைப் பற்றி, அமைச்சர்கள் மாநாட்டினர் 1999 நவம்பரிலேயே பேசி முடிவுகளைச் செய்தனர். அதன்படி எந்தெந்தப் பொருள்களின் இறக்குமதிக்கு அளவுகள் குறிக்கப்படக்கூடாது என்பது பற்றி இறுதி முடிவு எடுக்கப்பட்டு, அவற்றை வளரும் நாடுகள் உடனே ஏற்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. அதன்படித்தான் ஏற்கெனவே தீர்மானிக்கப்படாமல் இருந்த 714 பண்டங்களின் பேரில் இருந்த இறக்குமதிக்கான அளவுக்கட்டுப்பாடுகளை நீக்கிட, இந்திய அரசு 2000 மார்ச்சில் தீர்மானித்தது. இந்திய நாடாளுமன்றத்திலோ, மக்கள் இடையிலோ, பொருளாதார அறிஞர்களிடையிலோ எந்தவித விவாதமும் இல்லாமலே மேலே கண்ட முடிவை இந்திய அரசு அறிவித்தது.

**உடனடி விளைவுகள்**

இந்தியாவில் இதன் உடனடி விளைவுகள் என்ன?

வைரங்கள், செயற்கை உயர்வகைக் கற்கள், தொலைபேசிச் சாதனங்கள், பிளாஸ்டிக் மற்றும் இரப்பர் பொருள்கள், கலை மற்றும் அருங்காட்சிப் பொருள்கள் இவற்றின் இறக்குமதி மட்டும், 2000-2001 ஆண்டில், பன்மடங்குகள் அதிகரித்து விட்டது. இவை மட்டுமா? ஆயத்த உணவுகள் (PIZZA FOODS), மென் குடிநீர்ப் பொருள்கள் (கோகோகோலா போன்றவை), புகையிலைப் பொருள்கள், தோல் பொருள்கள், தலைக்கான கவசங்கள், கண்ணாடி - பீங்கான் பொருள்கள், காலணிகள், குடைகள் முதலான வற்றின் இறக்குமதியும் இந்தியாவில் அதிகரித்து விட்டது.

மேலே கண்ட பொருள்களில் இந்தியாவில் - இந்தியர்களால் - இந்தியரின் முதலீட்டில் உற்பத்தி செய்யப்பட முடியாத பொருள்கள் எவை? இவற்றை

படிப்பகம்

www.padippakam.com



இறக்குமதி செய்வதற்கு மட்டும் ரூ.5,074 கோடி 2000-2001இல் முதலீடு செய்யப்பட்டு விட்டது. கடந்த ஆண்டில் இவற்றுக்கான முதலீடு ரூ 4,826 கோடியாக இருந்தது. இனி இப்படியே இறக்குமதி வளர்ந்தால் இந்தியாவில் தேங்கிக் கிடக்கும் தானியங்கள், தோல் பொருள்கள் எப்படி நல்ல விலை பெற முடியும்?

2000-2001இல் இறக்குமதி செய்யப்பட்ட துணிகள், துணியால் ஆன பொருள்கள் மட்டும் ரூ.169.70 கோடி பெறுமானம் உள்ளவையாகும்.

இந்தியாவில் உள்ள 1476 நெசவு ஆலைகள், இவற்றில் உற்பத்தியாகும் துணிகள் மற்றும் மின்விசைத்தறிகள், கைத்தறிகளில் உற்பத்தியாகும் துணிகள் இங்கே தேங்கிக் கிடக்கும் போது, துணி வகைகள் இறக்குமதி என்பது, நெசவாளர்களையும், ஆலைத் தொழிலாளர்களையும், சிறிய ஆலைகளின் முதலாளிகளையும் பாதித்துப் பட்டினிக் காரர்களாகவும், கடன்காரர்களாகவும், தற்கொலைக் குத் தள்ளப்படுபவர்களாகவும் ஆக்கும் அல்லவா?

**உலக வணிக அமைப்பு வளரும் நாடுகளை வதைப்பது இப்படித்தான். அறிவும் பொறுப்பும் உள்ள ஒவ்வொருவரும் இதை உணரவேண்டும்.**

### தோஹா மாநாடு

இந்த அவலமான நிலையில், உலக வணிக அமைப்புநாடுகளின் அமைச்சர்களின் நான்காவது மாநாடு குவட்டார் (Qatar) நாட்டில் தோஹா (Doha)வில் 2001 நவம்பரில் நடைபெறத் திட்டமிடப்பட்டு விட்டது. இன்று வரையில் இந்த அமைப்பில் உறுப்புப்பெறாமல் இருந்த சீனா புதிதாக உறுப்பினராக ஆகப் போவது, இந்த உலக வணிக அமைப்பின் வெற்றிக்கு ஓர் அறிகுறி என்றும் பேசப்படுகிறது.

1949 இல் சமதர்ம நாடாக மாறிய சீனா கடந்த காலங்களில் பன்னாட்டு நிதியம் (IMF), உலகவங்கி, உலக வணிகத் தொழில் - ஒப்பந்த அமைப்பு (GATT), உலக வணிக அமைப்பு என்கிற எந்த நிறுவனத்திலும் உறுப்புப் பெறுவதை விரும்பவில்லை. இவற்றுக்கு வெளியே தனித்தே நின்று கடந்த 20 ஆண்டுகளில் கெட்டியான பொருளாதார அடித்தளத்தை அமைத்துக் கொண்டு, இப்போது 2001இல் உலக வணிக அமைப்பில் 141 ஆவது உறுப்பு நாடாக ஆக சீனா முன்வந்துள்ளது.

### இந்தியாவின் நிலை என்ன?

ஆனால் இந்தியாவின் நிலை என்ன?

1947, 1950இல் முறையே 'விடுதலை' - 'குடிஅரசு' என ஆகிவிட்டதாக மார்தட்டும் இந்தியாவில், 2001இல் 100க்கு 68 பெண்மக்களுக்குக் கல்வி அறிவு தரப்படவில்லை.

இன்று இந்திய மக்கள் தொகை 100 கோடி. இவர்களில் பெண்கள் 50 கோடி. இந்த 50 கோடிப் பெண்களில் 68%பேர் என்பது 34 கோடியாகும்.

இந்த 34 கோடிப் பெண் மக்களில் குறைந்தது 25 கோடிப்பேர் சிற்றூர்ப்புற - உழைப்பாளி - கீழ்ச்சாதி மக்கள் ஆவர். இவர்களுக்குக் கல்வியைத் தர வேண்டும் என்கிற அறிவும் உணர்வும் பொறுப்பும் நேரு - இந்திராகாந்தி - மொரார்ஜி தேசாய் - இராஜீவ் காந்தி - நரசிம்மராவ் என்கிற எந்தப் பிரதமருக்கும் இல்லை. இன்று உள்ள வாஜ்பேய் அரசு எழுத்தறிவு பெறுவதை அடிப்படை உரிமையாக ஆக்கிட அரசியல் சட்டத்தில் ஒரு திருத்தம் செய்திட முன்வந்துள்ளது. அத்துடன், இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஓர் ஆண்டுக்கு ரூ125 கோடி ஒதுக்கீடு செய்து, 'எல்லோருக்கும் கல்வி' (சர்வ சிட்சா அபியான்) என்கிற திட்டத்தை நிறைவேற்ற எத்தனிக்கப் போகிறது. கி.பி. 2010க்குள் **'எல்லோருக்கும் கல்வி!' தரப்போவது இவர்களின் திட்டம். ஆனால் கி.பி.2010இல் இந்தியாவின் மக்கள் தொகை 130 கோடி ஆகிவிடும். அப்போதும் கல்வி அறிவு அற்றவர்களில் அதிகம் பேர் இந்தியாவில் தான் இருப்பார்கள். இது கல்லைப் போன்ற கெட்டியான உண்மையாகும்.**

சரசுவதியைக் கல்விக் கடவுளாக 2000 ஆண்டுகளாகக் கும்பிடுகிற இந்த நாட்டில், 'எல்லோருக்கும் கல்வி' இன்று வரை ஏன் தரப்படவில்லை என்று இந்துமதத் தலைவர்களோ, இஸ்லாம் சமயத்தலைவர்களோ ஏன் சிந்திக்க வில்லை? அரசியல் கட்சிகளின் தலைவர்கள், சமூகங்களின் தலைவர்கள், சாதிகளின் தலைவர்கள், கல்வியாளர்கள் ஆகியோர் ஏன் சிந்திக்கவில்லை? வாக்காளர்களாக உள்ள வெகுமக்கள் ஏன் கொதித்து எழவில்லை?

இந்த நிலையில், வேளாண்மையையும், நெசவையும் மற்ற உடலுழைப்புத் தொழில்களையும் சார்ந்தே வாழ்வோர் 70 கோடி மக்களாக உள்ள நாட்டிற்கு மேலே கண்ட பொருள்களை இறக்குமதி செய்ய ஒப்புக் கொள்ளுகிற ஓர் ஒப்பந்தம் ஏன் வேண்டும்? எதற்காக வேண்டும்?

### குடிநீரும், கல்வியும்... என்ன ஆகும்?

உலக வணிக அமைப்பின் முதலாவது குறிக்கோள் குடிநீர், கல்வி, மருந்து, போக்குவரத்து, வேளாண் இடு பொருள்கள் இவையெல்லாம் விலைக்கு வாங்கப்

படிப்பகம்

www.padippakam.com



படுகிற பண்டங்களாக உலகம் முழுவதிலும் ஆக்கப்பட வேண்டும் என்பது தான்.

காடுகளும், ஆறுகளும், நீர்நிலைகளும் பாழாக்கப்பட்டு விட்ட இந்தியாவில், குடிநீர்ப்பஞ்சம் தலைவிரித்து ஆடுகிறது. பாசனத்துக்குப் போதிய நீர் இன்றி வேளாண்மை பாழாகிறது. பாசன வசதிப் பெருக்கம் போதிய அளவு செய்யப்படாததால் இன்றும் பயிரிடப்படும் நிலப்பரப்பில் 60% பரப்பு வானம் பார்த்த நிலமாகவே இருக்கிறது.

குப்பைக் கூளங்களைக் கூட்ட ஏற்பாடுகளைச் செய்யவும், குடிநீர் தரவும் வக்கற்றவர்கள் அரசியல்தலைவர்களாகவும், ஆளும் அமைச்சர் களாகவும் செயல்திட்டங்களை நிறைவேற்றும் உயர் அதிகாரிகளாகவும் இந்தியாவில் இருக்கிறார்கள். இவர்கள் மனிதப் பற்று - கடமை உணர்வு - பொது நோக்கு உள்ளவர்களாக இல்லை என்பது ஒரு பெரிய உண்மை. இங்குள்ள சமூக அமைப்பில் எதையும் தாங்கிக் கொள்ளும் பழக்கத்துக்கு ஆளானவர்களாகவே மக்கள் உருவாக்கப்பட்டு விட்டார்கள். எனவே மக்களிடம் விழிப்புணர்வோ, இருக்கிற தீமையான சமூக - அரசியல் அமைப்பு களின் பேரில் சினமோ வெறுப்போ எதிர்ப்போ தோன்றுவது போதிய அளவில் வடிவம் பெறவில்லை.

இந்தச் சூழலில், குடிநீர் தருகிற பணியையும் அயல்நாட்டு நிறுவனங்களுக்கு ஒப்படைத்துவிட இப்போது முதற் கொண்டே இந்திய அரசினால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தியாவிலுள்ள 30 பெருநகரங்களில் ஆறுகளையும், கழிவுநீர் வடிகால் திட்டங்களையும் திறமையாகவும் தூய்மையாகவும் வைக்கிற பொறுப்பை - உலக வங்கியின் ஒத்துழைப்புடனும் திட்டப்படியும் பன்னாட்டு வணிக நிறுவனங்களான பெச்டெல் *(Bechtel)*, என்ரான் *(Enron)*, மொன்சண்டோ *(Monsanto)*, விவேண்டி *(Vivendi)*, சூயஸ் - லியோன்னசி *(Suez - Lyonnaise)* முதலானவற்றிடம் ஒப்படைக்க இன்றைய இந்திய அரசு திட்டமிடுகிறது. 'முழுவதும் விலைக்கு - முற்றிலும் நல்லநீர்' என்று இதற்குக் கவர்ச்சியான பெயரிட்டு, இந்த ஏற்பாடுகளை, மகாராட்டிரம், ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், இராசஸ்தான் முதலான மாநிலங்கள் கை நீட்டி வரவேற்றிடச் செய்ய இந்திய அரசே எல்லாம் செய்கிறது.

இவ்வளவு கேடு கெட்ட திட்டத்தை ஏற்பதும் வரவேற்பதும் திருடர்களையும் கொலைகாரர் களையும் ஆட்சியாளர்களாகவும், அதிகாரிகளாகவும், அரசியல்வாதிகளாகவும் உள்ள நாட்டில் தானே நடைபெறும்? இன்றைய இந்தியா இப்படிப்பட்டது தான். இதில் அய்யம் இல்லை. ஏன்?

என்ரான் - தபோல் நிறுவனங்கள் மகாராட்டிர மாநிலத்தில் மின் உற்பத்தியில் நுழைவதை இந்தியாவில்உள்ள எல்லா முற்போக்கு அமைப்புகளும் 1991இல் எதிர்த்தன. பாரதிய சனதாக்கட்சியும் கூட எதிர்த்தது.

ஆனால், இன்று என்ரான் தரும் ஒரு யூனிட் மின்சாரம் விலை ரூ.8 என்கிற அளவுக்கு ஆனபிறகு கூட, பாரதிய சனதா, காங்கிரசு, மற்றும் உள்ள மாநிலக் கட்சிகளில் எதுவும், 'இன்றியமையாத மின் உற்பத்தியைப் பன்னாட்டு வணிக நிறுவனத்துக்குத் தரக் கூடாது' என்று போராடவில்லை.

மின் உற்பத்திக்கும், எரிபொருள் ஆக்கத்துக்கும் போதுமான நிலக்கரிப் படிவங்கள் - எண்ணெய்ப் படுகைகள் - எரிவாயுக் கிணறுகள் - தமிழ்நாட்டிலும், பீகாரிலும், ஒரிசாவிலும், பாம்பே - ஹை பகுதியிலும், அசாமிலும் இன்னமும் பெரிய அளவில் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன. இவற்றை முழுவதுமாகப் பயன்படுத்த எந்தக் கட்சி அரசும் முயலவில்லை.

அத்துடன், இருக்கிற நிலக்கரித் தொழில் பொதுத்துறை நிறுவனங்கள், மற்றும் இந்திய எண்ணெய்க் குழுமம் (IOC), எண்ணெய் - இயற்கை எரி வாயுக்குழுமம் (ONGC), இந்திய எரிவாயுக் குழுமம் (GAIL) இவற்றை இலாபம் தரக் கூடியவையாக இன்று வரை அரசு நடத்தவில்லை. இவற்றுள் இந்திய எண்ணெய்க் குழுமம் 2.5% கூட இலாபம் ஈட்டாத ஊதாரித்தனமானதாக உள்ளது. இப்படிப்பட்டவற்றை ஒன்றாக இணைத்துத் திறமையாகவும் இலாபம் தரக் கூடியதாகவும் பொதுத்துறை நிறுவனங்களாகவே நடத்துவதற்கு மாறாக, இவற்றை ஒன்றாக இணைத்துப் பன்னாட்டு வணிக நிறுவனங்களுக்கு விற்று விட அரசு திட்டமிடுகிறது. பொதுத்துறை நிறுவனங்களை விற்பதற்கென்றே அகம்பாவமும் ஆணவமும் கொண்ட - முன்னாள் பத்திரிக்கை யாளரான அருண்சௌரி என்கிற திமிர்பிடித்த பார்ப்பனரை பாரதிய சனதா அரசு அமைச்சராக அமர்த்தி யிருக்கிறது.

வாஜ்பேயி, அத்வானி, பிரமோத் மகாஜன், அருண்சௌரி என்கிற பார்ப்பன மே(ல்)தாவிகள், நேரு குடும்பத்தினர் இந்தியாவுக்கு இழைத்த கேட்டினை விடப் பன்மடங்குக் கேட்டினை இப்போதே விளைக்கிறார்கள். இனி இந்தியாவையே இவர்கள் விற்று விடுவார்கள்.

*எச்சரிக்கை! எச்சரிக்கை!*

**வே. ஆனைமுத்து**

படிப்பகம்

www.padippakam.com



# அய்.அய்.டி. - I.I.T

-இராமியா

நான் ஒரு கிராமத்தான்.

பள்ளிக்கூடத்திற்குச் சென்று படிப்பது நல்ல விஷயம் என்று மட்டும் தெரியும். அதில் மேற்கொண்டு படிப்பது, வெளியூருக்குச் சென்று படிப்பது எல்லாம் தேவையில்லை என்ற நினைப்பும் உண்டு. ஆனால் என் மகன் மிக நன்றாகப் படிக்கிறானாம். அவனை மேற்கொண்டு பெரிய படிப்பெல்லாம் படிக்க வைத்துத் தான் ஆகவேண்டும் என்று ஆசிரியர்களின் நச்சரிப்புத் தாங்க முடியவில்லை.

சரியென்று அவனைச் சென்னைக்கு அனுப்பி; என் உறவுக்காரர் ஒருவரின் வீட்டில் தங்க வைத்துப் படிக்க வைத்தேன். அவர் முதலில் சிறிது தயக்கம் காட்டினார். ஆனால் பின்னால் பையன் நன்றாகப் படிக்கிறான் என்று கூறி மகிழ்ச்சியுடன் வீட்டில் வைத்துக் கொண்டார்.

ஒரு தடவை நான் சென்னைக்குச் சென்றிருந்த போது பையனை மேற்கொண்டு பொறியியல் படிக்க வைக்க வேண்டும் என்றும், சாதாரணப் பொறியியல் கல்லூரியில் சேர்க்கக் கூடாது என்றும், சென்னை அய்.அய்.டி.யில் சேர்க்க வேண்டும் என்றும் கூறினார். எனக்கு என்னவென்றே விளங்கவில்லை.

நான் முழித்துக் கொண்டிருப்பதைப் பார்த்த அவர் அதைப்பற்றி நிறைய விளக்கமளித்தார். அது இந்தியாவிலேயே மிகச் சிறந்த நிறுவனம் என்றும், அதன் பரப்பளவு மாத்திரம் 620 ஏக்கர் என்றும், இன்னும் ஏதேதோ கூறினார். எனக்கு எதுவுமே அர்த்தமாகாதபடியால் அந்த இடத்திற்குக் கூட்டிக் கொண்டு போய்க் காட்டினார்.

நானும் அவரும் முதலில் அந்த நிறுவனத்தைச் சுற்றிப் பார்த்தோம். அப்பப்பா எவ்வளவு பெரிது! நான் கிராமத்தான் ஆனாலும் அவ்வப்போது நகரத்திற்கு வந்து போவதால் நகரத்தைப் பற்றியும் நன்றாகத் தெரியும். ஆனால் இந்த அய்.அய்.டி. என்னவென்றால் கிராமமாகவும் இல்லாமல் நகரமாகவும் இல்லாமல் ஒரு மாதிரியாக இருந்தது. அவர் அய்.அய்.டியைப் பற்றி விவரித்துக்கொண்டே வந்தார். இங்கு படிப்பதற்கு இடம் கிடைப்பது அவ்வளவு எளிதல்ல என்றும், மிகக் கஷ்டமான நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்குத்தான் இடம் கிடைக்கும் என்றும், என் மகன் மிகவும் புத்திசாலியாக இருப்பதால் அவனுக்கு நிச்சயம் இடம் கிடைக்கும் என்றும் கூறினார்.

மேலும் பொதுவாகக் கிராமப்புறப் பையன்கள் இங்கு அதிகமாக இல்லை என்றும் கூறினார். என் மனம் சற்றுத் துணுக்குற்றது. கிராமப்புறத்தவர்களை - ஒடுக்கப்பட்டவர்களைச் சேர்க்க முடியாதபடி உள்ள நிறுவனம் எப்படி நல்ல நிறுவனமாகும்?

அப்புறம் மேலும் சுற்றிப் பார்த்துக் கொண்டே வந்தபோது மாணவர்கள் தங்குமிடம், ஆசிரியர்களின் குடியிருப்பு அனைத்தையும் பார்த்தபோது, இந்த அய்.அய்.டி.க்கும் வெளி உலகத்துக்கும் ஒரு சம்பந்தமும் இல்லாதது போல் தோன்றியது. என் எண்ணத்தை அவரிடம் கூறிய உடன், அவர் சிரித்துக் கொண்டே, "இங்கு படிப்பவர்கள் அனைவரும் வெளிநாட்டில் வேலை கிடைத்துப் போய்விடுவார்கள். அவர்கள் ஏன் வெளியில் உள்ள சமுதாயத்தைப் பற்றி நினைக்க வேண்டும்?" என்று கேட்டார். எனக்குத் திக்கென்றது.

வெளிநாட்டில் போய் வேலை செய்பவர்களை உருவாக்குவதற்குத்தான் இந்த அய்.அய்.டியா? என் மகன் இதில் சேர வேண்டுமா? இது நல்லதா அல்லது கெட்டதா? எனக்குக் குழப்பமேற்பட்டது. படித்துவிட்டு அதன் பயனை உற்றார் உறவினரோடு அனுபவிக்காமல் வேறு நாட்டுக்குப் போய் இருப்பது எந்த விதத்தில் நலமாக இருக்கும்? என் குழப்பத்தை அவரிடம் கூறினேன்.

அவரும் என்னுடைய எண்ணத்தை ஆமோதித்தார். ஆனால் ஒரு கும்பல் (பார்ப்பனக் கும்பல்) திட்டமிட்டு இந்தியாவை விட்டு வெளியேறிக் கொண்டிருப்ப தாகவும், அவர்கள் அங்கே உற்றார் உறவினராகக் கூடி வாழ்வதாகவும் கூறினார். மேலும் நம்மைப் போன்றோர் அப்படிச் செல்ல முடிவதில்லை என்றும் அய்.அய்.டி.யில் கிராமத்தவர்கள் நுழைய முடியாதபடியும் நகரத்தவர்களில் கூட மேல் சாதி, பரம்பரைப் படிப்பாளிகள் (அறிவாளிகள் அல்ல) மட்டுமே சேரமுடிகிற மாதிரியும் சேர்ப்பு விதிமுறைகளை உருவாக்கி வைத்திருப்பதாகத் தெரிவித்தார். என்னுடைய மகன் மிகவும் புத்திசாலியாக இருப்பதாகவும் அவர்கள் ஏற்படுத்தியுள்ள அனைத்துத் தடைகளையும் தகர்த்து எறியும் வல்லமை படைத்திருப்பதாகவும், ஆகவே அவனை அய்.அய்.டி.யில் சேர்க்க வேண்டும் என்றும் கூறினார்.

அவர் என் மகனைப் பற்றிக் கூறியது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் அவன் அந்தக் கும்பலில் ஒற்றை ஆளாக மாட்டிக் கொண்டால் என்ன ஆகும்? இதை நினைத்து என் மனம் நடுங்கியது. அவரோ, 'அந்தக் கோட்டையில் நம்மவர்கள் யாரும் நுழையவே இல்லை என்றால் எப்படித்தான் அதைத் தகர்ப்பது?' என்று கேட்டார். கேள்வி சரியானதுதான்.

ஆனால் எனக்கு மிகவும் குழப்பமாக இருக்கிறது. யாராவது என் குழப்பத்தைத் தீர்த்து ஒரு நல்ல வழியைக் கூறுங்களேன்.

படிப்பகம்

www.padippakam.com



# புத்தகங்கள் குழந்தைகளைக் கிழித்து விடுகின்றன

–இரா. இரத்தினகிரி

நெல்லை மாவட்டத்தில் ஒரு பி.காம். பட்டதாரி மாணவர், தான் காதலித்த பெண், தன்னைக் காதலிக்க மறந்து விட்ட காரணத்தினால், அந்தப் பெண் மீது ஆத்திரங் கொண்டு பெட்ரோலை ஊற்றிக் கொளுத்தி விட்டு, மீதியிருந்த பெட்ரோலைத் தன் மீது ஊற்றித் தீவைத்துக் கொண்டு தற்கொலை செய்து கொண்டார்.

தஞ்சையில் ஒரு கல்லூரி மாணவரை வருகைப் பதிவு நாள்கள் குறைந்த காரணத்தினால் தேர்வு எழுதுவதற்கு அனுமதிக்காத கல்லூரி முதல்வரை, கல்லூரி அலுவலகத்திலேயே அந்த மாணவர் கத்தியால் குத்தினார்.

அதே ஊரில் சில ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு மேல்நிலைப் பள்ளியில் ஒரு மாணவரிடமிருந்து காதல் கடிதத்தை வாங்கிக் கொள்ள மறுத்த மாணவியை அந்த மாணவர் வகுப்பறையில் குத்திக் கொலை செய்து விட்டுச் சிறைச்சாலைக்குச் சென்ற செய்தியையும் படித்தோம்.

சென்னையில் ஒரு போலீஸ் அதிகாரி மகன் அய்.ஏ.எஸ். தேர்ச்சி பெறவில்லை என்ற காரணத்துக்காகத் தன்னையே துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டார்.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்ட மாணவர், (பிஎச்.டி) முதுகலைப் பட்டப்படிப்பில் முன்னணியில் நின்று தங்க மெடல் பரிசு பெற்றவர், தனது தலை வழுக்கையாக இருக்கிறது என்பதாலும், ''நான் கருப்பாக இருக்கிறேன், என்னை எந்தப் பெண்ணும் திருமணம் செய்து கொள்ள மாட்டாள்'' என்ற விரக்தியினாலும் மாணவர் விடுதியிலேயே தற்கொலை செய்து கொண்டார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், ஒரு மாணவனிடம் முறைகேடான விருப்பத்திற்கு மற்ற ஒரு மாணவன் உடன்பட மறுத்த காரணத்தினால் அந்த மாணவன் நாவரசுவை துண்டு துண்டாக அறுத்துப் பெட்டியில் வைத்து அனுப்பிய அவலத்தையும், அதையே அடிப்படையாகக் கொண்டு 'ராகிங்' தடைச் சட்டம் வந்ததையும், கொலை செய்ததாக விசாரிக்கப்பட்ட மாணவர் 'கர்த்தர் கிருபையினால்' தாம் இப்போது விடுதலை செய்யப்பட்டதாக அவரே சொன்னதையும் நாம் அறிவோம்.

ஒரு காலத்தில் நாட்டின் சரித்திரத்தை மாற்றிய, அரசியல் மாற்றத்தை உருவாக்கிய பல்கலைக் கழக மாணவர் விடுதிகள் இன்று பண்பாட்டுச் சீரழிவுக்கான, சீர் குலைவுக்கான பயிற்சிக் கூடங்களாகிப் போனது பரிதாபத்துக்கு உரிய செய்தியேயாகும்.

பிள்ளைகளைப் பள்ளிக் கூடங்களுக்கு அனுப்புவது என்பது அவர்களுக்கு ஒரு கட்டுப்பாடு, ஒழுங்கு உருவாக்கப்படவும் தன்னம்பிக்கையை வளர்க்கவுமே ஆகும்.

இதுபோல, வாழ வேண்டிய வயதில், தம்மையும் சமுதாயத்தையும் வாழ்விக்க வேண்டிய இளைஞர்கள், வாழ்வில் ஏற்படும் சிறுதோல்விகளை - எதிர்பார்த்தபடி கிடைக்காத ஏமாற்றங்களை எதிர்கொள்ளவும், சமாளிக்கவும் வெற்றி பெறவும் தெரியாத காரணத்தினால் தங்கள் வாழ்வை அழித்துக் கொள்ளுவதும், கல்லூரி முதல்வரைக் கத்தியால் குத்துவதும் பிறர் வாழ்வை அழிப்பதும் வேதனைப்பட வேண்டிய செய்திகளாகும்.

இந்த மாணவர்கள் ஒரு வேளை இந்தக் கல்விக் கூடங்களுக்கு வராதிருந்தால் நல்ல விவசாயியாக இருந்து ஒரு நூறு பேர் உணவுக்கான நெல்லை விளைய வைத்து உற்பத்தி செய்து தந்திருப்பர்; அல்லது சாத்தாரணத் தொழிலாளியாக ஆகித் தாம் ஏற்றுக் கொண்ட வேலைக்கு ஈடுகொடுத்துப் பணி செய்து உதவி தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருப்பார்கள்.

தற்கொலைப் பூமியாகும் தமிழகத்தின்; காவல் நிலையங்களில், மருத்துவமனைகளுக்கு வருகின்ற வழக்குகளைக் காண்கின்றபோது, தமிழ் மக்களின் தற்கால நிலை மிகப் பரிதாபத்திற்கு உரியதாகும். தினசரி ஒரு மாவட்டத்தில் 20 பேர்கள் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்கிறார்கள். சென்னை பொது மருத்துவமனை, கீழ்ப்பாக்கம், இராயப்பேட்டை, ஸ்டான்லி, போரூர் - மருத்துவமனைகளில் மொத்தம் ஒரே நாளில் 50 பேர் கூட எண்ணிக்கை வந்துவிடுகிறது. தமிழ்நாடு முழுவதும் எண்ணிக்கையைக் கூட்டினால் ஒரு நாளைக்குச் சுமார் 500 பேர்கள் வாழ வேண்டிய இளம் வயதில் இதுபோல் நம்பிக்கை இழந்து வாழ்க்கையை முடித்துக் கொள்ளுகிறார்கள்.

காவல் நிலையங்களுக்கு வந்து கதை முடிந்தவற்றின் எண்ணிக்கை அளவுக்கு இருமடங்குக்கு மேல் கிராமப்புறங்களில் காவலர் பார்வைக்கு வராமலேயே போகின்றன. ஆண்டுக்குச் சுமார் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்டவர்கள் இறந்துபடுகின்றனர்.

ஒரு காலத்தில், மாணவர்கள்தான், ஆசிரியர் களிடம் இன்றைக்கு எப்படிப் பாடத்தை ஒப்பித்துத் தப்பிப்பது என்று பயந்து பயந்து பள்ளிக்கு வருவார்கள். இன்றைக்கு மாணவர்களிடமிருந்து ஆசிரியர்கள் எப்படித் தப்பிப்பது? எப்படி வருவது? முடிப்பது? என்று நினைத்தே கல்லூரிக்கு வருகிறார்கள். அதிலும் அரசுக் கல்லூரிகளில்

படிப்பகம்

www.padippakam.com



அன்றாடம் கலவரங்களை எதிர்பார்த்துக் கொண்டுதான் பணிக்கு வரவேண்டியதிருக்கிறது.

கல்லூரி மாணவர்களிடம் இப்படிக் கட்டுப்பாடு ஒழுங்கு இல்லையே, இதை எப்படி ஒழுங்குபடுத்தலாம் என்று கல்லூரி ஆசிரியர்களைக் கேட்டால், ''சார்! பையனைத் திருத்த வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் அதை உயர்நிலைக் கல்வி நிலையங்களில் தான் செய்ய வேண்டும். கல்லூரிக்கு மாணவன் வரும் போது தெளிவு பெற்றவனாகத் தான் வருகிறான். இங்கே வந்த பின் மாணவர்களை ஒழுங்குபடுத்துவது என்பது முடியாது'' என்று கல்லூரி ஆசிரியர் தம் பொறுப்பைத் தள்ளி விடுகிறார்.

மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களிடம் போய், 'மாணவர்களை ஒழுங்குபடுத்த என்ன செய்வது?' என்று கேட்டால், ''சார்! பையன்களை ஒழுங்குபடுத்துவது என்றால், ஒன்று தொடக்கப் பள்ளியிலேயே செய்ய வேண்டும். விவரமறியாப் பருவத்தில் நாம் சொல்வதைப் பையன்கள் கேட்பார்கள். அப்போது சொல்லிப் புரிய வைத்து விளக்கப்படுத்திக் கொள்ளலாம்; அல்லது கல்லூரி மாணவன் என்றால் சொல்வதைப் புரிந்து கொள்ளுகிற வயது; அங்கே சொல்லலாம். உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் எல்லாம் இரண்டுங்கெட்டான் நிலை. இங்கே முடியாது!'' என்று சொல்லி விடுகிறார்கள்.

அது சரி என்று, தொடக்கப்பள்ளி ஆசிரியர்களிடம் சென்று கேட்டால், ''இங்கே படிக்கிற பிள்ளைகள் விளையாட்டுப் பருவம்; விவரம் தெரியாத நிலை. இங்கே நாங்கள் என்ன சார் செய்ய முடியும்? பையன் ஒரு நாளைக்கு 5 மணி நேரம் பள்ளிக்கூடத்தில் இருக்கிறான். 19 மணி நேரம் வீட்டில்தான் இருக்கிறான். வீட்டில் இருக்கிற தாய் தந்தை திருத்தினால்தான் பிள்ளைகளும் திருந்தும். அவர்கள் நடத்துகிறபடிதான் பிள்ளைகளை வளர்க்க முடியும்? 19 மணி நேரத்தில் முடியாத வேலையை 5 மணி நேரத்தில் செய்ய முடியுமா? அதுவும் வருடத்தில் 220 நாள்களே தொடக்கப் பள்ளிகள். இதில் நாங்கள் எப்படி விவரம் தெரியாத பிள்ளைகளை விவரப்படுத்த முடியும்?'' என்று கேட்டு நம்மைத் திருப்பி அனுப்புகிறார்கள்.

பெற்றோர்களோ, ''எங்களால் குழந்தைகளைக் கட்டுப்படுத்த முடியாமல்தானே பள்ளிக் கூடத்துக்கு அனுப்புகிறோம்'' என்கிறார்கள்.

''மனிதன் எவனும் மனிதனாகவே பிறப்பதில்லை; அவன் மனிதனாக ஆக்கப்படுகிறான். மனிதனாக்குவது தானே கல்வி. மனிதனாக்குகிற பொறுப்பைத் தாய், தந்தை, ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் ஒருவர் மற்றொருவருக்குத் தள்ளி விடுகிறார்கள். எவருமே இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுவதில்லை. மனிதர்களை உருவாக்குவது தானே கல்வி. அது ஏன் அந்தப் பணியைச் செய்யவில்லை?

பள்ளிக் கூடங்களில் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்படுகிற பாடங்கள், அதற்குப் பிறகு அவர்கள் படிக்கிற புத்தகங்கள் தான் நமது குழந்தைகளின் வாழ்க்கையைக் கிழித்து விடுகின்றன.

## மடல்கள்

சிந்தனையாளன் ஆசிரியர் அவர்களுக்கு, வணக்கம். 'ஓ அமெரிக்கா...' கட்டுரை ஓஹோ! பொருளாதார எதேச்சதிகாரம் - அதாவது பணக்காரத் தோரணை மட்டுமே - எதிர்காலத்தில் எடுபடாது என்பதை எல்லோருக்கும் புரியும் வண்ணம் மிக மிக எளிமையாக விளக்கி விட்டீர்கள். சரக்கோடு சரக்காக, நாடாளுமன்ற உறுப்பினர்கள் காசு வாங்கிக் கொண்டு, அதற்காகப் பரிந்து பேசும் 'படித்த பரத்தையர்' உலகெங்கும் நிரம்பியிருக்கிறார்கள் என்பதை எவ்வளவு நளினமாகச் சொல்லி விட்டீர்கள்!

இஸ்லாமிய மதவெறியால் மக்கள் எப்படி மடிகிறார்களோ, அப்படி இந்துமத வெறியர்களும் எதிர்காலத்தில் உலகைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதை வெளிப்படையாகவே சொல்லி விட்டீர்கள். இது இந்துமத வெறியர்களுக்கு இப்போதைக்குப் புரியாது.

ஆப்கானிஸ்தானம் நடந்து கொள்வது - பின்லேடன் அமெரிக்காவைத் தாக்கியது - பயங்கரவாதம் என்றால், பாபர் மசூதியை இடித்துத் தகர்த்தது பயங்கரவாதமில்லையா?

உலகத்தையே கைப்பிடிக்குள் வைத்திருக்கத் துடிக்கும் அமெரிக்காவுக்குச் சரியான சவுக்கடி கொடுத்து விட்டீர்கள்.

சங்கமித்ராவும் இதே கருத்தை வலியுறுத்தி அவருக்கே உரிய நையாண்டித் தனத்தோடு விளாசியிருக்கிறார்.

வாழ்க சிந்தனையாளன் பணி.

மருத்துவர் அரி. காசி. பிச்சை, திருமானூர்

உயர்திரு ஐயா அவர்களுக்கு, வணக்கம்!

செப்டம்பர் இதழில் வெளியான தங்களின் ''தமிழ் நாட்டு அரசு'' வரவு செலவுத் திட்டம் பற்றிய வரைவும்.

தந்தை பெரியாரின் ''தமிழ்நாடு தமிழருக்கே'' என்கிற முழக்கமும்

திரு து. தில்லைவனம் அவர்களின் ''உழுதொழிலா அழுதொழிலா?'' என்ற மரவள்ளிக் கிழங்கு விவசாயிகளின் வேதனைகளைத் தெளிவுபடச் சொல்லியிருப்பதும் வரவேற்கத் தக்கவை.

மேலும் எழுதுங்கள்; எழுதுங்கள். தூங்கிக் கொண்டிருக்கும் ''தமிழன்'' அப்போதாவது எழுந்திருப்பானா என்று வேதனையோடு பார்க்கிறேன்.

நன்றியுடன்

மா. முருகன், சென்னை 83.

படிப்பகம்

www.padippakam.com



# அறிவியல் தமிழின் தேவை

மருத்துவர் சு.நரேந்திரன்

*(ஆகஸ்டு இதழின் தொடர்ச்சி)*

முன் சொன்னவை மத அடிப்படையிலான கட்டமைப்புகளுள்ளும், கருத்தமைவுக்குள்ளும் அமைந்திருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த காலகட்டத்திற்குப் பிறகு 'திட்டமிட்டபள்ளிகள்' என்ற நிலையில் ஜனநாயகப்படுத்தப்பட்ட கல்விமுறை உருவெடுத்தது. இதுவே பரந்த அளவிலான வீச்சோடு கல்வியின் கனபரிமாணத்தை வளர்த்தெடுக்கும் உந்து சக்தியாக இன்றுவரை இருந்து வருகிறது.

## பள்ளிகளின் தோற்றம்

1822 இல் சர் தாமஸ் மன்றோ தன் தலைமையில் 'பொதுக்கல்விக்குழு' ஒன்றைத் தொடங்கி அதன் கணக்கெடுப்பில் கிடைத்த செய்திகளின்படி ஆசிரியர்களை உருவாக்கிப் பள்ளிகள் எப்படி நடைபெற வேண்டும் என்பதற்கான திட்டத்தை உருவாக்கினார். இக்காலத்தில் ஆடவர்களே கல்வி பயின்று வந்த நிலை நிலவியது. 1832ஆம் ஆண்டில் தான் முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை தமிழ் பயிற்று மொழியானது. இதனால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்த அறிவியல் நூல்களைத் தமிழில் மொழியாக்கம் செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. 1935 ஆம் ஆண்டு மெக்காலே பிரபு இந்தியக்கல்வி பற்றிய தனது அறிக்கையில் ஆங்கில மொழி பயிற்று மொழியாக் இருத்தல் வேண்டும் என்று குறிப்பிட்டிருந்ததற்கிணங்க முடிவெடுக்கப் பட்டது. இந்த முடிவு மேற் கொள்ளப்பட்டதற்கான பின்னணி இங்குக் கருத்தில் கொள்ளத் தக்கது. கல்கத்தா மாகாணம் கல்விக்கான நிதி உதவியை அளித்த நிலையில் ''சமஸ்கிருத மொழிக் கல்விக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும்'' என்று பிராமணர்களும் - அரபுமொழிக் கல்விக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும் என்று இஸ்லாமியர்களும் வாதிட்ட நிலையில் சமூக சீர்திருத்த வாதியான திரு.ராஜாராம் மோகன்ராய். 'இந்தியர்கள் அனைவருக்கும் ஆங்கிலமே போதிக்கப்பட வேண்டும்' என்ற கோரிக்கையை முன்வைத்தார். இந்நிலையில் தான் ஒரு பொதுமொழியான ஆங்கிலமே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்று மெக்காலே பரிந்துரை அறிக்கை கொடுத்தார். இதைத் தொடர்ந்து தான் ஒருபுறம் ஆங்கிலப் பயிற்று மொழியாக்கல் வளர்ச்சியும், மறுபுறம் நாட்டுப்புறக் கல்விமுறை பெருமளவில் நசிந்த நிகழ்வும் நிகழ்ந்தன என்பது கவனத்தில் கொள்ளத்தக்க செய்தியாகும்.

## தமிழின் முதல் அறிவியல் நூல்

இரேனியசு பாதிரியார் 1832ல் வெளியிட்ட 'பூமி சாஸ்திரம்' எனும் நூலே முதல் அறிவியல் தமிழ் நூல் எனக்கருதப்படுகிறது. இந்த நூலைத் தான் தமிழில் எழுதியதற்கான காரணத்தைக் கூறுகையில் 'தமிழர்களுக்கு அறிவுண்டாகும்படி' என்ற தொடரைப் பயன்படுத்தியுள்ளார். இதன் பிறகு ஆங்கில மருத்துவத்தைத் தமிழில் வடித்து யாழ்ப்பாணத் தமிழர்கள் பலரை மருத்துவர் களாக்கியவர் டாக்டர் சாமுவேல் ஃபிஷ்கிறீன் என்ற பாதிரியாராவார். இவர் தம்மாணவர்களின் உதவியுடன் 4650 பக்கங்கள் கொண்ட நூல்களை எழுதியுள்ளார். அவை

| | |
|---|---|
| 'கல்வி கற்றரின் அங்காதிபாதம், சுகரணவாதம் உடற்பாலனம்' | 1852, 1857 |
| யோன்சயின் 'பிரசவ வைத்தியம்' | 1857 |
| துருவிதரின் 'இரண வைத்தியம்' | 1867 |
| கிரேயின் 'அங்காதிபாதம்' | 1872 |
| கூப்பரின் 'வைத்தியாகரம்' | 1872 |
| வெல்சின் 'கெமிஸ்தம்' | 1875 |
| டால்தனின் 'மனுஷ சுகரணம்' | 1883 |
| வாறிங்கின் 'சிகிச்சா வாகடம்' | 1884 |
| Pharmacopoeia of India | 1888 |
| மனுஷ சுகரண கலைச் சொற்கள் | 1872 |
| அருஞ்சொல்லகராதி | 1875 |

'1893ல் வட்டார மொழிக் கொள்கை' அரசால் வகுக்கப்பட்ட பின்னர் அந்தந்த வட்டார மொழிகளில் நூல்கள் மிகுதியாக உருவாகத் தொடங்கின. பாலகணிதம் (1849) இலங்கை, இயற்கணிதம் Algebra (1855)சரீர வினா விடை (1860), வான சாஸ்திரம் (1861), சித்தாந்த சஸ்கிரகம்(1868) ஆயுர்வேத கிரந்தம் சட்டம் (1879) இந்து தேசத்துக் கால்நடைக்காரர் புஸ்தகம்

படிப்பகம்

www.padippakam.com



*(1885)* சேத்திர கணித பால போதினி Geometry *(1901)* தேக தத்துவ சாத்திரம் *(1901)* போன்ற நூல்கள் வெளிவந்து தமிழில் அறிவியலைச் சொல்ல முடியும் எழுத முடியும்- என்பதற்கான முனைப்பை முடுக்கி விட்டன. இவைகளை அடிப்படையாகக் கொண்டு *1706 - 1868* ஆம் ஆண்டுவரை *4200* வெளியீடுகளைக் கொண்ட நூலடைவு ஒன்றை ஜான்முர்டாக் என்பார் தொகுத்தளித்தார். இந்த நூலடைவில் வகுப்பு 'டி' எனும் பிரிவில் 'இயற்கை அறிவியல்' என்னும் தலைப்பில் அறிவியல் நூல் வெளியீடு பற்றி மதிப்பிடும் போது, 'தமிழர்களை மட்டும் நோக்கினால் அறிவியல் செய்திகளைத் தாங்கியுள்ள நூல்கள் ஏதுமில்லை' என்று குறிப்பிடுகிறார்.

மேலும், அறிவியல் செய்திகளைத் தாங்கி வெளியான தமிழ் நூல்கள் பெரும்பாலும் ஐரோப்பியரால் அல்லது அவர்களின் மேற் பார்வையில் தயாரிக்கப்பட்டதாகவும் குறிப்பிடு கிறார். ஆகவே, சுய ஆசிரியர் படைப்பாக இல்லாமல் முதலில் மொழி பெயர்ப்பாகவே அமைந்திருந்த நிலையை அவதானிக்க முடிகிறது. அத்தோடு இந்திய மதக்கோட்பாடுகளை முறியடிக்கவே பாதிரியார்களால் அவை அறிவியல் நூல்களாகப் படைக்கப்பட்டன; பயன்பட்டன. மேலும், இதன் மூலம் இந்தியாவின் தாழ்ச்சிக்கும், பிற்போக்குத் தனமான வாழ்வுமுறைகளுக்கும் மிக முக்கிய காரணம் இந்து மதமே என நிறுவுவதில் பாதிரியார்கள் முனைப்பாக இருந்தனர் என ரொமிலா தாப்பர் கூறிகிறார்.

புத்தமதத்தின் பிரபஞ்சக் கொள்கை என்பது மதத்துடன் பின்னிப் பிணைந்துள்ளது. 'வாதத்தின் மூலமும், ஒன்றை மறுப்பதின் மூலமும் மற்றதைத் தவறு என்று நிறுவ முடியும்'' எனவும் ஜான் முர்டாக் கூறுகிறார். இக்கருத்தைத் தவறு என நவீன வானவியல் கொள்கைகள் மூலம் உறுதிப்படுத்தி புத்தமதத்தை முறியடிக்க இவர் முயலுகிறார். எனவே *1832* இல் வெளியான பூமிசாஸ்திரத் திலிருந்து *1860* வரை தமிழில் அறிவியல் நூல்களைப் படைத்தவர்கள் பாதிரியார்களே என்பதும், இந்நூல்கள் கடவுளின் சித்தாந்தத்தை அறியும் ஒரு வழிமுறை அறிவியல் என்பதும் விளக்கமாக உறுதியாகிறது. ஆக, ஒட்டு மொத்தமாக நோக்கின் கடவுளின் பெருமையை விளக்கும் ஓர் மார்க்கமாக இக்கால கட்டத்தில் புத்தகங்கள் காணப்பட்டன என்பதும், இந்தப் பின்னணியில் பொய்யான மதத்தையும் , மெய்யான கடவுளையும் சுட்டிக் காட்டுகின்ற பாதிரியார்களின் பணியின் ஓர் அங்கமாக அறிவியல் நூல் வெளியீடுகள் அமைந்திருந்தன என்பதும் குறிக்கத்தக்க செய்தி களாகும்.

### 1832 இல் தமிழ் வழிக்கல்வி

ஆங்கிலேய அரசு *1830*இல் தாய்மொழியில் கல்வி மற்றும் கல்வி பரப்பல் என்ற கொள்கையை அறிவித்தது. இதைத்தொடர்ந்து தமிழகத்தில் அரசுப் பள்ளிகள் தொடங்கப்பட்டன. பல பிரிவினரும் கல்வி கற்கும் வாய்ப்பு அதிகரித்தது. இக்கால கட்டத்திலேயே தமிழ் மக்களும் அறிவியல் நூல்களை எழுத முற்படும் போக்கு மலர்ந்தது.

சிப்பாய்க் கலகத்திற்குப் பிறகு கிழக்கிந்தியக் கம்பெனியிடமிருந்து இங்கிலாந்து அரச ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர் 1867இல் இலக்கிய, அறிவியல் துறைகளில் ஏற்பட்டிருந்த முன்னேற்றம் குறித்து ஆராய இந்தியர்களின் வேண்டுகோள் விண்ணப்பத்தைச் சென்னை மாகாண அரசுக்கு அனுப்பி வைத்து நடவடிக்கை எடுக்கவும் ஆணை பிறப்பித்தது. அதன்படி சென்னையில் ''மதராஸ் ஸ்கூல் புக் அண்டு வர்னாகுலர் லிட்ரேச்சர் சொசைட்டி'' யை நிறுவி மலிவு விலையில் பள்ளிப் பாடநூல்களும், அறிவியல் இலக்கிய நூல்களும் வெளிவரலாயின.

### தாய்மொழிக் கல்வி என்றாலும் ஆங்கிலத்திற்கே முதலிடம்

இக்கால கட்டத்தில் அமைக்கப்பட்ட சர் சார்லஸ் உட்*(1854)* ஹண்ட்டர் *(1882)* குழுக்களின் பரிந்துரை களும் பொதுமக்களுக்கான தொடக்கக்கல்வி தாய்மொழி வழியே அளிக்கப்பட வேண்டும் என்றே கூறுகின்றன. இருப்பினும், ஆங்கில மொழியே பயிற்று மொழியாக அனைத்து நிலையிலும் நாட்டில் நடைமுறைப் படுத்தப்பட்டது. இதன்படி ஆங்கிலக் கல்வி பெற்ற ஒரு சிறு பிரிவினர் தாங்கள் மற்றவர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் என்ற மனப்போக்கு உடையவ ராயினர். இதனால் அவர்கள் பொதுமக்களிடமிருந்து விலகியே வாழத் தொடங்கினர். தொடக்கப் பள்ளிப் பிரிவுகளில் ஒன்றான மாநிலப் பள்ளிகளில் முதலிரண்டு வகுப்புகளில் மட்டும் தமிழ் பயிற்று மொழியாகவும் மற்ற வகுப்புகளில் 9 ஆம் வகுப்பு வரை ஆங்கிலமே பயிற்று மொழியாகவும் இருந்தன. கோட்டப் பள்ளிகளிலும் ஆங்கிலமே பயிற்று மொழியாக இருந்தது. நாள்தோறும் முதல் இரண்டு மணி நேரம் ஆங்கிலம் கட்டாயமாகக் கற்பிக்கப் பட்டது. ஆனால் அரசுப்பள்ளி, வாரியப் பள்ளி, ஆகியவற்றில் மூன்றாம் பாரம் வரை வேளாண்மை, எண் கணிதம் ஆகியவை தமிழில் நடத்தப்பட்டன. *(தொடரும்)*

படிப்பகம்

www.padippakam.com



மன்னார்சாமியின் மரத்தடி மன்றத்தில் இந்த மாத அரசியல் 8

# பகாசுரப் பயங்கரவாதம்

- ஓலைப்பட்டி கந்தையா

*(மன்னார் சாமி - மலர் ஆஸ்பத்திரி எதிரில் மரத்தடியில் செருப்புத் தைக்கிறவர். மலைக்குடி மருதமுத்து - மலர் ஆஸ்பத்திரிக்கு இதய அறுவைச் சிகிச்சைக்கு என்று 5 ஏக்கர் நிலத்தை விற்று விட்டு வந்தவர். இன்று மகள் வீடும் மரத்தடியும் என்று ஆகிவிட்டவர். ஏ.ஜி. ஆபீஸ் வெங்கடேசய்யர் - பதவி ஓய்வு பெற்ற அக்கவுண்டன்ட்)*

வெங்கடேசய்யர்: எப்படிய்யா, அமெரிக்காகாரன் மூக்கு உடைபட்டது?

மருதமுத்து : கண்ட இடத்தில் மூக்கை நுழைச்சா, குத்து வாங்கவும் உதைபடவும் தயாராத்தானே இருக்கனும்?

மன்னார்சாமி: சரியாச் சொன்னீங்கசாமி! உலகத்திலே எங்கே யாருக்குப் பிரச்சினை உண்டு பண்ணலாம்னு - அமெரிக்காகாரனுக்கு மூக்கிலே வேர்க்கும் போலிருக்கு.

வெங்கடேசய்யர்: பின்லேடனைப் பிடிக்கிற விஷயத்தில் அமெரிக்கா - தலையைச் சுற்றி மூக்கைத் தொட வேண்டி இருக்குய்யா. ஏன் தெரியுமா? கொடி கட்டிப் பறந்த இங்கிலீஷ் சாம்ராஜ்யம் முடிஞ்சு போச்சுன்னு இந்த மடையன்களுக்குத் தெரியலை. பின்லேடன் - பேசறதும், செய்தி அனுப்பறதும் - அரபி, பார்சி, புஷ்டுன், உருது மொழிகளில். அமெரிக்க சி.அய்.ஏ-விலும், எஃப்.பி.அய்-லும் இந்த மொழி தெரிஞ்சவா - பத்துப் பேர் கூட இல்லையாம். 60 தேசங்களில் பின்லேடன் ஆட்கள் செய்தி பரிமாற்றம் செய்யிறப்போ - உளவு பாக்குறதுக்கு - சி.அய்.ஏ விலே ஆறு பேரும் - சி.பி.அய்-யில் 10 பேரும்தான் இருக்கானாம்!

மருதமுத்து: இன்னிக்கு மூக்கால அழுது என்ன செய்ய? இந்த உளவு - ஊடுருவல் சமாச்சாரத்திலே - அமெரிக்கப் பயல்கள் - இந்திய பிராமணன் கிட்டே பாடம் கத்துக்கணும். மூக்கில் விரல் வைக்க வேண்டிய அதிசயமா இருக்கே! தமிழ் பிராமணன் மராட்டி பிராமணன், தெலுங்கு பிராமணன், வங்காளி பிராமணன் அடடா! அங்கங்கே - நான் தமிழ்க்காரன் தான் - தெலுங்குக்காரன் தான்னு உள்ளாட்சி அரசியல்! காஷ்மீர் பாப்பானுக்குத் தேள் கொட்டினா - கன்னியாகுமரி பாப்பான் கூப்பாடு போடுவான். தேசிய அரசியல் இன்னொரு பக்கம் தலைவனுக்கு - பூ உனக்கில்லைங்கற சாமர்த்தியம் பிராமணனுக்குத்தான் வரும்.

வந்தவர்: பிராமணன் - பிராமணன்னு ஏன் மூக்கு மேலே கோபப்படறேள்?

சக்கிலி 4 விழுக்காடும் - யாதவர் 4 விழுக்காடு - இந்தியா பூராவும் இருக்காளே - பிராமணா மாதிரி - ஒத்துமையா அரசில் பண்றதுதானே!

வெங்கடேசய்யர்: மூக்காலேயே ஆளைத் தூக்கி எறியும் சக்தி - யானைக்கு மட்டும்தான் உண்டு. மூக்கு பிடிக்க சாப்பிடறது - மூக்குக் கண்ணாடிக்கு மேலால பாக்குறது - மொத்த சமூகத்துக்கும் மூக்கணாங்கயிறு போட்டு மூக்கைப் பிடிச்சு இமுத்திண்டு போறது - இதெல்லாம் யானைக்கு இருக்கிற மாதிரி பிராமணனுக்கு மட்டும் உள்ள சாமர்த்தியம்.

வந்தவர்: சரியாச் சொன்னேள்! அந்தக் காலத்திலே - உடம்பெல்லாம் மூளை - ராஜாஜியை - கார்டூனில் - மூக்கன் மாதிரிதான் போடுவா. விகடன்ல வந்த துப்பறியும் சாம்புக்குக் கூட - மூக்குதான் பிரதானம்! ஏன் இன்னிக்கு அரசியல்லேயே பாருங்களேன். உலக அரங்கில் இந்தியப் பிரதிநிதி - டிகாலே மூக்கன் - ஜஸ்வந்த் சிங் சாதனைகளை! கந்தகார் விமானக் கடத்தலில் ஒரே ஒரு தீவிரவாதியைத் திருப்பிக் குடுத்துட்டு - 155 ஏர் இந்தியா பயணிகளைக் காப்பாத்தின அசகாயச் சூரனாச்சே!

மருதமுத்து: மெச்சிக்கணும். அந்த அரவான் மூக்கன் விடுவிச்ச தீவிரவாதி அஸார்தான். காஷ்மீர் அசம்பிளியை 1-10-2001-ல் டாட்டா சுமோ குண்டுவெச்சு உடைச்சவன். ஜெய்ஷ்-ஈ-முகமது (அல்லாவின் சேனை) அவனுடையதுதான். 38 பேர் சாவு - 80 பேர் காயம். ஜஸ்வந்த்சிங் டிப்ளமசி நாறினது இப்படி!

மன்னார்சாமி: நாங்க கூட ஒரு காலத்திலே தீவிரவாதியாத்தான் இருந்தோம் சாமி. அருவா, கோடாலி சகிதம் அக்கிரகாரத்தை லுமிச்சி - சமத்துவம் கொண்டு வந்துடறதா போனாங்களாம் எங்காளுக அப்பிடி ஒரு கதை. அக்கிரகார நுழைவாயிலில் - மூக்கும் முழியுமா இருந்த ஒரு பிராமணப் பொண்ணு - எங்க தலைவனைப் பாத்து ‘இதுக்குக் கத்தியும் கோடாலியும் எதுக்கு - உன் நாக்காலே மூக்கைத் தொடு; நானே உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேன். சம்மந்தம் போட்டாச்சின்னா அப்பறம் சமத்துவம் தானேன்னாளாம். நீ மட்டுமில்ல உங்கள்லே - யார் செஞ்சாலும் சரின்னாளாம். அன்னிக்கு ஆரம்பிச்சதுதான் பிராமணப் பொண்ணுக்கு நாக்கு நீட்டி அலைஞ்சது. இன்னிக்கும் எங்காளுங்க - ஒன்றிரண்டு - அய்ஏஎஸ் - அய்.பி.எஸ் - வரவனுக - இந்தப் புதை மண்ணுலதான் சிக்கிக்கிறானுவ.

வெங்கடேசய்யர்: அடப்பாவி! சமைஞ்சா தெரியும் சக்கிலிச்சி அழகுன்னு - நாங்க உங்க பொண்ணுங்களுக்கு அலையறமேய்யா!

படிப்பகம்

www.padippakam.com



**மருதமுத்து:** தூத்தூ! பன்னி மூக்கை விடைச்சி கிட்டு மந்தைக்கு போன கதையா போகாதீர் - அரசியலைச் சொல்லும்.

**வெங்கடேசய்யர்:** விலாசராவ் தேஷ்முக் - மகாராஷ்டிராவும், கிருஷ்ணா - கர்நாடகாவும் 2-வருடம் ஆட்சி நடத்திபுட்டதைப் பெரிய பெரிய விளம்பரமா போட்டிருக்கா சாதனை என்னன்னு பேப்பர்காரன் .கேட்கிறான். விலாசராவு - என்ன விளாசினார் தெரியுமா? இரண்டு வருடம் ஆட்சியில் இருந்ததே சாதனைதான்னுட்டார்!

**மன்னார்சாமி:** *(செருப்பைத் தரையில் அடித்து)* சபாஷ்சாமி! இருக்காதா பின்னே - வாஜ்பேயி கதையே தள்ளாட்டமா இருக்கச்சே!

**மருதமுத்து:** தள்ளாட்டும் - தருமாத்தம் எல்லாம் போறதுக்குதான் - மீண்டும் ஜியார்ஜ் பெர்னாண்டசைக் கொண்டாந்துட்டாரே!

**வெங்கடேசய்யர்:** தேசிய அவமானம் - என்கிறார் - சோனியா, பெர்ணான்டஸ் வந்ததை! அவருக்கு என்ன தெரியும் - பூணூல் பாசம்! பெர்ணான்டஸ் ஒரு கன்னட பிராமண - கன்வர்ட்-ங்கறது நினைப்பிருக்கட்டும்.

**மருதமுத்து:** டெஹல்கா.டாட்.காம்-காரன், ஒரே குத்தில் உன்ன மூக்கை உடைச்சாக் கூட - பிராமண மூக்கானா - ஒட்டிக்குதே!

**வெங்கடேசய்யர்:** மூக்கறையன் மாதிரி முனகாதீர். மதுரை மீனாட்சி மூக்கு பிளாக் - முப்பது கிலோ மீட்டர் டால் அடிக்குமாம். பிராமண மவுசும் அப்படித்தான் மீனாட்சி மூக்குத்தியை ஆகாசத்தில் எறிஞ்சப்போ - அமாவாசையா இருந்தும் கூட மூக்குத்தி நிலவாயிருச்சாம். வாஜ்பேயி எஸ்கிமோ மாதிரி - பெர்ணான்டஸுக்கு - ஒரு மூக்கு முத்தம் கொடுத்தா வெள்ளி மூக்கு குதிரை கூட நல்ல மூக்கு குதிரை ஆயிடும். இனிமே பாருமே - இந்தியாவுடைய போர் கர்ஜனையை!

**மருதமுத்து:** கிழிச்சார்! மூக்குக்கும் கீழே நடக்கிற சங்கதி தெரியாம கார்கில் வரை ஊடுருவல் காரர்களை உட்டுட்டு - ஆயிரக்கணக்கில் இந்திய வீரர்களைச் சென்ற ஆண்டு சாகக் கொடுத்தவர் தானே இந்த பெர்னான்டஸ்!

**மன்னார்சாமி:** தமிழ்நாட்டு அரசிலேயும் கொஞ்சம் மூக்கை நுழைங்களேன் சாமி!

**வெங்கடேசய்யர்:** மூக்கு உத்தியோகம்னே - டீ கம்பெனி - சென்ட் கம்பெனியில் வேலை இருக்காம். தமிழக அரசியலில் - எனக்கும் ஒரு மோப்பம் பிடிக்கும் உத்தியோகம் தரலாம். மோப்பம் பிடிச்ச செய்தி ஒன்னு சொல்றேன். உள்ளாட்சித் தேர்தலில் அஇஅதிமுக தான் - அமோக வெற்றி அடையப் போறது. வடமாவட்டங்களில் அம்மாவே பாத்துக்கிறார். தென் மாவட்டங்களுக்கு 'ஸ்பெஷல் ஃபிளைட்டில் ஓ.பன்னீர்செல்வம்'. அஇஅதிமுக மொழியில் ஸ்பெஷல் ஃபிளைட்டுன்னாலே - சூட்கேஸ் போதுவுதுன்னு அர்த்தம். 50 சூட்கேசுடன் அம்மா பிளைட் - நரசிம்மராவை பவுண்டரி அடிச்சது நினைவிருக்கா?

**மருதமுத்து:** முன்னேல்லாம் - மூக்கைச் சொரிந்தால் - ஊமையன்னு அர்த்தம். இப்ப மூக்கைச் சொரிந்தால் - முதலமைச்சர் இனி ஓ! பன்னீர்செல்வம் கிறதை - ஓகோ! பன்னீர்செல்வம்னு கூடச் சொல்ல லாம். கையால மூக்கைத் தொட்டா - அவ்வளவு பொருள் இருக்கு.

**மன்னார்சாமி:** உள்ளாட்சித் தேர்தல் வன்முறை களைப் பார்த்து - கிளர்ச்சி செய்து உயிர்த் தியாகம் செய்யப் போறேன்கிறார்ங்கோ - கோபால் புரத்தார்!

**வெங்கடேசய்யர்:** செயலலிதா - எத்தனையோ அவமானங்களைப் பொறுமையா சகிச்சுக்கிட்டார். ஆனா, கருணாநிதி? முனுக்குன்னா - மூக்கை சிந்து றாரே! 75 பேர் செத்தது போதாதுடா பாவிகளாங்கிறார். தமிழனுக்குத் தான் உசிரு மசிருக்கு சமமாச்சே! இன்னும் ஒரு ஆயிரம் பேர் தலைவரின் உயிர்த் தியாகப் பேச்சுக்கு பலியாகலாம்.

**மன்னார்சாமி:** ஒப்புக்கு அழுதவ மூக்கை சிந்தி ஒப்படியா மேல போட்டாளாம்! *(எல்லாரும் சிரிக்கிறார்கள்.)*

**மருதமுத்து:** இந்திய அரசியலை மூக்கைப் பிடித்து ஆட்ட எத்தனையோ வாய்ப்பு - கருணாநிதிக்கு வந்தது. உண்மையில் பெரியார் அரசியல்தான் - ஆர்.எஸ்.எஸ் - அரசியலுக்கு மாற்றாக அகில இந்திய அளவில் வந்திருக்கணும். பிறவிக் கோழையும் - சுயநலவாதியுமான கருணாநிதி முன் நின்றதால் - திராவிட அரசியல் - மூக்கறுபட்ட தாடகை கதியாகிவிட்டது. கையேந்தும் கபோதியாகக் கருணாநிதி நிற்கிறார்.

**வெங்கடேசய்யர்:** புரிஞ்சுகிட்டீரா! பிராமணனை யாராலும் வெல்ல முடியாது! நய்யோ - நைய் - பிய்யோ பிய்-என்று புலம்பி, எழுதி அழுது - ரவீந்திரநாத் தாகூருக்கு முன்னொரு காலத்தில் ஒரு நோபல் பரிசு வாங்கினார். இப்ப நைபாலுக்கு ஒரு நோபல் பரிசு! இவரும் பிராமணர்தான்!

**மருதமுத்து:** ஆனா சனாதனச் சவுண்டி இல்லை; பஞ்சாபி முஸ்லிமைக் கல்யாணம் செய்து கொண்ட மனிதாபிமானப் பிராமணர். ,நைபாலின் தாத்தா கொத்தடிமையா - திரினிதாத் - கரும்புத் தோட்டத்துக் கூலி வேலைக்குப் போனாராம். அப்பல்லாம் பிராமணக் குடுமி - இருக்கிற இடம் தெரியாம அடங்கிக் கிடந்திச்சே! இன்னிக்கு நோபல் பரிசு என்றவுடனே - குடுமி - குடுமின்னு குதிக்கிறாரே!

**வெங்கடேசய்யர்:** ஒவ்வொரு பிராமணனும் - பிராமண சமூகத்துக்கு ஒரு ஆயிரம் வாட் பல்ப். எந்த பல்ப் எப்ப வெளிச்சம் பாய்ச்சும்னு யாருக்கும் தெரியாது. பிராமண சமூகம் மட்டும் என்றும் வெளிச்சத்தில் இருக்கும்.

**மன்னார்சாமி:** பின்லேடன் ஜியார்ஜ்புஷ் மூக்கை உடைச்சது பெரிசில்ல சாமி. 3 சதவீதப் பார்ப்பனர்கள் 97 சதவீத இந்தியர்களின் மூக்கை உடைச்சு மூளியாக்கி மூலையில் மூவாயிரம் வருடமா கிடத்தியிருக் கீங்களே - அதுதான் பயங்கரவாதத்தில் பகாசுரப் பயங்கரவாதம்!

இக்கட்டுரையின் மூக்கு மொழிகளுக்கு நன்றி: கதை சொல்லி சிற்றிதழ், 0-4 அரசு குடியிருப்பு, லாஸ்பேட்டை, புதுவை-8).

படிப்பகம்

www.padippakam.com



## நூல் அறிமுகம்

### உனக்காகப் பாடுகிறேன் (கவிதைகள்)

- உதயை மு. வீரையன்

எழுச்சி மிக்கக் கவிதைகளாலும் உணர்வூட்டும் உரைநடையாலும் தமிழினத்தின் உயர்வெண்ணி வாழ்ந்து வரும் உரத்த சிந்தனையாளர், பொன்னி வள நாடு ஈந்த கன்னித் தமிழ்க் கவிஞர் உதயை மு. வீரையன். சிறுகதை, நாவல், சிறுவர் நூல்கள் எனப் பல தடங்களில் கால் பதித்து மக்கள் இலக்கியம் படைத்து வரும் பாவலரின் மூன்றாவது கவிதைத் தொகுப்பு நூல் இதுவாகும்.

அறியாமை நோயை
அடியோடு போக்கும்
அவரே ஓர் கசப்பு மருந்து
புரியாதவர்க்கும்
புதிராக வாழ்ந்து
புதுமைக்கு வைத்த விருந்து

எனத் தந்தை பெரியாரைப் பாடுவது தொடங்கித் தமிழ், தமிழர், தமிழ்நாடு என விரிந்து இந்நூலில் உள்ள அத்தனைப் பாடல்களும் மானுடம் முழுமைக்குமான விடுதலைக் குரலாய் ஒலிக்கின்றன. வெளியீடு: மக்கள் பதிப்பகம், 31, வேங்கடேசன் தெரு, சேப்பாக்கம், சென்னை-5. விலை: ரூ.40/

### பவளக்கொடி அல்லது குடும்ப வழக்கு (நாடகம்)

முனைவர் கரு. அழ.குணசேகரன்

நவீன நாடக மேடைகளில் நன்கு அறியப்பட்ட கலைஞர் பேராசிரியர் குணசேகரன் ஆவார். தலித் கலை விழாக்களில் இவருடைய பங்களிப்பு மிகவும் வலிமை வாய்ந்ததாக இருந்து வருகிறது. சங்கரதாஸ் சுவாமிகளின் 'பவளக் கொடி' என்னும் புராண நாடகத்தைத் தற்கால சூழ்நிலைக்கேற்ப மாற்றி அமைத்து மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறார். ஏற்கெனவே வள்ளித் திருமணம், சத்தியசோதனை முதலிய நாடகங்களை இயற்றியுள்ள இவ்வாசிரியர் அந்நாடகங்களின் புராணப் பாத்திரங்கள் ஊடாகத் தற்காலத்தில் பெண்ணியச் சிந்தனைகளைப் பேச வைத்துள்ளார். அதே தன்மையில் இந்த நாடகமும் புராண உள்ளீடாக அமைந்த புரட்சிப் படைப்பாக விளங்குகிறது. விலை ரூ.30

### முஸ்லீம் தேசமும் எதிர்காலமும்

விக்டர்

இந்நூல் இலங்கை முஸ்லீம் மக்களின் அரசியல், கலாச்சாரப் புவியியலைச் சமூகப் பொருளாதாரப் பின்னணியில் ஆராய்கிறது. அம்மக்களின் பூர்வீகம், தனித்துவம், தெற்கு - வடகிழக்கு முஸ்லீம்களின் நிலை, கிழக்கில் முஸ்லீம்களிடையே தமிழீழ விடுதலைப் போராட்டம் ஏற்படுத்திய தாக்கங்கள் போன்ற பல முதன்மையான செய்திகளை இந்நூல் விரிவாகப் பேசுகிறது. இலங்கை முஸ்லீம்களின் நிலையை அறியும் வழியாகத் தமிழக முஸ்லீம்கள், எதிர்காலம் தங்களுக்கான அரசியலை வரையறுத்துக் கொள்ளவும் இந்த நூல் துணை செய்யலாம். மேலும் தமிழீழத்திலுள்ள தமிழ், முஸ்லீம் மக்களிடையே படிந்து போயுள்ள இடைவெளியையும் இது போக்கலாம். மிகக் கடுமையான ஆய்வு முயற்சியில் இந்நூல் வெளிவந்துள்ளது பாராட்டத்தக்கது. விலை: ரூ.70

### சனதரும போதினி

(தொகுப்பு: சுகன், ஷோபா சக்தி)

நூலின் பெயரே புதுமையாக உள்ளது. ஈழத்தில் தலித் விடுதலைக்காக சமூக நீதிப் போராளி யோவல் போல் அவர்கள் 1927 இல் வெளியிட்ட வார ஏட்டின் பெயர்தான் சனதரும போதினி. அப்பெயரைத் தாங்கி அடித்தட்டு மக்களின் உணர்வுகளை, அவர்களின் விடுதலைக்கான போர்க் குரலை வெளிப்படுத்தும் சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், நேர்காணல்கள் அடங்கிய சிறந்ததோர் தொகுப்பு நூல் இது. அச்சு அமைப்பில் மட்டுமல்ல உள்ளடக்கச் செய்திகளிலும் உயர்ந்து நிற்கிறது. விலை ரூ.100

மேற்காணும் மூன்று நூல்களும் வெளியீடு: அடையாளம், கருப்பூர் சாலை, புத்தாநத்தம் - 621 310.

### தமிழகத்தில் கல்வி

### வே. வசந்ததேவியுடன் உரையாடல்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தரும், சிறந்த கல்வியாளருமான முனைவர் வசந்தி தேவி அவர்களின் கல்விச் சிந்தனைகள் இந்நூலில் இடம் பெறுகின்றன. அவருடன் எழுத்தாளர் சுந்தரராமசாமி மற்றும் சிலர் நேர்காணல் செய்யும் போது வெளிப்பட்ட கருத்துகளான கல்விச் சீர்திருத்தம், தேர்வு முறைகளில் மாற்றம், பெண் கல்வியின் இன்றியமையாமை, ஆசிரியர்களின் கடமை உணர்வற்ற போக்கு போன்றவை இந்நூலில் பரவலாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. கல்வியைப் பரந்துபட்ட மக்களிடம் சேர்க்கும் உயரிய தொண்டை நூலாசிரியர் மிகுந்த ஈடுபாட்டுடன் செய்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. இடஒதுக்கீடு, தொழிற்சங்க உரிமைகள் போன்றவற்றில் இவருடைய கருத்துகள் முழு ஏற்புடையன அல்ல. கல்வித் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் கட்டாயம் இந்நூலை வாங்கிப்படிக்க வேண்டும். விலை ரூ.90. வெளியீடு: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, நாகர்கோயில் - 629 001.

- தமிழேந்தி

படிப்பகம்

www.padippakam.com



## சங்கரப்பல்கலைக் கழகத்தைத் தடை செய், சாதி வெறியன் சங்கராச்சாரியைக் கைது செய்,

### த.ஒ.வி.இ. நடத்திய மிதிவண்டிப் பேரணி-பொதுக்கூட்டம்

தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம் செப்டம்பர் 29, 30 நாள்களில் வேலூர் மாவட்டம் சோளிங்கபுரத்தில் தொடங்கி காஞ்சிபுரம் வரை சிறப்பான மிதிவண்டிப் பேரணியை நடத்தியது. செப். 29 காலை சோளிங்கபுரம் பேருந்து நிலையத்தில் மிகப் பெரிய பொதுக்கூட்டத்தில் க.முகிலன் தலைமை உரை ஆற்றினார். அன்று மாலை அரக்கோணத்தில் கரடிப்பட்டி கண்ணன் தலைமையில் பொதுக்கூட்டம் நடந்தது. இறைக் குருவனார், சொல்லாய் வறிஞர்அருளி, தக்கோலம் ரகு, இளங்கோ, தங்கவயல் வாணிதாசன் ஆகியோர் சிறப்புமிகு உரையாற்றினர். செப்.30 காலை அரக்கோணம் அம்மனூரில் தொடங்கிய மிதிவண்டிப் பேரணி மாலை காஞ்சி வந்தடைந்தது. இளங்கோவன் தலைமையில் நடந்த கண்டனப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் வாலாசா வல்லவன், தியாகு, பொழிலன், இறை பொற்கொடி உள்ளிட்டோர் உரையாற்றினர்.

### காஞ்சியில் தந்தை பெரியார் 123ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா - அரங்க. ஞானகிராமன் பொதுவாழ்வுப் பொன் விழா மலர் வெளியீட்டு விழா



தந்தை பெரியார் 123ஆம் பிறந்த நாள் விழாவும், திராவிடர் கழக மத்திய செயற்குழு உறுப்பினர் அரங்க. ஞானகிராமன் பொதுவாழ்வுப் பொன்விழா மலர் வெளியீட்டு விழாவும் காஞ்சிபுரம் காந்தி சாலை வன்னியர் திருமணக் கூடத்தில் 30.9.2001 மாலை 5 மணிக்கு நடைபெற்றது. செய்தி விளம்பரத்துறை அமைச்சர் எஸ்.எஸ். திருநாவுக்கரசு, முன்னாள் அமைச்சர் கா.ப. பட்டாபிராமன், மாவட்ட ஆட்சியர், மாவட்டகாவல் துறை கண்காணிப்பாளர் உள்ளிட்ட உயர் அலுவலர்களும் காஞ்சி அரிமா சங்கத்தினரும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மருத்துவர் விமுனா மூர்த்தி நிகழ்ச்சியை நெறிப்படுத்தினார். அரங்க ஞானகிராமன் மாவட்ட மருத்துவமனைக்குப் படுக்கை, மின் விசிறி உள்ளிட்ட பல பொருள்களை நன்கொடையாக வழங்கினார். ஈ.வெ.ரா. நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளைக்கு ரூபாய் அய்ந்து ஆயிரம் நன்கொடை வழங்கினார். பொது வாழ்வில் பொன்விழா கண்ட அரங்க சானகிராமன் அவர்களின் தொண்டினை மா.பெ.பொ.க. மகிழ்ந்து பாராட்டுகிறது.

### புதுக் கவிதைப் பூங்கா பத்தாம் ஆண்டுத் தொடக்க விழா

திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலத் துறையில் ஆராய்ச்சி மாணவராக உள்ள கவிஞர் அதங்கோடு அனிஷ்குமார் அவர்களால் நடத்தப்படும் மாணவர் இதழ் - 'புதுக் கவிதைப் பூங்கா'. இந்த இதழின் பத்தாம் ஆண்டுத் தொடக்க விழா 14.10.2001 ஞாயிறு அன்று காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை திருச்சி திருவரங்கம் செண்பகத் தமிழ் அரங்கில் நடைபெற்றது. கவியரங்கம், விவாத அரங்கம் (பாலியல் கல்வி) கவிஞர் அதங்கோடு அனிஷ்குமார் அவர்களின் 'புதியதோர் உலகு செய்வோம்' என்ற ஓரங்க நாடகமும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பேரா. ஐசக் அருமை ராஜன், இராச. இளங்கோவன், ர. இரவிச்சந்திரன், பேரா. பெரியசாமி, பி.இர.அரசெழிலன், நந்தவனம் சந்திரசேகரன், ஜெ. அன்பழகன் விஜய், திருச்சி. ந.கருணாகரன், கவிஞர் அதங்கோடு அனிஷ்குமார், வழக்கறிஞர் க. இராசவேலு, செண்பகவல்லி, முதலானோர் கலந்து பங்கு கொண்டனர். விழாவில் கல்லூரி மாணவ மாணவிகள், அரசு அலுவலர்கள், பேராசிரியர்கள், பார்வையாளர்களாகக் கலந்து கொண்டனர். வந்திருந்த அனைவர்க்கும் தேநீர், மதிய உணவு வழங்கப்பட்டது.

செய்தி: திருச்சி ந.கருணாகரன்

### வாழ்க்கைத் துணை தேவை

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஆர்.வி. நல்லதம்பி |
| வயது | : | 34 |
| பிரிவு | : | செங்குந்தர் |
| கல்வி | : | +2 , கம்ப்யூட்டர் |
| தொழில் | : | தனியார் அலுவலக நிர்வாகி |
| வருமானம் | : | மாதம் ரூ.4000 |
| எதிர்பார்ப்பு | : | 10 ஆம் வகுப்பு, +2 |

சாதி மதம் தடையில்லை

தொடர்புக்கு: கவிஞர் தி.ர. விசயன்
164, முதன்மைச் சாலை, கிளையூர் - 605 753
திருக்கோவிலூர், விழுப்புரம் மாவட்டம்
தொலைபேசி : 53273

### 'இளமதி' பெயர் சூட்டு விழா

பல்லடம், அனுப்பப்பட்டி க.செல்வராஜ் - ப.கமலவேணி துணைவர்களின் இரண்டாம் மகவான பெண் குழந்தைக்கு 10.10.2001 இல், 'இளமதி' எனப் பெயர் சூட்டப்பட்டது. இதன் மகிழ்வாகச் 'சிந்தனையாளன்' வளர்ச்சி நிதி ரூ.100/- வழங்கப் பட்டது.

படிப்பகம்

www.padippakam.com

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி நவம்பர் - 2001

| பெயர் | ஊர் | ரூ.பை |
|---|---|---|
| டாக்டர் பெ. இளங்கோவன் | அரியலூர் | 200.00 |
| ச.நாத்திக நந்தனார் | வண்டலூர் | 100.00 |
| ஓர் அன்பர் | சென்னை | 50.00 |
| வ.அருவி, வ.அரிமா | சென்னை | 10.00 |
| சீ.இளமதி, சீ.அகிலா | சென்னை | 100.00 |
| முத்து அனபழகன | சீர்காழி | 10.00 |
| அழகு அனபழகன | சீர்காழி | 10.00 |
| அ. அறிவுக் கடல்- இராஜ்குமார் | சிதம்பரம் | 10.00 |
| கி.கலை | சோளிங்கபுரம் | 50.00 |
| க.குப்புசாமி | சோளிங்கபுரம் | 50.00 |
| ஜெ.அய்.ஏ.காந்தி | எறும்பி | 10.00 |
| வள்ளி விசயன் | திருக்கோவிலூர் | 20.00 |
| பகுத்தறிவன் | அரக்கோணம் | 25.00 |
| ந.அப்துல்ரகுமான் | சென்னை | 300.00 |
| சி.பி.ச. அறிவொளி | இரும்புலிக்குறிச்சி | 50.00 |
| நா.இளங்கோ | அரக்கோணம் | 100.00 |
| ந. கருணாகரன | திருச்சி | 25.00 |
| ப.ம.அதியமான் | திட்டக்குடி | 25.00 |
| ப.ம. மதிஒளி | திட்டக்குடி | 25.00 |
| மணிவெள்ளையன் | மலேசியா | 700.00 |
| ஓர் அன்பர் | | 50.00 |
| வய்.மு. கும்பலிங்கன் | கும்பகோணம் | 100.00 |
| ச.நாத்திக நந்தனார் | | 100.00 |
| இரா. செங்குட்டுவன் | ஆவடி | 50.00 |
| எஸ். போஸ் | ஆவடி | 30.00 |
| வி.ஆறுமுகம் | கீழையூர் | 20.00 |
| சுப்பிரமணி - கண்ணகி பெயர் சூட்டு | கீழ்பென்னாத்தூர் | 200.00 |
| இரா.குப்புசாமி | கரூர் | 1000.00 |
| பொ.செல்வன் மற்றும் மனைவி, மகன் | மயிலாப்பூர் | 300.00 |
| வீ. இராசாப்பிள்ளை | சிதம்பரம் | 100.00 |

### மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி

| | | |
|---|---|---|
| ந. அப்துல் ரகுமான் | சென்னை | 300.00 |
| க. முகிலன் | சோளிங்கபுரம் | 50.00 |
| சுகுணா - வடிவேலு | சென்னை | 10.00 |

### சு. பரிதா - ஆ. முனுசாமி வாழ்க்கை ஒப்பந்த விழா

சு.பரிதா - ஆ. முனுசாமி ஆகியோர் வாழ்க்கை ஒப்பந்த விழா திருப்பெரும்புதூர் ஜெயராம ரெட்டியார் திருமணக் கூடத்தில் 7.10.2001 ஞாயிறன்று தேவதத்தம் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. மணமகளின் தந்தையார் கெ.சுந்தரராசன் வரவேற்புரை நிகழ்த்தினார். வே.ஆனைமுத்து, சோ.மா. வேலாண்டி, தி.இரா. இரத்தினசாமி, சு.பாரதி, புலவர் பொ. இளஞ்சேரன், சிவப்பிரகாசம் ஆகியோர் வாழ்த்துரைத்தனர். விழாவின் மகிழ்வாகச் சிந்தனையாளன் வளர்ச்சி நிதி ரூ.200 வழங்கப்பட்டது

### 'அறிவன்' பெயர் சூட்டல்

திருவண்ணாமலை மாவட்ட மா.பெ.பொ.க. செயலாளர் பொ. சுப்பிரமணி - கண்ணகி துணைவர்களுக்கு, 18.10.1999 அன்று மகன் பிறந்தான். இவர்களின் செல்வனுக்கு, 'அறிவன்' என்னும் பெயரை, 18.10.2001 இல், மகவின் இரண்டாமாண்டு பிறந்த நாளன்று, வே.ஆனைமுத்து சூட்டினார். இதன் மகிழ்வாக 'சிந்தனையாளன்' வளர்ச்சிக்கு ரூ.200 - பெற்றோர் வழங்கினர்.

### அ.பிரபாகரன் நினைவேந்தல் படத்திறப்பு

தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் விழுப்புரம் மாவட்டத் துணைத் தலைவர் கள்ளக்குறிச்சி வெ.அமிர்தலிங்கம் மகன் அ.பிரபாகரன் (வயது 14) சாலை விபத்தில் இயற்கையெய்தியதை யொட்டி, அவரது படத்திறப்பு நிகழ்ச்சி 30.9.2001 ஞாயிறு காலை கள்ளிக்குறிச்சி நீலமங்கலம் சாலை, நரிக்குறவர் குடியிருப்பில் அரு.முத்தமிழடியான் தலைமை யில் நடைபெற்றது. எம்.இளங்கோவன், எஸ்.எஸ். மணியன், எஸ்.வாசுகி ஆகியோர் உரைக்குப் பின் தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் கோவை கு.இராமகிருட்டிணன் மறைந்த பிராபாகரன் படத்தை திறந்து வைத்து இரங்கல் உரையாற்றினார் வெ.அமிர்தலிங்கம் நன்றி கூறினார்.

### இராமாஞ்சியம்மாள் மறைவு

வேலூர் மாவட்டம் சோளிங்கபுரம் மா.பெ.பொ.க. தோழர் க.முகிலன் (எ) அ. கிருட்டிணன், அ. விநாயகம், அ. ஆதிசக்தி ஆகியோரின் தாயார் இராமாஞ்சியம்மாள் 7.10.2001 இல் மறைவுற்றார். 8.11.2001 அன்று அவரது உடல் எரியூட்டப்பட்டது. தோழர் வே.ஆனைமுத்து உள்ளிட்ட கட்சித் தோழர்கள் அந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். 14.10.2001 ஞாயிறு காலை அன்னாரின் நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. தோழர்கள் அ.கிருட்டிணன், தமிழேந்தி, அ.சி. துரைசாமி, பாரி தீத்தாண்டப்பட்டு மா.முருகேசன், வாலாசா வல்லவன் ஆகியோர் உரையாற்றிய பின் அ. விநாயகம் நன்றி கூறினார்.

### அக்டோபர் 2001 இதழில் பிழை - திருத்தம்

1. பக்கம் 3 இல் - பத்தி 2, வரி - 14 ''பெரியார் தொண்டு நிறுவனம்'' என்றும் - பிழை
   ''பெரியார் தொண்டு நிறுவனம்'' என்னும் - சரி
2. பக்கம் 7 இல் பத்தி 2, வரி 25 - பாக்கிஸ்தானுக்கு பரிநிலை - தவறு
   பாக்கிஸ்தானுக்குப் பரிந்து - சரி
3. பக்கம் 12இல் பத்தி 2, வரி 2 - டோக் அய்யம் இன அரசனுக்கு - பிழை
   டோக்ரா (Dogra) இன அரசனுக்கு - சரி
4. பின் அட்டை: தமிழேந்தி கவிதையின் இறுதி வரி ''ஏமாற்று ஒழியாமல் கதை தேறாது'' விடுபட்டுள்ளது.

இன்னும் சில பிழைகள் உள்ளன. வருந்துகிறோம். ஆசிரியர் குழு

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக வெளியிடுபவர், ஆசிரியர்: வே.ஆனைமுத்து, 19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம், சென்னை - 5. அச்சுக்கோப்பு: 'நம் பிராசஸ்', சென்னை-18. அச்சிட்டோர்: பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம், சென்னை-5. தொலைபேசி: 852 28 62


படிப்பகம்

www.padippakam.com

Licenced to post without prepayment WPP No. 344
Registrar of Newspapers of India under licence No. 24452 / 74. 'Sinthanaiyalan' TN/ Chief PMG/618/2001









# தமிழனே இது கேளாய்!

நாளும் நாளும் மதவெறிப் பார்ப்பான்
நல்ல மனங்களில் நஞ்சை விதைக்கிறான்
ஆளும் வாய்ப்பும் அடியாள் சேர்ப்பும்
அமைந்து போனதால் கலகம் விளைக்கிறான்
வாளின் திறத்தைச் சூழ்ச்சியால் வென்றவன்
வரலாற் றையே புரட்டித் திரிக்கிறான்
தேளின் கொடுக்கை நறுக்க வேண்டிய
தேவை மறந்தே திரிகிறாய் தமிழா!

சண்டித் தனம்செய முண்டி யடிக்கிறான்
தாசு மகாலை நெம்பி இடிக்கிறான்
சண்டைக் கோழியாய் வம்புக் கிழுக்கிறான்
சாயபு கிருத்துவன் வாழ்வைப் பழிக்கிறான்
வண்டி ஓண்டியாய்ப் புளுகி நடிக்கிறான்
வார்த்தையில் வன்மம் வீசி வெடிக்கிறான்
கண்ட கழுதைக்கும் இடங்கொடுத் தேநீ
கழிசடை யாக இழிகிறாய் தமிழா!

பாபர் மசூதி இடத்தில் மீண்டும்
பண்டாரப் பயல்களைக் கொண்டு நிறைக்கிறான்
பாட திட்டக் குழுவில் புகுந்து
பச்சைப் பொய்களால் சிண்டு முடிக்கிறான
பாரத தேசமாம்! இந்து ராஷ்ட்ரமாம்!
பார்க்கிறேன் ஒருகை என்று குதிக்கிறான்
படமெடுத் தாடும் பாம்பை நசுக்கும்
பதற்றம் இன்றியே கிடக்கிறாய் தமிழா!

இங்குள இராம கோபாலன் கண்களில்
இந்து முன்னணிக் கொழுப்புதான் மேயும்
தங்கும் விடுதியில் சூத்திரச் சாப்பாடு
சங்கர மடங்களோ தனியாகப் போடும்
தங்களின் தலைவர் பெரியாரே என்னும்
தலைவர் மனங்களோ வாக்குகள் தேடும்
பொங்கி எழுந்தே போராட வேண்டும்
பூச்சியாய் வாழ்ந்து சாகிறாய் தமிழா!

– 'தமிழேந்தி'

19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம், சென்னை-600 005. தொ.பே.எண். 852 28 62

படிப்பகம்